பிரதிபா பிரசுரம்



பாவை
உணர்த்தும் தத்துவங்கள்


நஜன்

திருப்பாவை

பாவை உணர்த்தும் தத்துவங்கள்

(திருப்பாவை—திருவெம்பாவை)

ஆசிரியர் :
எஸ். நடராஜன்
(நஜன்)



— பிரதிபா பிரசுரம் —

(பாவை மகாநாடுகள் வெள்ளி விழாவையொட்டி
வெளியிடப்படுகிறது)

வெளியிட்டோர் :
என். லலிதாம்பாள்

பிரதிபா பிரசுரம்

25, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை-600004.

 [விலை ரூ. 3-00

பாவை உணர்த்தும் தத்துவங்கள்
(Pavai Unarthum Thathuvangal)

முதல் பதிப்பு: 1975 டிசம்பர் (மார்கழித் திங்கள்)

விலை ரூ. 3-00 (தபால் செலவு தனி)

பொருளடக்கம்

பூங்குழலி அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-600014.

4-1

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம், காஞ்சீபுரம்

ஸ்ரீமுகம்



முகாம் :
காஞ்சிபுரம்.

தேதி :
3—11—1975.

பாரதம் எப்போதும் வளம் பெற்று வாழவும், உலகத்திலுள்ள எல்லா மக்களிடத்திலேயும் உலகத்திற்கே ஆதியான நமது அருட் பண்பை அன்புடன் பரப்பும் சக்தி ஏற்படுவதற்கும் எல்லாவற்றிற்கும் முதலான இறைவனின் அருளை நாம் ஒவ்வொருவரும் பெற ஒரு சிறிது நேரமாவது ஈசனின் பணிகளில் ஈடுபடவேண்டும்.

சிவனடியார்களும், ஆழ்வார்களும் அருளியிருக்கும் அமுதமான அருட்பாக்களையும், அருட்சக்தியான ஆண்டவனின் அருளைப் பெற்று மனச்சாந்தியுடன் பெருவாழ்வு வாழ வைக்கக்கூடிய ஆகமங்களையும் ரக்ஷித்து வளர்ப்பதே ஈசனின் பணிகளில் இன்று முதன்மையான பணி.

குழந்தைகளுக்கு நல்ல குணம் உண்டாகவேண்டும். அப்போதுதான் அவர்களால் இப்போதும் எப்போதும் உண்மையாகத் தொண்டாற்ற முடியும். கடவுளைத் துதித்து மனம் உருகி அருள் வெள்ளமாகப் பெருக்கெடுத்த தொன்மையான பாவைப் பாடல்கள் அவர்கள் மனதில் குடிகொண்டிருக்க பெற்றோர்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

ஸ்ரீ நடராஜன் (நஜன்) தனது தர்மபத்தினியுடன் பல தெய்வீகப் புத்தகங்களை எழுதி வெளியிடும் தொண்டில் ஈடுபட்டு பல புத்தகங்களை வெளியிட்டு வருகிறார். அவ்வரிசையில் பாவை மகாநாடுகள் ஆரம்பித்த 25 ஆண்டு நிறைவை யொட்டி 'பாவை உணர்த்தும் தத்துவங்கள்' என்ற புத்தகத்தை வெளியிடுவது குறித்து பெரு மகிழ்ச்சி அடைகிறோம். அவர் இத்தொண்டை நீடித்து நடத்தி க்ஷேமமாக இருக்கவேண்டும்.

ஸ்ரீ நாராயண ஸ்ம்ருதி.

தருமபுர ஆதீனகர்த்தரின் அருளாசி

உ

குருபாதம்

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ
சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P.O.

18—8—1975.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

சைவ-வைஷ்ணவங்களின் பெருமையும், மரபும் துலங்கவும், ஒற்றுமை சிறக்கவும் பாவை மாநாடுகளும், இவை தொடர்பான வெளியீடுகளும் பெரும்பயன் நல்குவதை அனைவரும் அறிவர்.

சைவம் மற்றும் தமிழ் இலக்கியங்களை எளிய முறையில் அனைவரும் கற்றுணரும் வண்ணம் தம் எழுத்தாற்றலால் சிறந்த பணியாற்றிவரும் அன்பர் திரு. நடராஜன் அவர்கள் இது போது 'பாவை உணர்த்தும் தத்துவங்கள்' என்ற தொகுப்பு நூல் ஒன்றினை வெளியிட இருப்பது பாராட்டற்குரியது.

இந்நூல் சிறப்புற அமைந்து சமயத்திற்கும், மொழிக்கும், மக்களுக்கும் பெரும் பயன் விளைவிக்கவும் மக்களிடையே பக்தி உணர்வு பெருகவும் அறநெறி தழைக்கவும் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அன்பர் திரு. நடராஜன் அவர்களுக்கு எல்லா நலன்களும் பெருகவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.



சமர்ப்பணம்

★

மக்களிடையே
ஒற்றுமை உணர்வை
உண்டாக்கவும்,
பக்தி என்ற
பிணைப்பில்
அனைவரையும்
பிணைக்கவும்
திட்டமிட்டு
காஞ்சி காமகோடி
பெரியவர்கள்

திருப்பாவை, திருவெம்பாவை திருமறை ஆறங்க
மகாநாட்டை நடத்த உத்திரவிட்டார்கள்.
முதல் மகாநாடு 1950-ல் நடைபெற்றது.
இம்மகாநாடுகளின் வெள்ளி விழா நடைபெறும் இந்நேரத்தில்
அப்பெரியவர்களின் அருட்கடாட்சத்தைப் பெற்று

இப்புத்தகத்தை

இறைவனையே நம்பி
தங்களுக்கு கண்ணுக்கு நிறைந்தவனும்,
குணசீலனுமான கணவன் வாய்க்கவேண்டும்
என்று நோன்பிருக்கும்

கன்னிப் பெண்களுக்கு

சமர்ப்பிக்கிறோம்.

—பிரதிபா பிரசுரம்

முகவுரை

பாதகங்கள் தீர்ந்துப் பரமனடி காட்டவல்லதும்; வேத மனைத்திற்கும், வித்தானதுமான ஸ்ரீ வில்லிச் செல்வி பாடிய 'திருப்பாவை'யையும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கச் செய்யும் மணிவாசகப் பெருந்தகையாரின் திருவெம்பாவையையும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உகந்த மாதமான மார்கழியில் பாரத தேசமெங்கும் பாடிப் பரவசமடைந்து மகாநாடுகள் கூட்டி மகிழ்வது சென்ற 25 ஆண்டு காலமாக ஒரு தனிச் சிறப்பு பெற்ற செய்தியாகும்.

சைவ நெறி, வைணவ நெறி ஆகிய இரண்டும் வேதத்தை ஆதாரமாகக் கொண்டு, பரம்பொருளை இறுதியில் அடைவதற்கான வழி வகைகளைச் சொல்பவைகளே. இவ்விரண்டிலும் தனித்தன்மைக ளிருப்பினும், ஒப்பற்ற பொதுத் தன்மையுமிருக்கிறது. பலதரப்பட்ட வேற்றுமைகளால் சிதறிக் கிடக்கும் மக்களிடையே, ஒற்றுமை உணர்வை உண்டாக்கவும், பக்தி என்ற ஒரே பிணைப்பில் அனைவரையும் பிணைக்கவும், காஞ்சிப் பெரியவர்கள் திட்டமிட்டு, 'ஆருத்திரா தரிசன' தினத்தன்று 25-12-50ல் 'மத்யார்ஜுனம்' என்று போற்றப் பெறும், திருவிடமருதூரில் இதனைத் தொடங்கினார்கள்.

"திருப்பாவை—திருவெம்பாவை திருமறை ஆறங்க மகாநாடு" என்ற பெயருடன் மகாநாடு தொடங்கியது.

காஞ்சிப் பெரியவர்கள் எதனைச் செய்தாலும் திட்டமிட்டு, திறம்பட நடக்குமாறு தனித்தியங்க ஆவன செய்வது, உலகறிந்த ரகசியம். எனவே, அவர்கள், திருப்பாவை, திருவெம்பாவை பாக்களைப் பொதுமக்களிடம் பரப்பவும், ஆரம்பப்பள்ளி மாணவ, மாணவிய ரிடையே உற்சாகமூட்டி மனப்பாடம் செய்விக்கவும், காசு வழங்குதல், இலவச நூல் அளித்தல், பரிசளித்தல் முதலியன செய்ய மாயூரம் ஸ்ரீ ராமமூர்த்தி அவர்களைச் செயலராகக் கொண்ட ஒரு கமிட்டி நியமித்தார்கள். ஆசார்யாளின் ஆணையை உடனுக்குடன் உரிய முறையில் நிறைவேற்றுவதில் ஸ்ரீ ராமமூர்த்திக்கு நிகரானவர், ஸ்ரீ ராமமூர்த்தி அவர்களே.

1958 பாவைப் பிரசாரத்தின் பொற்காலமாக அமைந்தது. அவ்வமயம், தமிழக அறநிலய இலாகாவின் அமைச்சராக இருந்த கனம் எம். பக்தவத்சலம் அவர்கள், ஆசார்யாளின் ஆணையை நமது ஆலயங்கள் மூலம் நிறைவேற்ற திட்டமிடுமாறு அறநிலய ஆட்சித் தலைவராக இருந்த உயர்திரு. உத்தண்டராமபிள்ளை அவர்களிடம் கூற, அவர்களும், மதுரை டிப்டி கமிஷனர் உயர்திரு. சக்கரை சேர்வை, மற்றும் பல அதிகாரிகளுடன், சமயத்துறையில் வல்லுனர்களான பண்டிதர்களுடனும் ஆலோசித்து, பல வளர்ச்சித் திட்டமிட்டார்கள். அவ்வாண்டில், திருப்பாவை-திருவெம்பாவை பிளேட்டுகள் 'ரிகார்டு' செய்யப்பெற்று எல்லா ஆலயங்களிலும் அதிகாலையில் ஒலிபரப்பப் பெற்றன. பல தேவஸ்தானங்கள் வெள்ளி, தங்க காசுகளை தயாரித்தளித்தன. மற்றுஞ் சில ஆலயங்கள், இலவசமாக புத்தகங்களைத் தயாரித்தளித்தன. நாள்தோறும் ஒவ்வொரு ஊர்களிலும், ஆலயங்களில் திருப்பாவை-திருவெம்பாவை

மாநாடு நடத்தப்பெற்று அதில், இவைகளது சிறந்த குறிக்கோள் விளக்கப்பட்டன.

இந்த பாவை மகாநாடுகளின் வெள்ளி விழாவையொட்டி சென்னையிலுள்ள 'பிரதிபா பிரசுரத்தார், இந்த நூலை வெளியிட முன் வந்தது, மிகமிகப் பொருத்தமாகும். காலத்திற்கு மிகவும் அவசியமான நூல்களை, சிறந்த முறையில் உருவாக்கி, குறைந்த விலைக்கு விற்பவர்கள் இவர்கள்.

திரு. 'நஜன்' என்கிற ஸ்ரீ எஸ். நடராஜன் அவர்களை எழுத்துலகில் அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். உழைப்பும், ஆர்வமும் நிறைந்த அன்னார் சுமார் 30 ஆண்டுகட்டு மேலாக பல மொழிகளிலுள்ள பத்திரிகாலயங்களில் துணை ஆசிரியராக இருந்து பணியாற்றியவர். அவர் எதனையும், சிந்தித்துத் திட்டமிட்டு நன்கு செயலாற்றுபவர். மேலும், காலஞ்சென்ற, 'விவேக சிந்தாமணி'யின் ஆசிரியரான ஸ்ரீ சி. வி. சுவாமிநாத அய்யரின் குமாரர். பத்திரிகை உலகில் பெரும் புரட்சியை உண்டு பண்ணிய, சுதந்திரப் போராட்ட வீரரான ஸ்ரீ எஸ். சதானந்தம் இவரது சகோதரராவார். இவரது மனைவியரான ஸ்ரீமதி என். லலிதாம்பாள் தேவி உபாஸனை செய்து அருள் பெற்றவர். எனவே 'நஜன்' அவர்களிடம் சிறந்த பண்புகளும், ஆர்வமும் குடிகொண்டிருப்பதில் வியப்பில்லை. இவரது, பக்தி நூல்களுக்கு இந்தியாவில் மட்டுமின்றி, கடல் கடந்தும் நல்ல மதிப்பிருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

எனக்கு இந்நூலுக்கு ஒரு குறிப்பு எழுதும் வாய்ப்பை அளித்தமைக்கு எனது இருதய பூர்வமான நன்றி.

ஈரோடு
20-9-75

ஏ. எஸ். ரங்கநாதாச்சாரியர்
(தஞ்சை)

ஆசிரியர் முகவுரை

நமது இந்து மதத்திற்கு இரு கண்கள் போன்றவை திருப்பாவையும், திருவெம்பாவையும். இவை இரண்டும் காஞ்சி காமகோடி பெரியவர்களின் அருட்கடாட்சத்தால் இன்று மிகப் பிரபலமாகி உள்ளன. ஆயிரக்கணக்கான குழந்தைகள் இத்தெய்வப் பாடல்கள் மனனம் செய்திருக்கிறார்கள். லக்ஷக்கணக்கான இந்நூல்களின் பிரதிகள் பல அன்பர்களால் அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப் பட்டுள்ளன. சென்ற 25 ஆண்டுகாலமாக திருப்பாவை-திருவெம்பாவை மகாநாடுகள் பல இடங்களில் நடைபெற்று இந்த ஆண்டு வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி இப் புத்தகத்தை பிரதிபா பிரசுரத்தினர் வெளியிட்டுள்ளனர். வைரங்களும், ரத்தினங்களும் ஒவ்வொரு கோணத்தில் பார்க்கும்போது ஒவ்வொரு விதமாக 'டால்' அடிப்பது போல இந்த இரண்டு பாவைகளிலும் பல அதிசய தத்துவங்கள் பளிச்சிடுகின்றன. என் சிற்றறிவுக்கு எட்டியவரை அவை எல்லாவற்றையும் திரட்டி கொடுத்திருக்கிறேன்.

திருப்பாவை தத்துவார்த்தங்கள் சிலவற்றை விளக்கிய எனது நண்பர் ஸ்ரீ திருமழிசை கிருஷ்ணமாச்சாரியர் அவர்களுக்கும், இந் நூலுக்கு முகவுரை எழுதியுள்ள சிரோமணி ஸ்ரீ ஏ. எஸ். ரங்கனாதாச்சாரியார் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி. ஸ்ரீ ஏ. எஸ். ஆர். சிறந்த சொற்பொழிவாளர். தமிழ், சமஸ்கிருதம் இரண்டிலும் நல்ல பாண்டித்யமுள்ளவர். 1972-ல் தேசிய நல்லாசிரியருக்கான விருதை ஜனாதிபதியவர்களிடம் பெற்ற சமஸ்கிருத பண்டிதர். இப்புத்தகத்திற்கு முகவுரை எழுத இவரே ஏற்றவர். ஏனெனில் பாவைப் பாக்களைப் பரப்பும் விஷயத்தில் ஆரம்ப முதல் மத்திய கமிட்டியுடனும், அறநிலைய இலாக்காவுடனும் தொடர்புகொண்டு உழைத்து வருபவர். கல்கத்தா, டில்லி, பம்பாய் ஆகிய நகரங்களில் திருப்பாவை, திருவெம்பாவை தத்துவத்தை விளக்கிப் பேசியவர். 1958-ல் மார்கழி முப்பது நாளும் முப்பது ஊர்களில் சொற்பொழிவாற்றியும், மகாநாடுகளை நடத்தும் முறையை உருவாக்கிக் காட்டியும் பிரசாரஞ் செய்து அறநிலைய இலாகா கமிஷனரால் பொன்னாடைப் போர்த்தப்பட்டு 'பாவைப் பிரசாரமணி' என்ற பட்டமும் பெற்றார். அப்பேர்பட்டவர் இந் நூலுக்கு முகவுரை எழுத நேர்ந்தது எங்கள் பாக்கியமேயாகும்.

அட்டைப் பக்கத்தை அழகாக அச்சடித்த 'மோட்டார்' அதிபர் ஸ்ரீ கே. வெங்கடராமன், ஓவியர் ஸ்ரீ சித்திரலேகா, பூங்குழலி அச்சகம் ஸ்ரீ முத்துகிருஷ்ணன் அவர்களுக்கும் மற்றும் பல விதங்களில் உதவியவர்களுக்கும் எங்கள் நன்றி.

இப்புத்தகமும் எங்கள் மற்ற புத்தகங்களைப்போல வரவேற்கப் படும் என்று எதிர்பார்க்கிறோம்.

என். லலிதாம்பாள்
(பதிப்பாசிரியர்)

எஸ். நடராஜன்
(நஜன்)

'பிரதிபா'வின்

"லக்ஷ்மி கடாக்ஷம்"

கீழ்த்திருப்பதி திருச்சானூர் அலர்மேல்மங்கைத் தாயார் சந்நிதியில்
15—11—75 அன்று வெளியிடப்பட்டது.



காத்யாயநி மகாமாயே மஹா யோகிந்ய தீஸ்வரி
நந்தகோப ஸுதம் தேவிபதிம் மே குருதே நம:
ஸர்வ மங்கல மாங்கல்யே ஸர்வ காம ப்ரதே சிவே
தேஹிமே வாஞ்சிதம் தேவி நமஸ்தே சங்கரப்பிரியே

—கன்னிப் பெண்கள் செய்யவேண்டிய ஸ்துதி

மதிப்புரை

"தேனைப்போல் இனிக்கும்"

லக்ஷ்மி கடாக்ஷம்

(பிரதிபா பிரசுரத்தின் 6-வது புத்தகம்)

விலை ரூ. 3-00 (தபால் செலவு தனி)

"லக்ஷ்மிதேவி பற்றிய அரிய விஷயங்களை அரும்பாடுபட்டு தேடி வைஷ்ணவ சம்பிரதாயங்களின் நுணுக்கங்களை எல்லாம் அறிந்து 'நஜன்' இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்."

புத்தக முகவுரையில்
பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார்

* * *

"லக்ஷ்மி கடாக்ஷம்" பிரதிபா பிரசுரப் பெயருக்கேற்ற தயாரிப்பு. (புதிது புதிதாகத் தோன்றும் கற்பனைகள் நிறைந்த புத்திக்கு 'பிரதிபா' என்று பெயர்). வேத இதிகாச புராண ஸ்தோத்திரங்களில் எளிதில் அறிய முடியாத லக்ஷ்மி பற்றிய தத்துவங்களாகிய முத்துகளை அற்புத மாலையாக 'நஜன்' தயாரித்துள்ளார்.

'பெரிய பிராட்டி ஆசாரியர்' போன்ற நுணுக்குகளும் 'லக்ஷ்மி தேவியின் சக்களத்திகள்' விஷயமும் மிகவும் போற்றத் தக்கவை.

கனகதாரா ஸ்துதி, ஸ்ரீ ஸ்துதிகளால் பொன் மழைப் பொழிந்ததை நாம் காணக் கொடுத்து வைக்கவில்லை. ஆனால் லக்ஷ்மி கடாக்ஷம் மூலம் வீடுதோறும் பொன் மழை நிச்சயமாகப் பொழியும் என்பதைக் காண முடியுமென்பது என் நம்பிக்கை.

தேன் வண்டுகள் மலரிலுள்ள மகரந்தங்களை சேகரித்து தேனாக்கி அதனை தாங்கள் மட்டும் பருகாமல் உலகிற்கு வழங்குவதுபோல 'நஜன்' இப்புத்தகத்தை தயாரித்துள்ளார். இந்நூல் தேன்போல இனியது. தேன உலகிற்கு பயன்படுவதுபோல இதுவும் மக்களுக்கு மிகவும் பயன் தரவல்லது என்பது எனது ஆழ்ந்த கருத்து."

ஈரோடு
3-12-75

சிரோமணி
ஏ. எஸ். ரங்கநாதாச்சாரியார்

* * *

"திருமகள் பற்றி தெரிந்திராத பல அரிய பெரிய விஷயங்களை நஜன்' திரட்டிக் கொடுத்துள்ளார். அருள் நெறி தழைக்க மிக அருமையான நூல்."

—'தினமணி'

பாவை உணர்த்தும் தத்துவங்கள்

திருப்பாவை-திருவெம்பாவை

பாவைக்கு 25 ஆண்டு

இது என்ன பாவை பிறந்து 25 ஆண்டுகள் தானு ஆகிறது? அவை ஏற்பட்டு பல நூற்ருண்டுகள் ஆயிற்ற என ஆச்சரியம் ஏற்படலாம். ஆனல் காஞ்சி காமகோடி பெரியவர்கள் அவைகளை நமக்கு நினைவுபடுத்தி கொண்டாடச் செய்து நம்மனதில பாவைகளைப் பற்றிய நினைவுக்கு புத்துயிரளிதது 25 ஆண்டுகள் ஆகின்றன.

வேத மதம் ஒன்றே. ஆனல் அதில் பேசப்படும் தெய்வங்கள் பலவாகவும் அவற்றை வழிபடும் முறைகள் பலவாகவும் காணப்படு கின்றன. ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஓரிடத்தில் குறிப்பிடுகையில் "புனிதமான கங்கை நதி கிழக்கு நோக்கி ஓடுகிறது. நர்மதை மேற்கே செல்கிறது. மகாநதி தெற்கிலிருந்து வடக்கே செல்கிறது. பல நதிகள் பல திசைகளில் ஓடுகின்றன. அனல் எல்லாம் முடிவில் கடலில் கலக்கின்றன. சேரும் இடம் ஒன்றே என்ற எண்ணம் நதிகளுக்கு இல்லை. அவை எங்கே போனலும் கடலைத்தான் போய்ச் சேர்கிறது. அதேபோல நாம் பல வழிகளில் இறைவனை வழிபடுகிருேம். பாதைகளில் வேற்றுமைகள் உள்ளன. பலவழிகளில் நாம் இறைவனை யடைய முயற்சி செய்யலாம். ஆனல் வேற்று வழிகளில் செல்கையில் ஒற்றுமையை மறந்து கடவுளின் ஏகத்துவத்தைக கைவிடக்கூடாது. வேற்றுமையை நினைத்தால் ஆனந்தம் இல்லை" என்று அருளி யிருக்கிருர்கள். வேதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தும் ஹிந்து சமூகம் இப்போது பல மதங்களாக பிரிவடைந்து நிற்பதைக் காண்கிருேம். இந்த வேற்றுமைகளை அகற்றி ஒற்றுமையை விளக்குவதற்கு நமது ஆசாரியர் மிகவும் பிரயாசைப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

நாட்டிலுள்ள கோவில்களுக்கெல்லாம் ஒருவித புத்துயிர் அளிக்கவும், வருங்காலத்தில் பெரியோர்களாகும் இக்காலக் குழந்தை களுக்கு குழந்தை பருவத்திலேயே பக்தி சுவையை ஊட்டவும், இதிலிருந்து இன்னும் பல ஸ்தாபனங்களும் நூதனமாக ஏற்படவும் ஏற்ற நிலைக்களமாக அமையவும், தக்க ஒரு ஸ்தாபனத்தை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் ஸ்ரீ ஆசாரியர்கள் தெய்வ உள்ளத்தில்

முளைத்ததே திருப்பாவை—திருவெம்பாவை—திருமறை ஆறங்க மகா நாடு என பரிணமித்தது.

1950-ஆம் ஆண்டின் இறுதியில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் பின் வருமாறு கூறினார்கள்:

"நம் தமிழ்நாடு முழுவதிலும் ஒவ்வோர் ஊரிலும் சிவாலயமும், விஷ்ணு ஆலயமும் நிறுவப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஒவ்வொரு சிவாலயத்திலும் நாயன்மார்களின் திருவாக்கான திருமுறைகளும் விஷ்ணு கோவில்களில் ஆழ்வார்களின் திருவாக்கான பிரபந்தங்களும் இரு ஆலயங்களிலும் ஆறு அங்கங்களுடன் கூடிய ரிக், யஜூஸ், சாமம் என்று மூன்று வேதங்களும் தொன்று தொட்டுப் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றன. மார்கழி மாதத்தில் ஸ்ரீ மாணிக்க வாசகரது திருவெம்பாவையும், ஸ்ரீ ஆண்டாளுடைய திருப்பாவையும் முறையே சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் ஓதப்பட்டு வருகின்றன.

சென்ற 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாட்டு மக்கள் சிறு பிராயம் முதலே மேல்நாட்டின் மொழியையும், நாகரிகத்தையும் பயின்று அரசியல் கிளர்ச்சிகளில் மாத்திரம் பெரும்பாலும் ஈடுபட்டு வந்தமையால் தாய் நாட்டின் தெய்வீக முறைகளை அறியாமல் அருள் வழியில் பெரும் நஷ்டத்தை அடைந்துவிட்டார்கள். நம் முன்னோர்கள் அருளிய திருமுறைகளின் கருத்துகளையும் நம் மக்களுக்கு எடுத்துறைக்க வேண்டியது கடமையாகும்."

இந்த நோக்கங்களுடன் ஸ்ரீ ஸ்வாமிகளின் விருப்பப்படி ஸ்ரீ மகாலிங்க க்ஷேத்திரமான திருவிடைமருதூரில் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் தலைமையில் 1950 டிசம்பர் 25-ம் தேதி எட்டு நாட்கள் ஒரு மகாநாடு நடைபெற்றது. வைணவம், சைவம் ஆகிய இருபெரும் சமயப்பிரிவுகளின் சம்பிரதாயங்களிலும் சாஸ்திரங்களிலும் வல்லுநரான பண்டிதர்கள் பலர் இம்மகாநாட்டில் பங்கு கொண்டனர்.

"இம்மகாநாட்டில் நம் வைதிக மதத்தைச் சார்ந்த எல்லா வழிபாட்டினரும் கலந்துக் கொண்டது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இதுபோன்ற மகாநாடுகள் எங்கும் நடக்கவேண்டும். எல்லோரும் ஒருங்கே கூடி இறைவனை நினைத்து நம் துக்கத்தை மறந்திருப்போம். தெய்வீக ஒளி வீசட்டும்" என்று காமகோடி பெரியவர்கள் அனுக்கிரஹித்தார்கள்.

"சைவ வைஷ்ணவ சச்சரவுகள் போன்ற இன்னல்கள் நம் சமூகத்தில் பல பிளவுகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. ஆண்டாள் அருட்பாடலையும் மணிவாசகப் பெருமான் அருளிச் செய்ததையும் ஒருங்கே கற்று சைவம் வைஷ்ணவம் என்ற பிரிவுகளையும் பிராம்மணர் இதர வகுப்பினர் என்ற வகுப்புகளையும் சேர்ந்த சிறுவர் சிறுமியர் இவ்விதத்தில் பெரியவர்களுக்கு வழிகாட்டியாகும் ஆச்சரியத்தைக் கண்டு பெருமிதம் எய்திய ஸ்ரீ வி.வி. ஸ்ரீனிவாச அய்யங்கார் இதை ஒரு 'Stroke of Genius' என்று வியந்து ஸ்ரீ சுவாமிகளின் ஆக்க சக்தியையும் தீர்க்க தரிசனத்தையும் பாராட்டினார்கள். இதனால் ஒரு பெரிய சாத்விக புரட்சி ஏற்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

பாவை நோன்பின் தத்துவம்

ஸம்பும் ஜகன்மோகன ரூப பூர்ணம்
விலோக்ய லஜ்ஜா குலிதாம் ஸ்மிதாட்யாம் ।
மதூகமாலாம் ஸ்வஸகீ கராப்யாம்
ஸம் பிப்ரதீம் அத்ரி ஸுதாம் பஜே ஹம் ॥

—சுயம்வர கலா தியானம்

கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்திருக்கிறார்கள்; காலைக் கடன்களை முடித்துவிட்டு நீராடப் புறப்படுகிறார்கள். பகவானுடைய பெயரையும் அருளையும் பாடுகிறார்கள்; ஒவ்வொரு வீடாகச் சென்று தூங்குபவர்களை எழுப்பி அழைத்துச் செல்கிறார்கள். ஓடும் நதியிலோ குளத்திலோ ஸ்நானம் செய்துவிட்டு மண்ணில் பாவையை பிடித்து வைத்து பூஜை செய்கிறார்கள். இதன் தத்துவம் என்ன ?

இறைவன் ஏகநாயகன். உயிர்கள் நாயகிகள். அவை ஆணவம் கன்மம், மாயை ஆகிய மும்மலங்களாலான இருளில் உறங்குகின்றன. அம்மலங்களினின்றும் விடுவிப்பதே துயிலுணர்த்துதல். பக்குவப்பட்ட உயிர்கள் முன்பே துயில் உணர்ந்து மற்ற உயிர்களை பரிபாகப்படுத்தி இறையருளில் தோய்விப்பதே நீராடலும் நோன்பும்.

விளையாட்டும் வேடிக்கையுமாக மகத்தான உண்மைகளை வெளி யிடுவது அப்பெண்கள் பாடிக்கொண்டு போகும் பாவைப் பாட்டுகள். கற்றோரும் மற்றோரும் வியந்து பாராட்டும் பாசுரங்கள் இவை. சிறுவர் விளையாட்டின் மூலம் தெய்வ அன்பைப் பெற முடியும் என் பதை இப்பாடலிலுள்ள கருத்துக்கள் விளக்குகின்றன.

நோன்பு என்றால் என்ன ?

மனதில் ஓர் உறுதி செய்துகொண்டு அதை வாக்கினாலும், உடலி னாலும் எள்ளளவும் நவறாது நிறைவேற்றுவதே நோன்பு. பாவை நோன்பு நோற்பவர்கள் இரு பலன்களை எதிர் பார்க்கின்றனர். ஒன்று நாட்டில் மழை பொழிந்து செழிப்பாக இருக்கவேண்டும். இரண்டு நல்ல கணவன்மாரை அடைந்து நல்ல வாழ்க்கை வாழவேண்டும். இவை இரண்டும் இறை அருள் ஒன்றினால்தான் முடியும் என்பது அவர் களுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

பண்டைக்காலத்துத் தமிழர் வழிபாடெல்லாம் தனியொருவர் வழிபாடாகாமல் சமுதாயத்தின் நலம் கருதிய வழிபாடாகவே விளங்கு

வதை சிலப்பதிகாரத்திலே வரும், வரிப்பாடல்களிலும் குரவைப் பாடல்களிலும் காண்கிறோம். அதுபோலவே கன்னிப் பெண்கள் தனியாக நோன்பு நோற்காமல் கூட்டாகச் செய்கிறார்கள்.

கற்பே மழை தரும் என்று எண்ணிய தமிழ் உலகம் (தெய்வந் தொழாள் கணவனைத் தொழுதிடுவாள் பெய்யெனப் பெய்யுமழை) இக்கன்னியர் நோன்பை மழைக்கென நோற்கும் நோன்பாகவும் கருதியது.

சங்க காலத்து நோன்பு

"நிலம், மழை வளம் பெற்று குளிர்வதாக" என்று இக் கன்னிப் பெண்கள் சொல்ல, அப்படியே மழை பெய்து ஆற்றிலும் சுனையிலும் நீர் நிரம்பிப் பனி நீராட வாருங்கள் என்று அழைக்கிறதாம். இந்த உணர்ச்சி இவர்கள் உள்ளத்தில் நிரம்பி வழிகிறது. நீர் வாடை ஜில்லென்று வீசுகிறது. இவர்களோ நோன்பு நோற்கும் ஒரே நோக்குடன் கூட்டமாக நீரில் இறங்கி முழுகுகிறார்கள். வயது முதிர்ந்த பெண்கள் நோன்பு நோற்கும் சடங்கு முறையைத் தெரிவிக்க இவர்கள் அதை ஒரு தவமாகச் செய்து முடிக்கிறார்கள். கடைசியாக வீடு திரும்புகிறார்கள். இது சங்க இலக்கியமாகிய பரிபாடலில் நாம் காணும் நோன்பு வருணனை.

இதை பரிபாடல் 'அம்பா ஆடல்' என்கிறது. இதற்கு 'தாயுடன் ஆடுதல்' என்று பொருள் கூறுவர். அம்பாவை என்பதே 'அம்பா' என்று மாறி விட்டது என்றும் கூறலாம்.

மார்கழி மாதத்தில் நிறைமதி (பௌர்ணமி) நாளாகிய திருவாதிரையில் திருவிழா தொடங்குகிறது என்பது பரிபாடல் தெரிவிக்கும் செய்தி. வைகை ஆற்றங்கரையில் மார்கழி நோன்பு நோற்கும் வழக்கம் அந்தக்காலத்திலேயே அதாவது ஆண்டாள் மாணிக்கவாசகர் காலத்திற்கு முன்பேயே வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது என்கிறது பரிபாடல்.

> "வையெறிற்றிவர் நாப்பண் வகையணிப் பொலிந்து நீ
> தை நீராடிய தவநதலைப் படுவாயோ"

என்பது கலித் தொகை. பூர்ணி மாந்தம் என்னும் முறைப்படி பௌர்ணமிக்குப்பின் தைத் திங்கள் என்றபடி தை நீராடலும் மார்கழி திருவாதிரைக்குப் பின்னுள்ள நாட்களைக் குறிக்கும்.

"நறுவீனையயம்பான் மகளிராடும் தை இத்தன் கயம் போல்" என்பது ஐங்குறுநூறு.

"வான் பெயனைந்த புறந்த நோன்பினர் தையூணிருக்கையில்" என்பது நற்றிணை.

எனவே சிறு பெண்கள் தாங்கள் நற்கணவரைப் பெற்று மண்ணில் நல்ல முறையாக வாழவும், நாட்டில் பருவ மழை பெய்து உலகின்புற்றிருக்கவும் இறைவனருள் பெற்று பேரின்பம் அடையவும் மார்கழி மாதம் ஒவ்வொரு நாளும் வைகறையில் எழுந்து கூட்டமாகச்

சென்று இறைவன் புகழ்பாடி, நீராடி நோன்பு செய்தனர் என்று தெரிய வருகிறது. மூவேந்தர் காலத்தில் இந்நோன்பு மிக பிரசித்த மாக இருந்தது.

காத்யானி* விரதம்

ஸ்ரீமத் பாகவதத்தில் இந்நோன்பு பற்றி கூறப்பட்டிருப்பதாவது: கோகுலத்து குமரிகள் ஹேமந்தருதுவின் முதல் மாதத்தில் அதாவது மார்கழியில் காத்யாயினி விரதத்தை நடத்தினர்கள். அருணோ தயத்தில் எழுந்து யமுனை நதியில் ஸ்நானம் செய்து ஈர மணலில் அம்பிகையின் பாவையை அமைத்துப் பூஜித்தனர்.

பாகவதத்தில் கூறப்பட்ட காத்யாயினி விரதமும் பிங்கலந்தையில் குறிப்பிடப்பட்ட பாவையாடலும் மாணிக்கவாசகர் குறிப்பிடும் பாவையும் பண்டைக்காலம் தொட்டு நம்நாட்டு மக்கள் மார்கழியில் நீராடி நோற்கும் நோன்பு அம்பிகையைக் குறித்தே செய்யப்படுகிறது என்பதை உணர்த்துகிறது.

திருவாதிரை நோன்பு

மலையாள நாட்டில் இம்மார்கழி நீராடல் 'ஆதிரைக் களி' என்ற திருவாதிரைப் பெரு விழாவாக இளம் பெண்களால் கொண்டாடப் படுகிறது.

இன்றும் இந்த நோன்பு பற்றிய விசேஷ நிகழ்ச்சிகளைப் பார்த் தால் அதில் மன்மதன் கதையே மூலமாக இருக்கிறது. இந்த விழா திருவாதிரைக்கு சில நாட்கள் முன்பே ஆரம்பமாகிவிடும். இவைகளை நடத்துபவர் பெண்களே. அவர்கள் அதிகாலையில் எழுந்திருந்து கூட்டாகப் பாடிக்கொண்டே குளத்திற்குச் சென்று நீராடுவர்.

பாடும்போது ஜலத்தை தம் கையால் எழுப்பி மிருதங்க ஒலி போல எழச் செய்துகொண்டிருப்பார்கள்.

வாத்ஸ்யாயனர் தன் காமசூத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 64 கலை களில் 'உதகங்காதம்' என்பது ஜலக்ரீடையில் அங்கமான கலைகளில் ஒன்று. அது ஜலத்திலேயே மிருதங்கம் வாசிப்பதாகும். இந்த நீராட்டமானதும் வீடு வந்து வெற்றிலைப் போட்டுக்கொண்டு ஊஞ்சலாடிவிட்டுக் குதித்துப் பாடுவார்கள்.

விரத நியமம்

பின்பற்றப்படும் நியமங்களில் விடியற்காலையில் நடுங்கும் குளிரை யும் லட்சியம் செய்யாமல் பனி நீராடுவது ஒன்று. இது இந்த நோன்பில் மிக முக்கியமானது.

---

* ராஜராஜேஸ்வரி காத்யாயன மகரிஷியின் மகளாக பிறந்தாள். அதனல் அவளுக்கு காத்யாயினி என்று ஒரு பெயர். காத்யாயனி காத்தாயி என்று மாறிவிட்டது. அம்பிகைக்குப் பட்டாரிகா என்று ஒரு பெயர். அது பிடாரியாக மாறிவிட்டது.

எந்த சிறப்பான செயல்களில் ஈடுபடுவோரும் அது கைக் கூடும் வரை சிலவற்றை விடவேண்டும் என்றும் சிலவற்றை பற்றவேண்டும் என்றும் நியமம் கொள்வது பிரசித்தம். இது ஒருவகை தத்துவம்—(நோன்பு)தான்.

பாவை நோன்பிற்குரிய கிரியைகளை திருப்பாவையில் காண்கிறோம். நெய் பால் உண்ணாமை, மையிட்டுக்கொள்ளாமை, மலரால் அலங்கரித்துக் கொள்ளாமை; செய்யாதன செய்யாமை முதலியன.

திருவெம்பாவை 9-ம் பாட்டிலும் 19-ம் பாட்டிலும் பாவை நோன்பின் நோக்கம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"உன் அடியார் தாள் பணிவோம்; ஆங்கவர்கே பாங்காவோம்; அன்னவரே என் கணவனாவார். என் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க" என்று வேண்டுகின்றனர்.

திருப்பாவையில் "குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது. என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமேயாவோம். உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று குறிப்பிடப்படுகிறது.

நோன்பு காலத்தில் விரதத்தோடு இருந்த பெண்கள் நோன்பு முடிந்ததும் சூடகம், தோள்வளை, தோடு முதலிய அணிகலன்களை அணிந்து புது ஆடை உடுத்தி பால் சோறு மூட, நெய் பெய்து முழங்கை வழிவார கூடியிருந்து உண்டு உள்ளம் குளிர்ந்து மகிழ்ந்த செய்தி திருப்பாவை 27-ம் பாட்டில் கூறப்படுகிறது.

திருவெம்பாவை விழா பூர்த்தியாகும் திருவாதிரை நாளில் ஆனந்தக்களி நடனத்துடன் களியும் சாந்தும் விநியோகிப்பது மரபு.

இதர நோன்புகள்

பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் பெண்கள், மாமியார் வீட்டில் முறையான வாழ்க்கை நடத்தக் கற்றுக்கொள்ளவும் மாங்கல்ய பலத்திற்காகவும் பல விரதங்களும் நோன்புகளும் ஏற்பட்டிருந்தன.

ஆந்திராவிலுள்ள சில நோன்பு* முறைகளின் நோக்கம் பற்றி பார்க்கலாம்.

நித்திய சிருங்காரம்: இந் நோன்பு சிறுமிகள் அனுஷ்டிப்பது. தினமும் மாலையில் ஒரு சுமங்கலியின் காலுக்கு மஞ்சள் பூசி நலங்கிட்டு தாம்பூலம் கொடுத்து சீப்பினால் வகிடு எடுத்து கண்ணாடி காட்ட வேண்டும். பேதைப் பருவம் தாண்டி பெதும்பைப் பருவத்தில் காலடி வைக்கும் சிறுமிக்கு இது அழகு செய்துகொள்ளும் முறையை பழக்கும் நோன்பு.

---

* ஆந்திராவில் அனுஷ்டிக்கப்படும் இந்த நோன்புகள் பற்றிய தகவல் அனுப்பியவர் ஸ்ரீமதி பானுமதி சுப்புஸ்வாமி அவர்கள்.

ஊமை நோன்பு : தினம் (தீபாவளி முதல் கார்த்திகை வரை) மாலை 4 மணிக்கு சாப்பிட்டுவிட்டு அலங்காரம் செய்துக்கொண்டு ஊரிலுள்ள சுமங்கலிகளுக்கு குங்மம் இட்டு விட்டு வரவேண்டும். பிறகு இரவில் நட்சத்திரங்களை எண்ண வேண்டும். நட்சத்திரங்கள் தெரியாவிட்டால் விளக்கருகே சல்லடையை பிடித்துக் கொண்டு அதன் துளைகளை எண்ண வேண்டும். இப்படி எண்ணி முடியும் வரை மௌனமாக இருக்க வேண்டும். பேச்சை அளவாக உபயோகிக்க இது வழிகாட்டி.

பொம்மை நோன்பு : சாவித்திரி, கௌரி பொம்மையை வைத்து பூஜித்து 9 நாள் நோன்பு நோற்பது. அரிசியைக் களைந்துகொண்டே "தாயாரின் தண்டனை, தகப்பனாரின் தண்டனை, மாமனாரின் தண்டனை, மாமியாரின் தண்டனை, புருஷனுடைய தண்டனை, ராஜதண்டனை, யம தண்டனை இவை எல்லாம் எந்தக்காலத்திலும் வேண்டாம்; சகோதர தண்டனை நிறைய வேண்டும். சொர்க்கத்துக்குப் போனாலும் சக்களத்தி போர் வேண்டாம். மாடிக்குப் போனாலும் மாற்றாந்தாய் வேண்டாம். சாவித்திரி தேவியே, கௌரி தேவியே உன் தண்டனை என்றைக்கும் கிடைக்கவேண்டும்" என்று வேண்டிக்கொள்வார்கள்.

விளக்கை தண்ணீரில் நிழலாடச் செய்துக்கொண்டே "பார்த்தேன் பார்த்தேன்" என்பார்கள். என்ன பார்த்தாய்?

"தேவியும் தேவனும் சூதாடுகிறார்கள்". "யார் ஜெயித்தார்கள்". இருவரும் சமம் தான்.

"இதற்கு யார் சாட்சி!"

"நந்தி சாட்சி
நாகமையா சாட்சி
கோட்டை சாட்சி
கொம்பனையான் சாட்சி
சாவித்திரி கௌரியம்மா உனக்கு நான் சாட்சி
எனக்கு நீ சாட்சி

கௌரி சாவித்திரி பாதங்களைக் கண்டேன்" என்று முடிப்பார்கள்.

அட்லத்தி (தோசை) நோன்பு : ஐப்பசி திரிதியையன்று ரோகிணியுடன் சேர்ந்திருக்கும் சந்திரனை கன்னிப் பெண்கள் பூஜிப்பார்கள். சந்திரனைப் போன்ற கணவனை அடைவதே இதன் நோக்கம்.

சிட்டிப் பொட்டு : கலியாணம் ஆன பெண்கள் தினம் ஐந்து சுமங்கலிகளுக்கு மஞ்சள், குங்குமம், சந்தனம் அட்சதை இவற்றை பொழுது விடியும்போதே நெற்றியில் இட்டு வணங்குவார்கள். மங்கலச் சின்னமான மஞ்சள் குங்குமத்தில் அக்கறை ஏற்படவே இந்த நோன்பு.

தையொரு திங்களும் தரை விளக்கிக் காமதேவனை வழிபட்டுக் கணவனைப் பெறுவது ஒரு நோன்பாயிற்று. இதனை ஆண்டாளும் பாடுகின்றார். மழையை விரும்பிப் பாடுவது பழமைபோல அம்பா

ஆடலாகவே விளங்கியது. இது நாளடைவில் ஆண்டாள் கையிலும் மாணிக்கவாசகர் கையிலும் தெய்வ நோன்பாக மாறியது. இது ஆதிரை நோன்பாகவும், மற்றொன்று தைப்பூச நோன்பாகவும் வளர்ந்தன போலும். பொதுவாக இவ்விழாக்களைப் பனிக்கால விழாக்கள் என்று கூறலாம். மார்கழியும் முன் பனிக்காலமே ஆதலின் அதிலே அம்பா ஆடல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சங்க காலததில் தை நீராடலாக இருந்தது. ஆண்டாள் காலத்தில் மார்கழி நீராடலாக மாறியது.

திருவெம்பாவை-திருப்பாவை தமிழ்நாட்டில் தோன்றிய காலத்தில் இந்த நோன்பு மார்கழித் திங்களிலேயே நடைபெற்றது.

திருப்பாவை : "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"

என்றே தொடங்குகிறது.

திருவெம்பாவையும், "போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்" என்றே முடிகிறது.

நீராடல் தையும் மார்கழியுமாய் மாறுடியதோடு துலாக்காவேரி ஆருட்டாகவும், மாசிக் கடலாட்டாகவும் வரும் நீராடலோடும் மாறுடின.

வானமும்—கானமும்

அகிலத்தைப் படைத்த ஆண்டவன் அதில் எத்தனை எத்தனை வர்ணக் கோலங்களை வாரிச் சொரிந்திருக்கிறான்! அதிலே உலவ விட்டிருக்கும் ஜீவராசிகளுக்கும்தான் எத்தனை வகையான குரல்களை வழங்கியிருக்கிறான்!

முழுமுதற் கடவுளெனப் போற்றப்படும் பிரம்மத்தையே அல்லவோ அநாதி நாதமெனப் போற்றுகின்றோம்? அதிலிருந்து எழுந்தவைதானே மற்ற குரல் வகைகளும்?

இசை ஒலியை எழுப்பத்தான் எத்தனை கருவிகள்! அந்தக் கருவிகளிலிருந்து எழுதும் சுநாதம்தான் மனத்தில் எத்தனை எத்தனை வண்ணக் கலவைகளைக் குழைக்கிறது! குழைத்து இன்ப லோகத்தைச் சிருஷ்டிக்கிறது! அந்த உலகத்தின் ஓர் அம்சம்தானே வானம்? கானம் புரியும் விந்தை வானத்தையும் ஆட்கொள்ளுகிறது! ஆட்கொண்டு வானத்திலும் வர்ண ஜாலங்களைப் புரிகிறது!

குழல் இசை கேட்கிறது. வாத்தியமோ வேய்ங்குழல் நாதம் எழுப்பும் கண்ணனுக்கு உரியது. கண்ணனோ காதல் தெய்வம்; விஷ்ணு அம்சம். பச்சைத் திருமேனி அல்லது கரிய உருவம் கொண்டவன்; அளவிலா அன்புடையவன். வானத்தின் கருநீல வர்ணம் இதற்குச் சான்று பகர்கிறது. இளம் பெண் ஒருத்தி புல்லாங்குழல் இசைகக இசைக்க, வானத்தின் உருவமும் கருநிறம் கொண்டு ஆதியந்தம் அற்ற ஆண்டவனை நினைவுறுத்துவதாக அமைகிறது! நீலாம்பரி பாடி அறிதுயில் கொள்ளுபவனை நினைத்த வண்ணம் ஜீவராசிகளை உறங்க வைக்கிறாள்!

"உதயமாச்சுது இதயம் தெளிந்தது"

(உஷக்கால தத்துவம்)

ப்ராதஸ் ஸ்மரண ஸ்தோத்ரம்

(காலையில் சொல்ல வேண்டியவை)

ஆதௌ ராம தபோவநாதி கமநம் ஹத்வா ம்ருகம் காஞ்சநம்,
வைதேஹி ஹரணம் ஜடாயுமரணம் ஸுக்ரீவ ஸம்பாஷணம் ।
வாலீ நிக்ரஹணம் ஸமுத்ரதரணம் லங்காபுரீதஹநம்
பஸ்சாத் ராவணகும்பகர்ணஹநநம் ஏதத் ராமாயணம் ‖ 1

ஆதௌ தேவகி தேவ கர்ப்பஜநநம் கோபீ க்ருஹே வர்த்தநம்,
மாயாபூதந ஜீவிதாபஹரணம் கோவர்த்தநோத்தாரணம் ।
கம்ஸச்சேதந கௌரவாதிஹநநம் குந்தீஸுதாபாலநம்,
ஏதத் பாகவதம் புராண கதிதம் ஸ்ரீக்ருஷ்ணலீலாம்ருதம் 2.

கஸ்தூரீதிலகம் லலாடபலகே, வக்ஷ: ஸ்தலே கௌஸ்துபம்,
நாஸாக்ரே வரமௌக்திகம் கரதலே வேணும் கரே கங்கணம் ।
ஸர்வாங்கே ஹரிசந்தநம் ஸுலளிதம், கண்டே ச முக்தாவலீ
கோபஸ்த்ரீ பரிவேஷ்டிதோ விஜயதே கோபாலசூடாமணி: ‖ 3

நம் முன்னோர்கள், எல்லாம் தெய்வ மயம் என்பதில் அசைக்காத நம்பிக்கையுள்ளவர்கள். விடியற்காலையில் துயில் எழுந்து வேலையை துவக்கும் போதே பொழுது இறைவனது புகழுடன் விடிய வேண்டும் என்று கருதி நம் தாய்மார்கள் உதய ராகம் பாடிய வண்ணம் கிணற்றி லிருந்து தண்ணீர் இழுப்பார்கள். வீட்டு வேலையைச் செய்வார்கள். 'ரங்கநாதரின் பங்கஜ பாதத்தை அங்கம் உருகித்தொழுதேன்' என்று ஒரு குரல் கேட்கும். 'உதயமாச்சுது இதயம் தெளிந்தது; உந்தன் தரிசன மாச்சுது' என்று மற்றொரு குரல் கேட்கும்.

கதிரவன் எழும் நேரம் புள்ளினங்கள் கூட்டாக பறந்து செல் கின்றன. கோயில்களில் உஷக்கால பூஜை ஆரம்பமாவதைக் குறிக்கும் மணி 'ஓம் ஓம்' என்று ஒலிக்கத் தொடங்குகின்றன. மேளக்காரர் அருமையான பூபாள* ராகம் வாசிக்கிறார். திருப்பள்ளியெழுச்சி கோவில்களில் பாடப்படுகின்றன.

---

* முன் காலத்தில் அரசர்களை துயில் எழுப்பும் வழக்கம் இருந்து வந்தது. அரசனை "பூபாலா! எழுந்திராய்! எனப் பாடி னார்கள். அதன் விளைவாகவே அந்த ராகம் 'பூபாலம்' என்ற பெயரைப் பெற்று பூபாளமாகி விட்டது

அந்த அதிகாலையில்தான் ஆரோக்கியத்திற்கான அம்சமே இருக்கிறது. உடம்புக்கு இதமான காற்று வீசுவதும் அப்போதுதான்.

தேகாரோக்கியத்திற்கு மிக அவசியமான "ஓஸோன்" என்பது காற்றில் அதிகமாக கலந்திருப்பது அந்த வேளையில்தான். நீரிலும் ஒருவித ஆரோக்கியத்திற்கான (கரண்ட்) இழுப்பு ஆதி ஓடுவதும் இந்நேரத்தில்தான் என்று விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

சூரியோதயத்திற்கு முந்திய நேரம். சூரியன் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் அவனுடைய புஷ்டியான கிரணங்கள் பூமி நோக்கி வருகின்றன. இவை முக்கியமாக நீரில் பாய்ந்து பயன் தரத் தக்கவை. அதனால்தான் பிராதஸ்நானம் விசேஷம்.

பலபலவென்று பொழுது புலரும் நேரம். மக்களுக்கு வாக் புஷ்டியும் மேதையும் அளிக்கவல்ல கிரணங்கள் வீசுகின்றன. அதனால் தான் வேதங்களும் அப்போது ஒலிக்கின்றன.

சூரியோதயத்துக்குப் பிறகு முற்பகலில் வீசும் கிரணங்கள் பறவை இனங்களுக்கு வலிமையளிப்பவை.

உச்சி வேளை. தேவர்கள் நல்ல பலனை சூரியனிடமிருந்து பெறும் நேரம். ஆகவே அந்த நேரம் தேவாராதனைக்கு ஏற்றது. பிற்பகலில் வீசும் கிரணங்கள் தாயின் கருவை போஷிப்பவை. மாலை நேரம். சூரியன் தன் கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு வீடு செல்லும் நேரமிது. விலங்குகளுக்கு உதவும் இக்கிரணங்கள். (இவை சாந்தோக்கிய உபநிஷத்தில் விளக்கப்பட்டுள்ளன).

உஷை தேவதை

இந்த இருட்டும் வெளிச்சமும் இணையும் நேரத்தை உஷக்காலம் என்பர். ரிக் வேத தேவதைகளுள் ஒரு பெண் தேவதை விடியற்காலைக் சூரிய உஷஸ். அவளை வருணிக்குமிடங்களிலிருந்து பாரததேசப் பெண்களின் நிலையை அறியலாம். 'பின்தூங்கி முன் எழும் பேதை பெண்தானே உஷஸ். முதலில் தோன்றுகிறது. பிறகு சூரியன் உதய மாகிறான். இது பெண்களுக்கு மதிப்பு கொடுத்து ஆண்கள் பின்னால் போவதை தெரிவிக்கிறது என்று வேதம் கூறுகிறது. சகோதரர் இல்லாத பெண்போல தானே முன் நிற்பவள் உஷஸ்" என்று வேதமே கூறுகிறது.

குமரி என்ற அரக்கி சூரிய பகவானுடன் போரிட்டு சாகும் தருவாயில் தான் இறக்கும் இவ்வேளை தன் பெயரால் விளங்க வேண்டும் என்று கேட்டாளாம். அதனால்தான் பொழுது விடியுமுன் உள்ள இருட்டுக்கு 'குமரி இருட்டு' என்று பெயர்.

பெண்கள் விடியற்காலை சாணம் தெளித்து அவ்விருள் அகல வேண்டுகிறார்கள்.

உதயம் உணர்த்தும் தெய்வீகம்

விடியற்காலையில் கிழக்கு வெளுத்தது. கதிரவன் தோன்றினன். வானம் முழுதும் அவனுடைய ஒளி படர்ந்தது. கீழ் வானத்தில் வெண்மையும் லேசான செம்மையும் படர்ந்து ஒளிமயமாக இணைந்து நிற்கின்றன. இதைக்கண்ட காரைக்காலம்மையார் 'எம்பெருமான் திருமேனி இப்படித்தானே சுடர்விட்டு விளங்கும்' என்று எண்ணினர். நடுப்பகல் கதிரவனைக்கண்டபோது அவன் வீசிய கதிரிலிருந்த தூய வெள்ளை ஒளி அவருக்கு இறைவன் அணிந்த திருநீற்றை நினைவூட்டியது. மாலையில் கதிரவன் ஒரே சிவப்பாகக் காட்சியளித்தான். எம்பெருமான் ஜடாபாரம் இப்படித்தானே செக்கச் செவேலென்றிருக்கும் என்று காரைக்காலம்மையார் நினைத்தார். இருள் சூழ்ந்தபோது இறைவனின், நஞ்சுண்ட கண்டமே அவருக்கு நினைவிற்கு வந்தது.

இப்போது அம்மையாரின் முழுப்பாடலையும் பார்ப்போம் :

காலையே போன்று இலங்கும் மேனி, கடும் பகலின்
வேலையே போன்று இலங்கும் வெண்ணீறு—மாலையின்
தாங்கு உருவே போலும்
சடைக்கற்றை; மற்று அவர்க்கு வீங்கு இருளே போலு மிடறு.

(அற்புதத் திருவந்தாதி)

மணிவாசகப் பெருமான் அந்த அழகிய அதிகாலைப் பொழுதை எப்படி காண்கிறார்?

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்
ஓவின தாரகையொளி யொளி சதயத்து
ஒருப்படுகின்றது விருப்போ நமக்கு

பிறக்கிறது புது உலகம் என்ற எக்களிப்பு எங்கும் நிலவுகிறது. புள்ளினம் ஆர்க்கின்றன. மென்தாது அவிழ்ந்த மலர்கள் புத்தம்புது மணம் பரப்புகின்றன. மென் பூங்காற்று மேனியை வருடுகிறது. கோவில் மணி ஓசை தெய்வீகத் தன்மையை அறிவித்து நாத விந்துவாய் நிற்கும் நாயகனுக்கு நாமகரணம் சூட்டுகிறது.

காஞ்சி காமகோடி பெரியவர்கள் இந்த அதிகாலையில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது ஸ்ரீஹரி: ஸ்ரீஹரி:ஸ்ரீஹரி: என்று திருமாலை வாய்விட்டுக் கூறவேண்டும். விஷ்ணு நாமத்தை உச்சரித்துக்கொண்டுதான் துயிலை விட்டு விழிக்கவேண்டும். நம் முன்னோர்கள் அப்படிதான் செய்து வந்தார்கள். அதுவே பண்டை நாள் முதல் நம் வழிவந்த மரபு அப்படிச் செய்தால் நாராயணன் அன்று முழுதும் நம்முடன் துணையிருப்பான்"

துயிலெழுப்புதல்

பள்ளியெழுச்சி (சுப்ரபாதம்)

ஏர் மருவும் பள்ளிஎழுச்சி பணிவிடை கேட்டு
ஆர்வமுடன் அண்ட அதற்கு அன்பு செய்யும் இயல்பே
எது எமை பணிகொளும் ஆறுவது கேட்போம்.

—திருப்பெருந்துறை புராணம்

அதிகாலையில் துயில் எழுப்புவது என்பது தொன்று தொட்டு வரும் ஒரு பழக்கமாகும்.

தூவினல்லிசை கருதி கிடந்தோர்க்கு
சூதர் ஏந்திய துயிலெடை நிலையும்

என்கிற தொல்காப்பியப் பாடலிலுள்ள 'துயிலிடை' என்பது திருப்பள்ளி எழுச்சியையே குறிப்பிடுகிறது. தமிழ் மன்னர்களை பாணர்கள் பள்ளி யெழுச்சிப்பாடி துயிலெழுப்புவது வழக்கம்.

இந்த திருப்பள்ளி எழுச்சியின் உட்பொருள் என்ன?

இறைவனிடம் "உமக்காற்ற வேண்டிய பணி இன்னது என்று கட்டளையிடுங்கள் எனக்கேட்டுப்போக வந்திருக்கிறோம் என்று பக்தர்கள் கேட்கிறார்கள்" என்பது தலைப்பிலுள்ள பாடலின் அர்த்தம்.

தமிழில் பிரபந்தங்கள் 96 வகை கொண்டது. அதில் ஒருவகை திருப்பள்ளி யெழுச்சி.

இறைவன் தனக்கென்றே ஒரு பணியை வைத்துக்கொண்டிருக்கிறான். அதைப்பற்றி வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் தன் திருப்பள்ளி எழுச்சி பாடலில் குறிப்பிட்டிருக்கிறார்.

எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெரும் ஜோதி
என்னப்பனே பள்ளி எழுந்தருளாயே

இறைவனது பணி அஞ்ஞான இருளில் சிக்கியிருக்கும் நம்மை எழுப்பி ஞானத்தை ஊட்டுவதுதான். இறைவன் முன் இசைக்கப்படும் பள்ளியெழுச்சிப் பாடல் அக இருள் அகற்றுகிறது என்பதற்கு.

"நீறணிந்தார் அகத்திருளும்
நிறைகங்குல் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி எழுச்சியினில்"

என்ற சேக்கிழாரின் பாடல் சிறந்த சான்றாக விளங்குகிறது.

தூங்குவர்களுக்குத்தானே துயில் எழுப்பவேண்டும். தெய்வம் தூங்குமா? அப்படித் தூங்கினால் சராச்சரங்களுக்கு இயக்கம் ஏது?

வடமொழியில் இதைத்தான் சுப்ரபாதம் என்கிறார்கள். சுப்ரபாதம் என்றால் நல்ல பொழுதாகப் புலரட்டும் என்று பொருள். முதலில் 'நமக்கு சுப்ரபாதம் ஏற்படட்டும் என்று வேண்டிக்கொள்' என்று தர்மநூல் கூறுகிறது.

கண்ணை விழித்தவுடன் கண்ணாடி, தீபம், அக்னி, அக்னி ஹோமம் செய்த பெரியார், பசுவின் பின்புறம் ஆகியவற்றைக் காணவேண்டும். மனத்தினால் தேவதைகளை நினைத்து வாக்கால் வேண்டி பிறகு கண்ணாலும் நற்பொருளைக் காணவேண்டும்.

நம்நாட்டு இலக்கியச் செல்வங்களுள் பக்தி இலக்கியங்களில் திருப்பள்ளி எழுச்சிக்கு முக்கியமான ஸ்தானம் உண்டு. இறைவனை துயிலெழுப்புவது ஒரு மரபு. இதையே 'அனந்தல் தீர்த்தல்' என்றும், (திருவனந்தல்) என்றும் குறிப்பர்.

சைவ சமயத்தில் மாணிக்கவாசகரையும், வைஷ்ணவத்தில் தொண்டரடிப்பொடியாழ்வாரையும் துயிலெழுப்பிய தொண்டர் என்று பக்தர் உலகம் போற்றும். இவர்களைப் பின்பற்றி சிதம்பர சுவாமிகள், ராமலிங்கர், பாரதி ஆகியோரும் திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்கிறார்கள்.

சுப்ரபாதம் ஆதிநாளில் பாடப்பட்டது. ஒன்று விசுவாமித்திரர் ராமனுக்குப் பாடிய சுப்ரபாதம்.* இரண்டாவது விஷ்ணு சித்தர் என்ற பெரியாழ்வார் கண்ணபிரானுக்குப் பாடிய சுப்ரபாதம். மூன்றாவது தொண்டரடிப் பொடியாழ்வார் அரங்கனுக்குப் பாடிய சுப்ரபாதம்.

பின்னாளில் மணவாள மாமுனியின் வேண்டுகோளுக்கிணங்க அவரது சிஷ்யர் ஒருவர் பாடியதுதான் இன்று பிரபலமாகியுள்ள ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம்.

திருவரங்கத்தில் ஏழு மதில்கள் நடுவே அறிதுயிலில் ஆழ்ந்திருக்கும் இறைவனை நெஞ்சுருகி வழிபடுகின்றார். தொண்டரடிப்பொடி யாழ்வார், "எங்களைக் கண் விழித்துப் பாராமல் இன்னும் துயில்வது சரியோ?" என்று கேட்கிறார் இறைவனை நோக்கி.

"இயற்கை கண் விழித்துவிட்டது. நின் அடியார்கள் வந்து குழுமி விட்டனர். குடதிசை முடியை வைத்துப் படுத்திருப்பதாலே உதய மாகின்றது தெரியவில்லையோ? உனது திருவருளாலே அஞ்ஞான மாகின்ற இருள் தொலைந்தது; ஞான ஒளி உண்டாகிவிட்டது. இங்கே உன் சந்நிதியிலேதான் எத்தகைய பேராரவரம்! களிறுகளும் பிடிகளும் பிளிறும் ஓசை. முரசுகள் நின் திருப்புகழை முழக்குகின்றன.

---

* ராம லக்ஷ்மணர்கள் விசுவாமித்திரருடன் சென்றபோது தரையில் படுத்து உறங்குகிறார்கள். காட்டில் துயில் எழுப்ப யார் இருக்கிறார்கள்? அவர்களை துயில் எழுப்ப விசுவாமித்திரரே முற்படுகிறார். "கோசலை தேவியின் நற்பேருக்குகந்த இளவலே! ராமனே! கீழ் திசையில் சூரியன் உதிக்கும் நேரமாயிற்று. மக்களுள் சிறந்த நீ எழுந்து கர்மாநுஷ்டானம் செய்யவேண்டும்" என்று எழுப்புகிறார்.

இந்த ஒலிகளெல்லாம் சேர்ந்து அலைகடலின் பேரொலிபோல் முழங்குகின்றனவே! இவை நினது செவிகளுள் விழவில்லையா? அரங்கத்தம்மா, பள்ளி எழுந்தருளாயே!''—என்று பாடுகிறார்.

பொதுவாகக் கொஞ்சும் பொழுதும், பரிந்து குழைந்து பேசும் பொழுதும் ஆண் குழந்தைகளை 'அம்மா!' என்று அழைப்பதிலே இன்பம் காண்கின்றோம். ஆழ்வார் இறைவனை 'அரங்கத்தம்மா!' என்று கொஞ்சிப் பேசுகின்றார். பக்திக் காதலிலே திளைத்த தொண்டர்களது 'ஒலி மாலை'களில் கொஞ்சும் பேச்சுக்குப் பஞ்சமேது?

''மேலும் களிக்கின்ற வண்டுகள் உனக்குக் கலம்பகம் பாடுகின்றன. அவைகளின் ஓசையுடன் கூடிய, தேன் சிந்துகின்ற, மாலைகளை உனது திருவடிகளிலே சாத்தும் பொருட்டுக் கொணர்ந்தேன், தேவாதி தேவனான உன்னைச் சேவிக்க, அமரர்களும், மற்றும் எல்லோரும் வந்திருப்பதையும் கருதாமல் துயில்வது முறையோ!''—என்று பேசுகிறார். பாடிய வாய் தேனூறும் இவரது திருப்பள்ளியெழுச்சி பக்தர்களது மனத்திற்கும் செவிகளுக்கும் பெரு விருந்தாகத் திகழ்கிறது.

இந்தப் பள்ளியெழுச்சி அற்புதமானதொரு கவிதைச் சித்திரம். அன்னம் பனியிலே நனைந்த தன் சிறகுகளை உதறுவதும், கமுகின் மடலிடைக்கீறி வண்பாளைகள் நாறும் காட்சியும், எருதுகளின் கழுத்திலேயுள்ள மணிக்குரலும், ஆயர்குழலிசையும், பெண்கள் தங்கள் ஈரக் கூந்தலை உதறிக்கரையேறும் காட்சியும் நம் நெஞ்சை அள்ளும் தன்மையன.

* * *

அடுத்தபடியாகத் திருப்பள்ளியெழுச்சி பாடிய பெருமை மாணிக்கவாசகரையே சேரும். இங்கே திருவரங்கத்திலே உருவோடு காவிரிப் பெரு நதியிலே துயிலும் இறைவனைப் பாம்பணையிற் பள்ளி கொண்ட கோலத்திலே கண்டு பாடினார் ஆழ்வார். ஆனால் அங்கே இப்பொழுது ஆவுடையார் கோயில் என்று வழங்கும் திருப்பெருந்துறையிலே உருவமற்றவராக எழுந்தருளியிருக்கும் ஆத்மநாதராகிய சிவபெருமானை உள்ளம் உருகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடுகிறார் மணிவாசகப் பெருமான். இவரது திருப்பள்ளியெழுச்சி மிக மிக அழகியது. பாடுகின்றார் :

விசுவரூப தரிசனம்

விசுவரூப தரிசனம் என்றால் ரங்கநாதர் விடியற் காலையில் முதன் முதலில் அளிக்கும் தரிசனம். மூடியிருக்கும் மணிக்கதவின் முன் பிரபோத ஸ்தோத்திரம் (சுப்ரபாதம் என்கிற திருப்பள்ளி எழுச்சி) சொல்லப்படுகிறது. வீணாகானமும் இசைக்கப்படுகிறது. இது என்ன காக்கும் பெருமானுக்கும் அப்படி ஒரு தூக்கமா? முதலில் காராம் பசு, யானை இவை முகத்தில் இறைவன் விழிப்பதாக ஐதிகம். காராம் பசு யானை சேவையானதும் மீண்டும் திரையிடுகிறார்கள். பின் பட்டர் வம்சத்தினர் எம்பெருமானுக்கு பஞ்சாங்கம் சொல்கிறார்கள். அன்றைய நாள் நட்சத்திரங்களையும் சொல்கிறார்கள். அப்புறம் அவர் முகம் கழுவுகிறார்கள்; புத்தாடை அணிவிக்கிறார்கள். இதற்குப் பின்பே விசுவரூப சேவை.

போற்றி வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏத்திநின் திருமுகத் தெமக்குஅருள் மலரும்
எழில்நகை கண்டுநின் திருவடி தொழுவோம்.

"நாங்கள் எத்தகைய மலர் கொண்டு வந்திருக்கின்றோம்! நினது பூங்கழலுக்கு இணையான மலர்கள். நீ அருள் பாலிக்கும் எழில் நகை இருக்கின்றதோ அதுபோன்ற இனிய மென்மையான நறுமலர், எங்கள் இதயமாகிய மலரை நின் சேவடிக்கே வைத்தோம். சேற்றிலே அழகிய தாமரைகள் மலரும். குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்பெருந் துறையிலே உறைகின்ற செல்வமே! சிவ பெருமானே! சேற்றுக் கொப்பான அழுக்குகள் எங்கள் நெஞ்சகத்தே நிறைந்திருந்தாலும், உனது திருஉருவின் நினைவினாலே எங்கள் மனம் தண்ணென்றுதானிருக்கிறது. நான் உன் உடைமையல்லவோ? என் இதயக் கோயிலிலே நீ வந்து அமரவேணும். அதன் பொருட்டுத் துயிலெழவேணும்."

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால் ;
சென்னியில் அஞ்சலி கூப்பின ரொருபால்...

இப்படித் தொண்டர்கள் என்புருகி மெய்சோர உணர்ச்சி வசப்பட்டவர்களாய்க் காட்சி தருவதையும், வேதபாராயணம் செய்வதையும் வகை வகையாகக் காட்டுகின்றனர்.

பிறகு இவைகளெல்லாம் நின் திருவருளைப் பெறும் உபாயங்களே; ஆனால் இதுவரை உன்னைக் கண்டதாக ஒருவரும் சொல்லவில்லையே என்ற ஏக்கம் தோன்ற,

கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்,
கேட்டறியோம் உனை— கண்டறிவாரை

என்றும் பேசுகிறார்.

மேலும் ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையாகப் பேசுகின்றார்கள். இறைவன் இனியவன் என்கிறார்கள்; அதற்கு உவமையாக, அது பழச்சுவைபோல் என்று சிலரும், அமுதம்போல் என்று சிலரும், எளியது ஆனால் அமரராலும் அறிய முடியாதது என்றெல்லாம் சிலரும், ஒன்றுக் கொன்று முரண்படத் தோன்றும்படி இலக்கணம் சொல்லுகிறார்களே! உத்தரகோசமங்கையிலே எழுந்தருளியிருக்கும் பெருந்துறை மன்னா! என்னை எப்படி ஆட்கொள்ளப் போகிறாய்? கொஞ்சம் எழுந்து சொல்லேன்?—என்று ஏக்கத்துடன் கேட்கிறார். இவரது பள்ளியெழுச்சிப் பாடல்கள் கண்ணகத்தே நின்று களிதரும் தேனாகவும் அமுதாகவும் காட்சி தருகின்றன சிவநேச செல்வர்களுக்கு.

* * *

அழகிய ஆடரங்கு, வண்ணச் சிலைகள் காற்றிலே அசைந்தாடுகின்றன. திடும் திடும் என்று மிருதங்கத்தின் இனிய ஒலி கேட்கிறது.

ஜல் ஜல் என்று ஜாலராக்களின் ஓசை. இவைகளின் ஊடே மெல்லிய சிலம்பொலி கலீர் கலீர் என்று ஒலிக்கிறது. அன்ன மென, அல்லவென ஆமென, அடி பெயர்த்துச் சபை நடுவே வந்து கரங்குவித்து வணங்கு கிருள் பரத நாட்டியம் பயிலும் யுவதி. முற்பகுதி முடிகிறது. அடுத்த பகுதி அபிநயம். அழகிய நீலாம்பரி ராகத்தை இசைக்கிறது. பின்னணி கோஷ்டியாரின் குழலிசை, மேடையின் நடுவே நிற்கும் அந்த அழகிய பொற பதுமை பாடுகிறது.

நீலமயில் வாகனனே? நெட்டிலே வேலாயுதனே?
கோல நிறைகோழிக கொடி படைத்த சேவகனே?
ஆறிரண்டு தோளானே? ஆறு முகத்தானே?
திருமறைகள் கொஞ்சும் சிறுசதங்கைத தாளானே!
கானசுந்தரிவேடர் கன்னிகைக சாகப் பரண்மேல்
ஞானங்கமழ் பாதம் நண்ண வைத்த நாயகனே?

என்ற வரிகளுக்கு அபிநயம் பிடிக்கிருள். கவிதையின் இனிமையும், சொற்சுவையும் பொருட் சுவையும் நீலாம்பரியின் குழைவும் சேர்ந்து நம் கண் முன்னே நெட்டிலே வேலாயுதனைக் கொணர்ந்து நிறுத்தி, விடுகின்றன. மெய்சிலிர்ந்துக் கண்கள் பனிசோர உணர்விழந்து போகின்ருேம். பாடல் முடிந்த பிறகு இந்த அற்புதமான கவிதை யாருடையது ?—என்று கேட்க விழைகின்றது மனம். போரூரச் சிதம்பர சுவாமிகள் என்ற பெயரைக் கேட்கவும் 'அடடா!' வென்று திகைத்துப் போகிருேம்.

சமரபுரி என்றும் வழங்கும் திருப்போரூர் முருகனைத் துயிலுணர்த்தும் பாடல்கள் மிக மிக அற்புதமானவை. பொதுவாக இந்தத் திருப்பள்ளி யெழுச்சிகள் எல்லாம் ஏறக்குறைய ஒரே வகையாக அமைந்திருப்பினும் கவிதையழகிலே ஒவ்வொரு வகையாகக் காட்சி தருகின்றன. "திருமலி குணதிசை அருணன் நல்லுதயம் செய்தனன்" என்று தொடங்குகிருர். நமது திருப்பள்ளி யெழுச்சியை சூரியோதயத்துக்கு முன் அருணோதயத்துக்கே சென்று விடுகிறது இவர் மனம். "கன இருள் அகன்றது" என்ருர் தொண்டரடிப்பொடி ஆழ்வார். ஆனல் இவரோ உனது அடியார்களது மனம்போல் பாரகம் ஒளி பெறுகிறது. அவர்களது குணங்கள் உயர்ந்து உயர்ந்து மலை போலத் தோன்றுகிறது. 'குணக்கிரி மேல் அருளொளி வீசி நின்றிலங்கும் நின்பதம் போல் அருக்கனும் எழுகின்ருன்' என்கிருர்.

இதே கருத்தைத்தான் இராமலிங்கர்,

சீர்திகழ் தோகை மயில் மேலே—ஒரு
செஞ்சுடர் தோன்றும் திறம்போலே

என்று சென்னைக் கடற்கரையிலே, தாம் கண்ட சூரியோதயக் காட்சியை வியக்கின்ருர். பெரியோர்களின் கருத்தொருமையை இங்கே காண்கிருேம். மேலும் சிதம்பர முனிவர் எங்களது மன இருளை அகற்றும் அகத்தியனுர் தொழப் போரூரில் எழுந்தருளி நின்ற இறைவனே பள்ளி எழுந்தருளாயே !—என்று போற்றித் துயிலெழுப்புகிருர்.

மன்மதன் விருதுகள் ஊதின பொழில்வாய்
மாயவன் கரப்படை தொனிக்கும் உன் எதிரே
தென்மலி மலரவன் ஊர்திகள் தடத்துள்
சிலம்பின நின்கொடி......

என்று வண்டுகளையும் சங்கு முழங்குதலையும், அன்னங்கள் விழித்தெழுவதையும், கோழி கூவுவதையும் சித்தரிக்கிறார். இப்படிப் போற்றும் இவரது கவிதைகள் சிந்தைக்கு இனிய, செவிக்கினிய, வாய்க்கினியதென்றும் இருவினைக்கு மாமருந்து என்றும் போற்றுவதில் வியப்பென்ன ?

* * *

அடுத்தபடியாக நம் முன்னே வருகின்றார் கவியரசர் பாரதியார். பாரத நாட்டைத் தாயாக வழிபட வேண்டுமென்று வழிவகுத்தவர் பெரியார் பங்கிம் சந்திர மகரிஷி. வந்தே மாதரம் என்ற மகாமந்திரம் நாட்டின் தாரக மந்திரம். அவருக்குப் பின் தோன்றிய கவிஞர் பெருமான் பாரத மாதாவுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுகிறார்.

பொழுது புலர்ந்தது. யாம்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்

மேலும் ஞான சூரியன் உதித்தான் என்ற கருத்தையே,

எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
விழி துயில்கின்றனை இன்னும் என் தாயே !
வியப்பிது காண்! பள்ளி எழுந்தருளாயே!

புள்ளினம் ஆர்த்தன ஆர்த்தன முரசம்
பொங்கியது எங்கும் சுதந்திர நாதம்

என்று சுதந்திர நாதத்தின் ஒலியைக் கேட்கவில்லையா என்று கேட்கிறார். உன் மலரடிக்கு நாங்கள் என்ன பொருளைக் கொண்டு வந்திருக்கிறோம், தெரியுமா?

கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்

எங்கள் இதயமாகிய மலரைக் கொண்டு வந்திருக்கிறோம். இது தெரிந்தும் இன்னமும் துயிலுதியோ என்று கேட்டவர், மேலும் சொல்கிறார்: தாய் எழுந்து மக்களை எழுப்பவேண்டும். அதற்கு மாறாக,

மதலைய ரெழுப்பவும் தாய் துயில்வாயோ ?
மாநிலம் பெற்றவ ளிஃதுணராயோ ?

என்று கேட்கிறார்.

இந்தப் புதுமைப் பள்ளியெழுச்சி தமிழ் நாட்டு மக்களது நெஞ்சிலே சுதந்திரக் கனலை வளர்க்க உதவியது என்பதை நாமெல்லோரும் அறிவோம்.

அதிகாலை ஸ்நானம்

தஸ்மாத் ஸ்நானம் நிபே வேத ஸ்ரீ புஷ்ட்ய
ஆரோக்கிய வர்த்தனம் ।
வியாக்யாம் ஹியாதனும் துக்கம்
பிராத ஸ்நாமி ந பச்யதி ॥

—ஜாபாலி முனிவர்

(புஷ்டி ஆரோக்கியம் தருவது காலை ஸ்நானமே என்பது இந்த சுலோகத்தின் அர்த்தம்.)

பொழுது விடிவதற்கு முந்திய அதிகாலை நேரத்தை பிரும்ம முகூர்த்தம் என்றும் உஷக் காலம் என்றும் போற்றுகிறோம். அந்தக் காலத்தில் அமிழ்ந்து ஸ்நானம் செய்வது உடம்புக்கு மிகவும் ஆரோக்கிய மானது. சித்தத்தை குளிர வைக்கும் தன்மை இந்த ஸ்நானத்திற்கு உண்டு. சூடேறியுள்ள மூளைப்பகுதி குளிர்ச்சியடைந்தால் சிந்தனை மிக சுறுசுறுப்பாக நடைபெறும். இந்த ப்ராத ஸ்நான மகிமை அநேக புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

உடல் மிக மலினமானது. ஒன்பது துவாரங்கள் உள்ளது. இரவும் பகலும் மலத்தை ஏற்படுத்துகிறது. அதை சுத்தம் செய்வதே காலை ஸ்நானம். இதை பின்கண்ட சுலோகம் விளக்கும். இதைக் கூறியவர் தக்ஷர்.

ஸ்நான பலன்

அத்யந்தமடிந: காய: நவசித்ர ஸமப்வித: ॥
ஸ்த்ரவயேவ திவாரந்தம் ப்ராத ஸ்நாநம் விசோவநம் ॥

ஸ்நானம் செய்யுமுன் சங்கல்பம் செய்துகொள்ள வேண்டும். ஸ்நானம் பண்ணும்போது அகமர்ஷண ஸூக்தம் சொல்லவேண்டும். அகமர்ஷண ஸூக்தம் என்றால் பாவத்தை ஒழிக்கும் நல்ல வார்த்தை என்று அர்த்தம். சாதாரணமாக செய்யும் ஸ்நானம் உடம்பு அழுக்கை போக்கும். மந்திரங்களோடு செய்தால் மனதின் அழுக்கும் போய் விடும்.

அமிழ்ந்து நீராடல்

நீராடுதலில் தமிழ் மக்களுக்கு ஒரு விசேஷ விருப்பம் உண்டு. நெடுங்காலமாக நீராட்டத்தை தங்கள் இன்ப விளையாடல்களில் ஒன்றாகக் கருதி வந்திருக்கிறார்கள். புது நீராடல். காவிரி ஆடல், கடல் ஆடல் முதலிய நீராட்டங்கள் தமிழ் மக்களின் சிறந்த பொழுது போக்கு. அப்படியே மார்கழியிலும் தையிலும் பனிநீராடுவதையும்

அனுபவித்து வந்திருக்கிறார்கள். பனி நீராடுவதால் உடலும் நரம்புகளும் உரம் பெற்று சுறு சுறுசுறுப்பாக இருக்கும் என்பதையும் மூளை நலம் பெற்ற மனம் தெளிவுபெறும் என்பதையும் அனுபவத்தால் வெப்பம் மிகுந்த நாட்டினராகிய தமிழர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள்.

இக்காலப் பெண்மணிகள் முக்கியமாக நகரங்களில் வாழ்பவர்களுக்கு அமிழ்ந்து நீராடுவது என்றால் எப்படி என்பது தெரியாது. தண்ணீரில் இறங்கவே பயந்து செம்பினால் தண்ணீரை மொண்டு தலையில் ஊற்றிக்கொள்வார்கள். திருவெம்பாவைப் பெண்கள் எப்படி ஸ்நானம் செய்கிறார்கள் பார்ப்போம் !

குளத்தைக் கண்டதும் 'முகேர்' என்று ஓசை எழும்படியாக தண்ணீரைக் கையால் அடித்து குடைந்து நீராடவேண்டும் என்ற ஆசை அப்பெண்களுக்கு ஏற்படுகிறது. (தண்ணீரிலேயே மிருதங்க சப்தம் வாசிப்பது போல ஒலி ஏற்படச் செய்வது ஒரு அபூர்வ கலை. இது ராஸ லீலையில் ஒரு முக்கிய அம்சம்).

நீரில் குடைந்து நீராடும் போது இறைவனைக் குறித்தும் பாடுகிறார்கள். எத்தொழிலைச் செய்தாலும் ஆண்டவன் நினைவு உள்ளத்தில் இருக்க வேண்டும் எனபதையே இது நினைவூட்டுகிறது. இவர்கள் புனல் பொங்க நீராடுவதாக மாணிககவாசகர் குறிப்பிடுகிறார்.

பொங்கும் மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து
சங்கம் கிலம்பச் சிலம்பு கலந்தார்ப்ப கொங்கைகளி
பொங்க குடையும் புனல் பொங்க பங்கயப் பூம்புனல்
பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

குளத்தில் தாவிக் குதித்து நீராடும் காட்சி அருமையான உயிர் சித்திரம். இவர்கள் குதித்தபோது தண்ணீர் பொங்கி எழுகிறது.

ஒருத்தி "ஐயோ குளிருமே" என்கிறாள். மற்றொருத்தி "எம்பெருமான் ஆடும் சிதம்பரத்தை நினைத்துக்கொண்டே தண்ணீரில் இறங்கிவிடு. குளிர் தெரியாது" என்கிறாள்.

சீதப்புனல் ஆடி சிற்றம்பலம் பாடி சிற்றம்பலத்தில் ஆடும் பெருமானை வாயாரப்பாடி நீராடினால் குளிருமில்லை நடுக்கமுமில்லை என்பது குறிப்பு.

மார்கழியும், தையும் முன்பனிக்காலம். பனிக்காலத்தில் குளிர் மிகுதி. இக்குளிரிடையே மிகக் குளிர்ந்திருக்கும் நீரில் மூழ்குவது ஓர் அருமையான அனுபவமாகும். ஆனால் அவ்வாறு குளித்தவுடன் இயற்கை சூடொன்று உடம்பில் வருவதால் ஓர் இன்பம் தோன்றுகிறது. இயற்கையை எதிர்த்து ஒரு நோன்பு நோற்றோம் என்ற எண்ணம் தோன்றுகிறது. தைந்நீராடல் என்று இதனை ஒரு நோன்பாக முன்னோர் நோற்று வந்தனர்.

மார்கழியின் மகிமை

"மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்னாள்"

முன்பெல்லாம் மார்கழி மாதம் என்றால் விடியற்காலை மூன்று மணியிலிருந்தே பரதேசிகள் (ஆண்டிகள்) அவர்களுக்குத் தோன்றிய பாடல்களைப் பாடிக்கொண்டு போவார்கள்.

பழனியப்பா! நீ வேலவன்தானேடா! என்று ஒரு குரல் கேட்கும். இவன் சோமகலம் என்ற வாத்யத்தின் ஒலியை எழுப்பிக்கொண்டே செல்வான். அந்த அதிகால வேளை நிசப்தத்தில் அதன் ஒலி ஒரு அதிசய உணர்ச்சியை ஏற்படுத்தும். பூம் பூம் என்று சங்கு ஊதிச் செல்வான் மற்றொருவன். ஒருவன் பாடுவான்,

மாடு கிடக்குது மந்தைதையிலே—அந்த
கிருஷ்ணன் கிடக்கிறான் மனக் கூண்டுககுள்ளே
என்ற சித்தர் பாடலை.

மற்றொரு குரல் 'சூரிய பகவான்' 'சந்திர பகவான், 'ஜே! சீதாராம்' என்று கூறும் இவருக்கு பாடத் தெரியாது. எதையாவது சொல்லவேண்டும் அதற்காக இந்த உத்தி. இம்மாதிரி பலர் வருவார்கள். எதுவும் யாசிக்கமாட்டார்கள். மார்கழி மாத முடிவில் பொழுது புலர்ந்தபின் வந்து இஷ்டப்பட்டு கொடுப்பதை வாங்கிக்கொள்வார்கள்.

தினம் காலையில் இவர்கள் போனபின் ஆனந்தமான பஜனை கேட்கும். என் வீட்டின் வாசலுக்கு அப்பஜனை கோஷ்டி வரும்போது 'ஹரே ராம் கோபாலம், பஜகோவிந்தம் மம ஜீவனம்' என்று துரித நடையில் எல்லோரும் சேர்ந்து பாடுவதை கேட்க கேட்க இனிமையாக இருக்கும். இத்தெய்வீகப் பஜனைப் பாடல்களின் கருத்து புரிகிறதோ இல்லையோ, கேட்பவர் மனம் இறைவனிடம் லயிக்கச் செய்கிறது.

இறைவன் எளிதில் இறைவசப்படுகிறான் என்பது சாம கானத்தைப் பாடி சிவனின் அருளைப் பெற்ற இராவணனையும், கலியுலகத்தில் இராமனின் புகழ் பாடி முக்தி அடைந்த தியாகராஜ சுவாமிகளையும் உதாரணமாகக் கொள்ளலாம். இசைக்கு விலங்கினமே மயங்கும்போது, கடவுளைப் பற்றி என்ன சந்தேகம்? இசையின் மூலம் இறைவனை அடைவது தவ முறையைவிட எளியதாகும். நாமும் இத் திருப்பாவை திருவெம்பாவைப் பாடல்களை இசையுடன் பக்தியாய் ஓதினோமானால் கடவுள் அருள்பாலிப்பது திண்ணம். ஆண்டவன் அருள் திறம் சொல்லிலும் அடங்காது, பொருளிலும் அடங்காது அது எல்லா வற்றிற்கும் மேம்பட்டது. நாம் பக்தியுடன் பூசித்தால். அவன் மனம் வெண்ணெயைப்போல் உருகி, நம்மிடம் நிச்சயம் அருள் காட்டுவான் என்பது முழு உண்மை. அதற்கு சான்று இல்லை? 'ஆதி மூலமே' என்று யானை அழைத்தபோது ஓடி வரவில்லையா? தந்தையன்புக்கு ஏங்கித் தவம் புரிந்த சேய் துருவனை ஆட்கொள்ளவில்லையா? "தூணி லிருப்பவனைக் கூப்பிடு" என்று அட்டகாசமாகத் தகப்பன் கூற, மகனின் கூற்றை மெய்பிக்க வேண்டி வரவில்லையா? ஆகவே கடவுள்

அருள் தன்மை படைத்தவன் மட்டுமல்ல, அவன் அண்டினோரை எப்போதும் காக்கக் கூடியவனுமாகும்.

மாரிவேந்தனை வென்று பனியரசன் ஆட்சிக்கு வந்துவிட்டான் என்பதைக் கட்டியங் கூறிக்கொண்டு வருகிறது மார்கழி மாதம். அவ்வரசனது வெற்றியில் மகிழ்ந்து கரும்பும், கருவிளையும் மலர்கின்றன; தோன்றியும், கோடலும் பூத்துத் தோன்றுகின்றன; அவரை முகையவிழ்கின்றது. மலர்கள் மட்டுமன்று; மக்களின் உள்ளத்திலும் இம்மாதம் பிறந்துவிட்டால் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது; என்பினையும் உருக்கும் குளிர் உடலுககுத் துன்பந் தந்த போதிலும், அதனைக் கருதாது இத்திங்களின் ஒவ்வொரு நாளையும் நன்னாளாகப் போற்றிக் கொண்டாடுகின்றனர் மக்கள். இவ்வாறு அனைவராலும் போற்றப்படும் இம்மாதத்தைச் சிலர் 'பீடை மாதம்' எனக் கூறுவராயின், அது அறியார் கூற்றேயாகும்.

மார்கழி சாந்திரமானத்தில் 'மார்க்க சீர்ஷம்' என்றும், ஸௌரமானத்தில் தனுர்மாஸம் எனவும் பெயர். மார்க (வழி) சீர்ஷம் (தலைமையானது) ஆகவே ஆன்மவழியில் செல்ல சிறந்த மாதம் இதுவே. இம்மாதத்தை சிவபெருமான் திருமால்—ஏன்! காத்யாயனியும் தத்தாத்ரேயரும்கூட உகந்துள்ளார்கள்.

இம்மாதத்திய திருவாதிரை * அன்று வியாக்கிரபாதர் பதஞ்சலி முனிவரிலையில் வைகறையில் சிவபெருமான் நடனம் ஆடி மகிழ்வித்தார். திருமாலும் இம்மாதத்தையே மிகவும் உகந்தார். அவர் கண் விழிக்கும் வைகுண்ட ஏகாதசி இம்மாதம்தான் வருகிறது. ராமனுக்கு இம்மாதமே பிடித்திருந்தது என்று ராமாயணத்திலிருந்து தெரிய வருகிறது. வைகுண்ட வாசல் திறக்கப்படுவதும் இம் மாதத்தில்தான். இருபது நாள் திருநாள், பகல் பத்து (திருமொழித் திருநாள்) இராப்பத்து (திருவாய்மொழித் திருநாள்) பெருமாள் கோவில்களில் நடப்பதும் இம்மாதத்திலேயேதான்.

---

* திருவாதிரை ஒருகாலத்தில் சூரிய ராசியின் தொடக்கமாக இருந்ததாம். பூமி சுழல்வதன் பயனாக இவ்வாறு தொடங்குமிடம் பல நூற்றாண்டுகளில் மெல்ல மெல்ல மாறிவருமாம். திருவாதிரையிலிருந்து கார்த்திகை முதலாக மாறியிருந்த காலமும் அசுவினி முதலாக மாறியிருந்த காலமும் உண்டு இப்போது புரட்டாசி முதலாக உள்ளது என்பர். திருவாதிரை முதலாவதாக இருந்தபோது வேதம் எழுதப்பட்டது என்பது லோகமான்ய பாலகங்காதரர் கொள்கை. கார்த்திகை மாதமே ஆண்டின் முதல் மாதமாகவும் இருந்ததுண்டு. ஞானசம்பந்தருடைய கோளறு பதிகத்தில் வழிநடைக்கு ஆகாத நட்சத்திரங்களைக் குறிப்பிடும் போது "ஒன்பதோடு ஒன்றோடு எழுபதினெட்டோடு ஆறும் உடனாய நாட்கள்" என்று கிருத்திகையை முதலாக வைத்தே எண்ணுகிறார் என்பர். ஆனால் அவருக்கு முன் காலத்திலேயே அசுவினி முதலாக வைத்து எண்ணப்பட்டு விட்டது. வடநாட்டில் வருஷப்பிறப்பு தீபாவளியன்று பிறப்பது இதனையொட்டியே எனலாம்,

தொண்டரடிப்பொடி ஆழ்வாரும், ராமானுஜருடைய ஆசாரியரான பெரிய நம்பிகளும், சைவ அடியார்களில் இயற்பகை நாயனார் நந்தனார் முதலியவர்கள் அவதரித்த மாதம் இது. ஹேமந்த நவராத்திரி முன்பு இம்மாதமே கொண்டாடப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கீதையில் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். இம்மாதத்தை நம் முன்னோர்கள் பக்தி செலுத்துவதற்காகவென்றே ஒதுக்கியுள்ளனர். உத்தராயனம் ஆறு மாதங்களும் விண்ணவர்களுக்கு பகற்காலம். தக்ஷிணாயனம் இரவானால் அதன் கடைசி மாதமான மார்கழி தேவர்களுக்கு உஷக்காலமல்லவா? அந்த காலம் அமரருக்கும் அனைவருக்கும் இறைவனருளைத் தேடித் தரும் காலம். அந்த ஒரு மாதமாவது காலையில் தமோ குணத்தால் ஏற்படும் நித்திரை சோம்பல் இவைகளுக்கு இடமளிககலாகாது.

நித்தியமே கூறவேண்டும் என்றுள்ள பிராதஸ்மரண சுலோகங்களை இம்மாதத்திலேனும் கூறுதல் நல்லது.

கேசவ, நாராயண என்கிற விஷ்ணுவின் 12 பெயர்கள் 12 மாதங்களுக்கு வைக்கப்பட்டுள்ளன. இதில் 'கேசவ' என்ற முதல் நாமம் மார்கழிக்கு உரியது.

இம்மாதம் கிரி பிரதக்ஷிணம் மிகவும் பலனைத் தரக்கூடியது. ஆலயத்தை சுற்றி பஜனை செய்வது, கிரி பிரதக்ஷிணப் பலனைத்தர வல்லது. ஸாத்விகமானதும் பித்ரு தேவர்களுக்குப் பிரியமானதுமான பயத்தம் பருப்புடன் கலந்த பொங்கலை நிவேதனம் செய்வதும் அதை அடியார்க்கு அளிப்பதும் மிகச் சிறந்ததாகும்.

மார்கழி மாதச் சிறப்பு ராமாயணத்தில் காணப்படுகிறது. பஞ்சவடியில் சரத் ருது முடிந்து ஹேமந்த ருது ஆரம்பிக்கும் மார்கழியில் ஒரு நாள் பொழுது புலரும் நேரம், ராமன், சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் அழகிய கோதாவரி நதி தீரத்துக்கு நீராடச் செல்லுகிறான். அப்பொழுது இந்த ஹேமந்த காலத்தையும், மார்கழி மாதத்தையும் லக்ஷ்மணன் புகழ்ந்து வர்ணிக்கிறான். இந்த வர்ணனை ஆரம்பிக்கு முன்னே, வால்மீகி "பகவானான ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு மிகவும் இஷ்டமான ஹேமந்தருது வந்தது" என்று சொல்கிறார். லக்ஷ்மணனும், ஸ்ரீராமா, உமக்கு பிரியமானதான காலம் வந்திருக்கிறது" என்று ஆரம்பிக்கிறான். இந்த மார்கழியினால் ஆண்டு முழுவதுமே அலங்கரிக்கப்பட்டதுபோல விளங்குகிறது" என்கிறான் லக்ஷ்மணன். மார்கழி என்ன அலங்காரத்தைக் கொடுக்கிறது என்று சற்று யோசித்தால், அயோத்தியில் தாம் அனுபவிக்கக்கூடிய நகர அழகு ஒன்றை இளையபெருமாள் நினைத்துக் கொண்டார் என்பது தோன்றும்.

கடவுளின் வழிபாட்டிற்கு எடுத்தது இம் மார்கழி மாதம் என்ற சிறப்பை தவிர மார்கழி மாதத்திற்கும் பெண்கள் இறைவனை வழிபடுவதற்கும் தனியே தொடர்பொன்றும் இருக்கிறது.

விஷ்ணு தர்மோத்தர புராணத்தில் அழகை அடையும் பொருட்டு மார்கழி மாதத்தில் ' லாவண்யா வாப்தி" விரதம் என்ற ஒரு ஒழுக்கம் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விரதத்தில் 'ஹவிஸ்' அன்னமே உட்கொள்ளவேண்டும்.

கருமணியுள் ஆடும் இரு பாவைகள்

என்னிரு கண்ணே
கண்ணிற் கருமணியே
மணியாடு பாவாய் —திருநாவுக்கரசர்.

சைவமும், வைஷ்ணவமும் நமது இரு கண்கள். அக்கண்ணின் கருமணியுள் ஆடும் பாவைகள் தான் திருவெம்பாவையும திருப்பாவையும். இவ்விரு பாவையின் உதவி பக்திப் பாதையில் மனதை திருப்ப பெரிதும் பயன்படுகிறது.

பாவை என்றால் கண்ணிலுள்ள பாப்பாவைக் குறிக்கும். பெண்ணைக் குறிக்கும். பொம்மையையும் கூறிக்கும். ஒரு நோன்பையும் குறிக்கும். இந் நோன்பு மிகப் பழமையானது. திருப்பாவையும் திருவெம்பாவையும் தோன்றுவதற்கு முன்பே தமிழர்கள் நெடுங்காலமாக வழி வழியாக அனுஷ்டித்து வந்த நோன்பு. இதை 'தொல் பாவை' என்று நாதமுனிகளுக்குப் பின் தோன்றிய உய்யக்கொண்டார் குறிப்பிடுகிறார்.

ஆழ்வாராதிகள் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் இந்த நோன்பு வழக்கம் இருந்து வந்திருக்கிறது. மக்கள் உள்ளத்தில் எளிதாகப் பழகி வந்த பாட்டுக்களில் பாவைப் பாட்டும் ஒன்று. அம்மானைப் பாட்டு, கும்மிப் பாட்டுப்போல இதுவும் ஒன்று. ஆதியில் இப்பாவைப் பாட்டுகள் சமயத் தொடர்பு இல்லாமல் இருந்திருக்க வேண்டும். பின்னர்தான் சைவர்களும், வைஷ்ணவர்களும் பாவைப் பாட்டுக்குப் புத்துயிர் கொடுத்து பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஆன்றோர் பண்டை நாட்களிலேயே இப்பாவை விழாவைக் கொண்டாடினர் என்பதை "மேலையார் செய்வனகள்" என்று திருப்பாவையில் வரும் பகுதியில் காணப்படுகிறது. ஆகவே லௌகீக அடிப்படையில் தோன்றிய பாவைப் பாட்டை மாணிக்கவாசகரும் ஆண்டாளும் சமயத் தொடர்புள்ளதாக அமைத்திருக்கிறார்கள்.

இரு பாவைகளிலுமுள்ள ஒற்றுமைகள்

திருவெம்பாவை பாடிய மணிவாசகர் மதுரைக் கருகிலுள்ள திருவாதவூரிலும், ஆண்டாள் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் அவதரித்தவர்கள். இருவர் வாழ்க்கையும் ஆன்மா கடைத்தேறும் வழியைக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. இருவரும் இறைவனுடன் இரண்டறக் கலந்தவர்கள். இவர்கள் வாழ்ந்த காலத்தைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் முடிவு பெறவில்லை. இவர்கள் எக்காலத்தவராயினும் இவர்கள் அருளிய தெய்வீகப் பாடல்களும் இவர்கள் புகழும் எக்காலத்திற்கும் உரியன,

திருவெம்பாவையில் கன்னியர்கள் நாடு செழிக்க பாடிய மழைப் பாட்டு உள்ளது. தக்க கணவரைப் பெற இக்கன்னியர் ஆசைப் பட்டார்கள் என்றும் அறிய முடிகிறது. திருப்பாவையிலும் மழைப் பாட்டு வருகிறது. கண்ணனை தலைவனைப் பெற கோபியர்கள் விரும்புவதையும் காண்கிறோம். இங்கே இந்தத் தொடர்பு ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ளத் தொடர்பை நினைவூட்டு கிறது.

ஆனந்தமான அதிகாலைக் காட்சிகளையும், இன்ப ஒலிகளையும் இரு பாவைகளிலும் காணலாம். இயற்கை அழகு இரு பிரபந்தங்களிலும் வருணிக்கப்படுகின்றன. அருணோதயமும் (சூரியன் வெளிப்படும் முன் தோன்றும் செக்கச் சிவந்த வானம்) சூரியோதயமும் மிக அழகாக இரண்டிலும் வருணிக்கப்பட்டுள்ளன. சித்தாந்த வேதாந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றன.

இவ்விரண்டு பாவைகளிலும் முக்கிய நோக்கம் கைங்கரியப் பிரார்த்தனைதான். கண்ணன் காதலும் கைங்கரியமும் வாய்க்கப்பெற வேண்டும் என்பது திருப்பாவையில் பிரார்த்தனை. சிவனடியார்க ளிடம் அன்பு வேண்டும் என்பதும், அத்தகைய அடியவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவரே கணவராக வாய்க்க வேண்டும் என்பதும் அவர்களுக்கும் சிவபெருமானுக்கும் கைங்கரியம் செய்யவேண்டும் என்பதும் திருவெம்பாவையில் கன்னிப்பெண்களின் பிரார்த்தனை. இந்த நோக்கம் இரு பாவைகளிலும் இறுதி பாசுரத்திற்கு முந்தியப் பாடலாகக் காணப்படுகிறது.

கைங்கர்யம்—சின்னியம்மாள் இரகசியம்

"குருநாதரிடம் நீ பிரார்த்திப்பது என்ன?" என்ற கேள்விக்கு மேலும் மேலும் கைங்கரியம் புரிய வாய்ப்பு வேண்டும் என்பது சின்னியம்மாளின் விடை. பலன் எதையும் எதிர்பார்க்கவில்லையே என்ற கேள்விக்கு 'கைங்கரியம்தானே பலன்" என்று அந்த பக்தை கூறினாள்.

இதற்கு 'சின்னியம்மாள் இரகசியம்' என்கிறது ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை வரலாறு.

கைங்கரியத்தின் பலன் கைங்கரியமே என்பது சின்னியம்மாள் கண்ட ரகசியம்.

தொண்டரடிப் பொடியாழ்வார் கைங்கரிய லக்ஷணத்தைப்பற்றி விளக்குவதாவது :

மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிக உணர்ந்து
ஆம்பரிசு அறிந்துக் கொண்டு ஐம்புலன் அகத்தடக்கி
காமபரத்தலை சிதைத்து உன் கடைத்தலை இருந்து வாழும்
சோம்பரை உகத்தி போலும் சூழ் புனல் அரவத்தானே

—திருமாலை பிரபந்தம்

இதில் கைங்கரியம் புரிபவரை வாழும் சோம்பர் என்கிறார் ஆழ்வார். அதாவது சொந்த லாபம் என்றால் சோம்பியிருப்பார்கள். உலக நலம் அன்பர் பணி, ஆண்டவன் பணி என்றால் தங்களை முழுக்க முழுக்க இழந்து விடுவார்களாம்.

மழையே மழையே வா! வா!

இரு பாவைகளிலும் ஒருமித்தக் கருத்துகளுடன் பல ஒருமித்த சொற்களேயும் காணலாம். திருவெம்பாவையில் 16-வது பாட்டு மழைப் பாட்டு. திருப்பாவையில் 4-வது பாட்டு மழைப் பாட்டு. மூன்ருவது பாட்டிலும் மழை தவருது பெய்து நாடு செழிக்கவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ளப்படுகிறது. திருவெம்பாவையில் மழையை தேவிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

இறைவி "யிட்டிடையின் மின்னிப் பொலிந்து எம்பிராட்டி
திருவடிமேற் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித்
திருப்புருவம் என்னச் சிலே குலவி அன்பர்க்கு
முன்னியவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழிவாய் மழையேலோரெம்பாவாய்

இம்மழைப் பாட்டில் மேகம். மின்னல். இடி, வானவில், மழை எல்லாம் பராசக்தியை நினைப்பூட்டுகின்றன. உமையம்மையின் அருளே அப்படி பெய்கிறது என்பதுபோல மழை பெய்யவேண்டுமாம்.

உமையை 'உடையாள்' என்று எம்மை ஆளுடையாள் என்றும் குறிப்பிடுகிருர்கள். கடைசியில் 'அவள்' என்று சுட்டிக்காட்டுகிருர்கள். இப்படி ஐந்து முறையாக உலக அன்னேயை குறிப்பிடுகிருர்கள்.

திருப்பாவையில் கண்ணனுடைய அருள்போல மழை பொழிய வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிருர்கள்.

"ஆழி மழைக்கண்ணு ஒன்று நீ கைகரவேல்" என்ற பாட்டில் "ஊழி முதல்வன் உருவம்போல மெய்கருத்து பத்மநாபன் கையில் ஆழிபோல மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து தாழாதே சாரங்கம் உதைத்த சரமழைபோல் வாழ உலகினில் பெய்திடாய்" என்று பிரார்த்திக்கிருர்கள்.

இரு பாவைகளிலுமே மழைக்கு கட்டளேதான் இருக்கிருர்கள். திருப்பாவை கன்னிகளுக்கு கண்ணனிடம் ஆசை, கண்ணன் அழகில் ஆசை, அவன் மேனி நிறத்தில் ஆசை.

"கோழிச் சிலம்பச் சிலம்பும் குருகெங்கும் எழில் இயம்ப இயம்பும் வெண் சங்கம்" என்பது திருவெம்பாவை. "புள்ளும் சிலம்பின காண், புள்ளரையின் கோயில் வெள்ளே விரிசங்கின் பேரரவம் கேட்டிலேயோ" என்பது திருப்பாவை. 'கேடில் விழுப்பொருள்கள் பாடினேம் கேட்டிலேயோ" என்கிறது திருவெம்பாவை. 'கீசு கீசு என்றும் ஆனேச்சாத்தன் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலேயோ" என்பது திருப்பாவை.

மாணிக்கவாசகருக்கு இறைவன் கண்ணுக்கினியனுக தோன்று கிருன். ஆண்டாளுக்கு கண்ணன் மனதுக்கினியனுக தோன்றுகிருன்.

திருப்பாவை முதல் பாட்டில் "மார்கழி நீராட மகிழ்தேலோ ரெம்பாவாய்" என வருகிறது திருவெம்பாவைக் கடைசி பாட்டில் "போற்றியாம் மார்கழி நீராடலோ ரெம்பாவாய்" என்று அப்பாட்டி லுள்ள எட்டு போற்றிகளில் கடைசி போற்றியாக அமைந்துள்ளது.

கோதை அவதார விளக்கம்

பூர்வம் வாரிநிதௌ வராஹ லபுஷா மக்னும் ஸமுத்ருத்ய மாம்
அங்கே நாத நிதாய ஸர்வ ஸுகர:
முக்தே ருபாயஸ்த்வயா, மாலா கேய சமர்ப்பணம் மம முநேத்
துக்தம் தமே வாதுனு
ஜாதாஹம் புவி தர்சயாமி க்ருபயா த்வம் தேஹ்யனுக் ஞாமிதி ||

(பூமிதேவி ஆண்டாளாக அவதரித்ததை இந்த சுலோகம் குறிப்பிடுகிறது.)

பூமாதேவி பொறுமையுடன் மட்டுமின்றி அளவிலாக் கருணையுமுள்ளவள். அவள் ஒரு சமயம் தன் பதி ஸ்ரீமந் நாராயணனை "உலகில் ஏன் சிலரைக் கஷ்டப்படச் செய்கிறீர்கள். சிலரை ஏன் சுகப்படச் செய்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"எனக்கு எல்லாரும் ஒன்று தான். அது அவரவர் பாபம், புண்ணியத்தின்படி நடக்கிறது" என்றார் நாராயணன்.

"அது எப்படி!"

"நேர் வழியில் போனால் சுகமாக சுலபமாக போய்ச் சேரலாம். குறுக்கு வழியில் போய் கல்லும் முள்ளும் குத்தி அவஸ்தையை வரவேற்றால் அதற்கு யார் பொறுப்பு?"

"அவர்கள் நேர்வழி செய்யும்படி எப்படி செய்வது?"

"என்னை நினைத்தாலே போதும். என்னை நினைத்து ஒரு பூவைப் போட்டாலும் போதும். என்மீது ஒரு பாமாலை பாடினாலும் போதும். அதைக்கூட பலர் செய்யாமல் இருக்கிறார்களே!"

அப்போதுதான் மகாவிஷ்ணு நம்பாடுவான் என்பவரின் வரலாற்றை பூதேவிக்கு எடுத்துச் சொன்னார்.

"திருக்குறுங்குடியில் ஒரு தாழ்ந்த ஜாதியில் பிறந்தவர் இவர். நினம் விடியற்காலையில் கோயில் முன் நின்று என்னைப்பாடுவான். கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷம் துவாதசியன்று மிக அதிகாலையில் நீராடி தன் வீணையுடன் கோயில் நோக்கி கிளம்பினார் நம்பாடுவார். அவரை ஒரு பிரும்மராக்ஷஸ் வழி மறித்து அவரை உண்பதாக பயமுறுத்தியது.

"நான் மரணத்திற்கு அஞ்சவில்லை. கோயில் எதிரில் போய் பாடிவிட்டு வந்துவிடுகிறேன். அதுவரை பொறுத்திரு" என்றார். நம்பாடுவார். தான் சொன்ன சொல்படி நிச்சயம் திரும்பி வருவதாக

சத்தியம் செய்து கொடுத்தார். பிரும்ம ராக்ஷஸும் அவரைப் போக விட்டுக் காத்திருந்தது.

சத்தியம் செய்த பிரகாரம் நம்பாடுவார் திரும்பி வந்தார். பிரும்ம ராக்ஷஸுக்கு பெரும் வியப்பாகி விட்டது. "தப்புவதற்கு வழியிருந்தும் திரும்பிவந்து விட்டாயே!" என்று கேட்டது.

"எனக்கு சாவுக்கு பயமில்லை. சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டாமா? அதனால் வந்தேன்" என்றார் நம்பாடுவார்.

"கோவிலுக்குப் போய் என்ன செய்தாய்" என்று பிரும்ம ராக்ஷஸ் கேட்டது. "கோவில் முன் நின்று பாடினேன்" என்றதும் "என்ன பாடினாய்" என்று அது கேட்டது.

நம்பாடுவார் தான் கைசிக பண்ணில் அமைந்த சில பாடல்களைப் பாடியதாகக் கூறி ஒரு பாசுரத்தைப் பாடினார்.

நின்ற வினையும் துயரும் கெட மாமலரேந்தி சென்று
பணிமின், எழுமின், தொழுமின், தொண்டர்காள்
என்றும் இரவும் பகலும் வரிவண்டிசை பாட
குன்றின் முல்லை மன்றிடை நாறும் குறுங்குடியே

இப்பாட்டை ரசித்துக் கேட்டுக்கொண்டிருந்த பிரம்மராக்ஷஸ், பாட்டு முடிந்த உடன் காணப்படவில்லை. அது ஒரு திவ்யமான ருபத்தை அடைந்தது.

"என் பெருமைகள் நிறைந்த திவ்ய தேசத்தின் பெருமையை உள்ளம் நனையக் கேட்டதின் பயனாகவே அந்தப் பேயின் பேய்த் தன்மை அகன்றது.

"ச்வபாகச் சாபி ஸுச்ரோணி மமசை வோப காயக: |
க்ருத்வாது விமலம் கர்ம ஸப்ரம்மத்வ மு பாகத: |"

என்றபடி நம்பாடுவானும் "ஏதத்ஸாமகாயன் ஆஸ்தே" என்றவாறு தன் வாழ்நாள் முழுவதும் இதைப்போல் தன் பணியைச் செய்து கொண்டு வந்து, முடிவில் எனது பெரிய வீடாகிய மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைந்தான். அந்தப் புனித நாள்தான் 'கைசிகத்வாதசி' என்று போற்றப்படுகிறது. "தேவி கதை புரிந்ததா?" என்று கதையை முடித்தார் பரமன்.

"புரிந்தது ஸ்வாமி, பாசுரத்தைப் பாடிய அந்திம ஜாதிக்காரனும் அதைக் கேட்ட பிரம்மராக்ஷஸும் நற்கதி அடைந்ததுதானே இதன் சாரம்!"

"ஆமாம்; நான் ஜீவராசிகளுக்கு இதைவிட சுலபமான வழி என்ன காட்ட முடியும். இதைப்போலவே ஒரு புஷ்பத்தை எடுத்து எனக்கு அர்ப்பணம் செய்தாலும் நான் திருப்தி அடைந்து நற்கதி அளிப்பேன். அதைக்கூடச் செய்யாமலிருந்தால் நான் என்ன செய்ய?"

பூமிதேவி ஏதோ யோசிக்கத் தொடங்கினாள்.

பகவான் அவளைப் பார்த்து, "என்ன தீவிர யோசனை" என்றார்.

"ஒன்றுமில்லை சுவாமி. எனக்கு ஒரு ஆசை. அதை நிறைவேற்ற அருள் புரியவேண்டும்."

"என்னம்மா அந்த ஆசை?"

"சுவாமி! நான் ஒரு தடவை பூமியில் பிறந்து பாமாலையினாலும், பூமாலையினாலும் தங்களை அர்ச்சிக்க, உலகிற்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டுமென்பதே என் ஆசை" என்று சொன்னாள் பூமாதேவி.

பகவானும், "அப்படியே ஆகட்டும். நான் ஸ்ரீவில்லிப்புத்தூரில் வடபத்ர சாயியாக அர்ச்சையிலிருப்பேன். அப்பொழுது கருடாழ்வார் விஷ்ணு சித்தராக அவதரித்து திருத்துழாய் கைங்கர்யம் செய்வார். அவரது திருக்குமாரத்தியாக திருத்துழாய் தோட்டத்தில் நீ தோன்றி பாமாலையும், பூமாலையும் சூட்டலாம்" என்றார்.

அதன்படியே பூமிதேவி கோதையாகப் பிறந்து உலகை ஆண்டு ஆண்டாளெனப் பெயர் பெற்றாள். இதுவே அவள் அவதரிக்கக் காரணமாக இருந்த கதை.

நாயக நாயகி *பாவம்

பகவானிடம் ஊறும் அன்புக்கு அருள் என்று பெயர். பக்தனிடம் ஊறும் அன்புக்கு பக்தி என்று பெயர். உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் ஸ்திரீகள்தான். புருஷன் பகவான் ஒருவனே. புருஷன் என்ற சப்தத்திற்கு பூரணன் என்று பொருள். எல்லா உலகங்களிலும் நிறைந்திருக்கும் தத்துவமே பூரணம். உலகமெங்கும் பூரணனாயிருக்கும் பகவானை தன் மனத்தில் கொண்டவர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் சுமங்கலிகள்தான்; அவர்களே கற்புடையவர்கள். பகவானை நினைக்காமல் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் விதவைதான்.

இறைவனிடம் பக்தி செலுத்துவதில் பல முறைகள். அவைகளில் ஒன்று நாயக நாயகி பாவம். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஸ்ரீமந் நாராயணன் ஒருவன்தான் புருஷன். அதனால்தான் அவருக்கு புருஷோத்தமன் என்ற பெயரும் உண்டு. மற்ற ஜீவன்கள் எல்லாம் பெண் குலமே. இதனால்தான் ஆழ்வார்கள் எல்லோருமே இறைவனைக் காதலனாகவும், தங்களை காதலியாகவும் பாவனை செய்து ஏராளமானப் பாடல்களைப் பாடியுள்ளனர். ஆனால் உண்மையிலேயே பகவானிடம் காதல் கொண்டு அவனையே மணந்தவள் கோதை. அவள் வரலாறு மிக சுவையான கதை.

---

* ஆழ்வார் என்பதற்கே நல்ல யௌவனமான நங்கை என்று அர்த்தம். பழைய கோவில் கல்வெட்டுகளில் ஒரு ராஜா ஒரு ஸ்திரீயைக் கலியாணம் செய்துகொண்டான் என்றால் இந்த ராஜாவுக்கும் இந்த ஆழ்வாருக்கும் திருமணம் நடந்தது என்று பொறிக்கப்பட்டிருக்குமாம்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

ஸ்ரீவில்லிப்புத்தூரில் விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வாரின் துளசிவனத்தில் ஒரு பெண் குழந்தையாக அவதரிக்கிறாள் கோதை.* அவராலேயே மகளாக வளர்க்கப்படுகிறாள். பெரியாழ்வார் வடபத்திரசாயிக்குத் திருப்பணி செய்கிறவர். புஷ்ப மாலை கட்டி தினம் இறைவனுக்கு சாத்த அனுப்பி வருபவர். ஒருநாள் கோதை அம்மாலையை எடுத்து தலையில் அணிந்து கண்ணாடியில் அழகு பார்க்கிறாள். பின்னர் இருந்த இடத்திலேயே வைத்துவிட்டுப் போய் விடுகிறாள். இப்படி ஒருநாளல்ல; பலநாள் நடக்கிறது.

கடைசியில் ஒருநாள் கோதை மாலையை அணிந்து, அழகு பார்த்துக்கொண்டிருக்கும்போதே வந்து விடுகிறார் பெரியாழ்வார். 'அடடா' என்ன அபசாரம், அபசாரம்! ஸ்ரீ பரந்தாமனுக்கு அணிய வேண்டிய மாலைகளை இந்தப் பெண் அணிந்திருக்கிறாளே' என்று வருத்தமுற்று அவளைக் கண்டிக்கிறார். அன்று அவர் அந்த மாலைகளை ஒதுக்கிவிட்டு, திரும்பவும் மலர் பறித்து மாலை கட்டி கோயிலுக்கு எடுத்துச் சென்று சமர்ப்பிக்கிறார். அன்று மாலையணிந்த பரந்தாமன் பொலிவுடையவனாகக் காணப்படவில்லை. அன்றிரவிலேயே பெரியாழ்வாரது கனவிலே, பரந்தாமன் வந்து, 'அடடா! என்ன தவறு செய்து விட்டீர்? உமது மகள் கோதை சூடிக்கொடுத்த மாலைகளே எனக்கு உகந்தவை. அவைகளை அணிவதிலே தான் நான் மகிழ்ச்சியடைகிறேன்' என்கிறான். அன்று முதல் கோதை சூடிக்கொடுத்த மலர் மாலைகளே பரந்தாமனுக்குச் சூட்டப்படுகின்றன. கோதையும் பரந்தாமனுக்குப் பூமாலை மட்டும் அல்ல, பாமாலையுமே சூட்டத் தொடங்கினாள். 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்ற திருப் பெயராலேயே அழைக்கப்படுகிறாள். இவளே பரந்தாமனையும் ஆட்கொள்ளும் ஆண்டாள் ஆகிறாள். அவள் தன் காதல் எல்லாம் நல்ல நல்ல பாட்டாகவே வெளி வருகின்றன.

எழில் உடைய அம்மனையீர்! என் அரங்கத்து இன்னமுதர்
குழல் அழகர், வாய் அழகர், கண் அழகர், கொப்பூழில்
எழுகமலப்பூ அழகர், எம்மானார் என்னுடைய
கழல் வளையைத் தாமும் கழல் வளையே ஆக்கினரே

என்று மிக்க ஆதங்கத்துடன் நைகிறாள். தன்னை வருத்தும் மன்மதனையே கூவி அழைத்து,

ஊனிடை ஆழிசங்க உத்தமர்க்கென்று
உன்னித்து எழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்
வாழ்கில்லேன் கண்டாய் மன்மதனே!

என்று எச்சரிக்கை செய்கிறாள். இப்படிக் கண்ணன் எனும் கருந் தெய்வத்தினிடத்துக் காட்சிப் பழகிக் கிடப்பவள்,

---

* ஸ்ரீ ஆண்டாள் ஆடி மாதம் பூர நக்ஷத்திரம் சுக்லபக்ஷம் சதுர்த்தி கூடிய செவ்வாய்க்கிழமையன்று அவதரித்தாள். திவ்ய பிரபந்தம் பாடியவர்களில் இவள் ஒருவள் தான் பெண்.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக்

கனாக் காண்கிறாள். அந்தக் கனவும் நனவாகிறது. தென்னரங்கத்து இன்னமுதனே வந்து ஆண்டாளைத் தன் மனைவியாக ஏற்றுத் திருமணம் செய்து கொள்கிறான். பின்னர் பெரியாழ்வாரது மருமகனாய்ப் பரந்தாமன் ஆண்டாள் பக்கத்திலேயே இருந்து விடுகிறான்.

அரங்கனை மணந்த ஆண்டாள் அதிரூப சௌந்தர்யவதியாக இருந்திருக்கவேண்டும்.

ஒருமகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன் மால்தான் கொண்டு போனான்

என்று ஆழ்வார் அங்கலாய்த்திருக்கிறாரே!

கோதையின் கோவிந்தன்

திருவரங்கனையே ஆண்டாள் திருவேங்கடமுடையானாகவும் கருதிக் காதலித்தாள் என்பதற்கு ஆண்டாள் வாக்கிலேயே சான்று கிடைக்கிறது.

உய்யக்கொண்டார் என்ற வைஷ்ணவ ஆசாரியார் அருளிய திருப்பாவை தனியனும் சான்று தருகிறது. "வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்" என்பது உய்யக்கொண்டார் வாக்கு. "என்னை திருவேங்கடமுடையானுக்கு வாழ்க்கைப் படுத்துவாயாக" என்று சொன்னாள் என்பது இதன் பொருள்.

தெற்கே ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றிய ஆண்டாள் என்னும் சுடர் கொடி அக்கால தமிழகத்தின் எல்லையாகிய வேங்கடமலையிலுள்ள வாசுதேவதரு என்ற மகா விருக்ஷத்தை தழுவி வாழுமாறு காதல் கொண்டதின் உட்பொருள் வைணவ ஆசிரியர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இப்பெருங்கருத்து ஆண்டாளின் வாக்காகிய நாச்சியார் திருமொழி, திருப்பாவை என்ற இரண்டு பிரபந்தங்களிலும் ஊடுருவிக் காண்கிறது.

ஸ்ரீரங்கநாதனுக்கு அடுத்ததாக வேங்கடமுடையானை கண்ணனாக ஆண்டாள் உள்ளம் மதிக்கிறது என்பது பக்தர்கள் கொள்கை.

'குளிர் அருவி வேங்கடத்து என் கோவிந்தன்' என்று மேகங்களைத் தூது அனுப்பும்போது கோதை குறிப்பிடுகிறாள்.

தன் காதலனை 'கோவிந்தன்' என்று குறிப்பிடுவதில் கோதைக்கு ஒரு திருப்தி, ஒருவகை மன நிறைவு. "கோதை பிறந்த ஊர், கோவிந்தன் வாழும் ஊர்" என்று தொடங்கும் தனிப் பாட்டிலும் கோதைக்கு 'கோவிந்தன்' என்ற பெயரிலுள்ள ஆசை சுட்டிக் காட்டப்படுகிறது. திருப்பாவையின் 29-வது பாடலிலே, "இன்றுப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா" என்றும், இதற்கு முன்

பாசுரத்திலும் "குறைவொன்று மில்லாத கோவிந்தா" என்றும் குறிப்பிடுகிறுள்.

நாச்சியார் திருமொழியிலும் காட்டிலிருந்து கிளி எப்போதும் 'கோவிந்தா! கோவிந்தா!" என்று அழைக்கும் என்கிறுள் ஆண்டாள. நான் வளர்த்த கிளி எனக்குப் பிரியமான கோவிந்த நாமத்தைக் கூறி அழைக்கிறது என்ற இந்த வாக்கு திருப்பதி கண்டா மணியும் "கோவிந்தா! கோவிந்தா!" என்கிறது என்று கூறும் பக்தனின் மனேபாவத்தைப் பிரதிபலிக்கிறது.

ஆண்டாள் சுயம்வரம்?

ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமியின் ஆஸ்தான பண்டிதரான கருடவாஹனர் என்பவர் 'திவ்ய ஸூரி சரிதம்' என்று ஒரு காவியத்தை எழுதியிருக்கிறுர்.

ஆண்டாள் திருப்பாவைப் பாடி முடிந்ததும் பெரியாழ்வார் அவளை திருக்குருகூருக்கு அழைத்துச் சென்றுர். அங்கு நம்மாழ்வாரை சந்தித்து வணங்கினர்கள். அப்போது பெரியாழ்வார் தன் பெண்ணின் குணநலத்தையும், அவள் பாடிய திருப்பாவைப் பற்றியும் தெரிவித்தார். ஆழ்வார் சந்தோஷப்பட்டு எந்தப் பெருமாளை அடைய விரும்புகிறுய் என்று கேட்டு 108 திவ்ய தேசத்துப் பெருமான்களையும் புளியமரத்தடியில் அழைத்து ஸ்வயம்வரம் நடத்தினர். அப்போது ஆண்டாள் ரங்கநாதருக்கே மாலையிட்டாள். ஆழ்வார் முன்பு திருமணம் நடந்தது. இவர் காவிய வருணனை மிக ரஸமாக இருக்கிறது.

ஆண்டாள் பாடிய பாடல்கள் நாச்சியார் திருமொழி 143 பாடல்கள். திருப்பாவை 30 பாடல்கள். முதலாயிரம் என்ற பகுதியில் இவை அடங்கியுள்ளன.

பூமகளே சூடிக்கொடுத்த சுடர் கொடியாக திருஅவதாரம் செய்தாள். நாராயணனுக்கு பூமாலை மட்டுமா சூடிக் கொடுத்தாள்? தெள்ளுத்தமிழ் பாமாலையும் பாடிக்கொடுத்த பாவை அவள். தோழிப் பெண்களை எழுப்பி மார்கழி மாதத்தில் நோன்பில் கலந்துக்கொண்டு மாதவனை ஆராதிக்குமாறு வேண்டுகிறுள். அழகிய மணவாளனே தனது உற்ற மணவாளன் என்று சொல்லி அந்த அச்சுதனையே கணவனுக வரித்துவிடுகிறுள். கோதையின் பாடல்களில் இருளில் ஒளி, சோகத்தில் ஆறுதல், பயத்தில் தைரியம் இவைகளை கண்கூடாகக் காண முடிகிறது.

* * *

திருப்பாவை உதயம்

கண்ணன் அவதரித்த காலம் முன்பே சென்றுவிட்டது. அவன் நடமாடிய கோகுலம், விளையாடிய யமுனை நதியின் மணல் திடல் இவைகளைக் கண்ணுல் கண்டாவது ஆறியிருக்கலாம். ஆனுல் அது மிகவும் தொலைவில் உள்ளது. இப்படி எண்ணிய கோதைக்கு பாகவத சரித்திரம் வழி காட்டியது. கண்ணன் நடமாடிய காலத்தில் சில சமயங்களில் அவன் கோபியரை விட்டுப் பிரிந்து சிறிது நேரம் தவிக்க

விடுவதும் உண்டு. அப்படிப்பட்ட ஒரு சமயத்தில் கோபியர் மட்டும் இருக்குமிடத்தில் ஒரு பாம்பு வந்துவிட்டது. அப்பெண்கள் பயந்து நடுங்கினர். அப்போது அவர்களில் ஒருத்தி கண்ணனை நினைத்துக் கொண்டு ஆவேசம் வந்தவள்போல் பாய்ந்தாள் அப்பாம்பை நோக்கி. தன்னைக் கண்ணனாகவே பாவித்துக்கொண்டு, "அடே துஷ்ட காளியனே நில்லடா! இதோ வந்தேன் கண்ணன்" என்று கூறிக் கொண்டு பாம்பைப் பிடித்துவிட்டாள். அவள் பிடித்த பிடியில் பாம்பும் நிலைகுலைந்தது. தொலைந்தது. அவளுடைய பாவனையினால் எல்லாரும் பிழைத்தனர். அப்படியே கோதையும் ஸ்ரீ வில்லிபுத்தூரையே கோகுல மாகவும், அங்குள்ள திருக்குளமே யமுனையாகவும், வடபெருங் கோயிலே நந்தகோபன் திருமாளிகையாகவும், அப் பெருமானே கண்ணனாகவும், அவ்வூரிலுள்ள தம் தோழியர்கள் எல்லோரும் ஆயர் சிறுமியர்களாகவும், தாமும் அவ்வாயர் சிறுமிகளில் ஒருத்தியாகவும் பாவனை செய்து கொண்டு புனிதமான மார்கழியில் ஓர் நோன்பு நோற்றாள். அந்நோன்பே திருப்பாவை நோன்பு. ஆண்டாள் அந்நோன்பை நோற்ற விதங்களையும், பரமனைச் சென்றடைந்த விதத்தையும், பரமன் அருள் செய்த விதத்தையும் செவ்வையாகக் காட்டும் நூலே ஆண்டாள் பாடிய திருப்பாவை. முப்பது பாட்டுகள் அடங்கிய அத்திருப்பாவை ஆரணத்தின் சாரம்.

ராமானுஜர் உகந்த பாசுரம்

ராமானுஜருக்கு திருப்பாவையிடம் அலாதி ஈடுபாடு. அவர் பிக்ஷைக்குச் செல்லும்போது வடமொழி சுலோகங்கள், தமிழ் பாசுரங் கள், திருப்பாவை முதலியவைகளைச் சொல்லிக்கொண்டு போவது வழக்கம்.

ஒருநாள் பெரியநம்பி வீட்டு வாசலில் திருப்பாவையைப் பாடிக் கொண்டு நின்றார். அப்போது நம்பியின் திருமகள் அத்துழாய் கதவைத் திறந்தாள். அவளைக் கண்டதுதான் தாமதம், அவள் முன்பு விழுந்து வணங்கினார். அப்பேர்ப்பட்ட பெரியவர் தன்னை வணங்கியது கண்டு அதிர்ச்சியடைந்த அத்துழாய் தன் தந்தையிடம் வந்து நடந்ததைக் கூறினாள். அவர் "நீ அவரைப் பார்த்தபோது உந்து மதகளிறு அவர் பாடிக்கொண்டிருந்தாரா?" என்று கேட்டார். அப்போது தான் அத்துழாய்க்கு விஷயம் புரிந்தது.

"செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப, வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்" என்ற இடத்தை ராமானுஜர் பாடிய போது அத்துழாய் கதவை திறந்திருக்கிறாள். உள்ளே தன் குரு பெரிய நம்பியை சேவிக்க வந்த ராமானுஜர் "நப்பின்னையை சேவிக்கப் பெற்றேன்" என்று சொல்லி வணங்கினார். (அத்துழாய் அவர் கண்ணுக்கு நப்பின்னையாகத் தோன்றினாள்.) ராமனுஜருக்கு மிகவும் பிடித்த பாசுரம் இது.

உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன்
நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலி! கடைதிறவாய்
வந்து எங்கும் கோழி அழைத்தன காண்; மாதவிப்

பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாய்

இது திருப்பாவையில் 18-ம் பாட்டு. இதில் கண்ணன் தேவியான நப்பின்னையை துயில் எழுப்புகிறார்கள். பிராட்டியை முன்னிட்டு பகவானைச் சரணடையவேண்டும் என்பது வைஷ்ணவக் கொள்கை. இதைக் கோவில்களில் இருமுறை ஓதுவர்.

திருப்பாவையில் 2-ம் பாட்டில் 'பரமனடிபாடி' என்றும், 3-ம் பாட்டில் 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி' என்றும், 24-ம் பாட்டில், 'அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி, பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி கழல் போற்றி' என்றும் திருவடிகளைப் போற்றி கன்று குணிலா எறிந்தாய், குன்று குடையாயெடுத்தாய், வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல்போற்றி என்று திருக்கைகளையும், இறுதிப்பாட்டில், 'ஈரிரண்டு மால்வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமால்' என்று முகத்தையும் பாடியிருத்தல் கண்ணன் வர்ணனை பாதம் முதல் முகம் வரை அனுபவித்ததாயிற்று. 24-ம் பாட்டில் உள்ள 6 போற்றிகளும் அறுசுவை உண்டியைப்போல் தித்திக்கும்.

குத்துவிளக்கு எரிய என்ற பாசுரத்தில் லௌகிக அனுபவமும் சமயதத்துவமும் கலந்து பரிமளிக்கின்றன. இதில் லக்ஷ்மிநாராயணன் (அம்மையப்ப) தத்துவம் அடங்கியுள்ளது.

பிராட்டி தன் அழகால் இறைவனை வசீகரித்து மக்களிடம் கருணை புரியுமாறு தூண்டுகிறாள். இதில் தத்துவம் என்ற தகவு என்று ஒரு வாக்கியம் வருகிறது. இதற்கு தத்துவம் அன்றுத் தகவு அன்று என்று பொருள் கொள்ளலாம். இப்படி (நாங்கள் எவ்வளவு கூப்பிட்டும் எழுந்து வந்து கதவு திறக்காமலிருப்பது) செய்வது உன் தத்துவத்திற்கும் (சொரூபத்திற்கும்) ஒத்ததில்லை, உன் தகவுக்கும் (சுபாவத்திற்கும்) ஒத்ததில்லை என்று பொருள் கொள்ளலாம்.

சக்கரைப் பொங்கல் பாட்டு

'கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா' என்ற பாட்டில் நோன்பு நோற்ற தங்களுக்கு என்ன பரிசு வேண்டும் என்று கண்ணனிடத்தில் கேட்கிறார்கள். அவைகளை யாசகம் கேட்பது போலக் கேட்கவில்லை தோற்றவனிடம் வென்றவன் கப்பம் கேட்பதுபோல கேட்கிறார்கள். கூடாரை (எதிரிகளை) வெல்லும் கோவிந்தன் அம்புக்குத் தோற்காத அவன் அன்புக்குத் தோற்றுவிடுகிறான். தோற்றவனிடம் கெஞ்சியா கேட்பார்கள்?

சம்மானத்தில் ஒன்று சர்க்கரைப் பொங்கல். பால்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார வழங்கவேண்டும் என்கிறார்கள். நெய்யுண்ணோம், பால் உண்ணோம் என்றிருந்தவர்கள் இப்போது ஆசை தீர சர்க்கரைப் பொங்கல் சாப்பிடவேண்டும் என்கிறார்கள்.

கண்ணனும் கூட இருந்து உண்ணவேண்டும். எல்லோரும் கூடிக் களிப்பது இதில் முக்கிய தத்துவம்.

கூடாரவல்லி

இன்றும் திருவரங்கப் பெரிய கோவிலில் மார்கழி மாதத்தில் 'கூடாரவல்லி' என்று நைவேத்தியம் செய்யப்படுவதை நாம் கேட்கிறோமல்லவா? 'சர்க்கரைப் பொங்கலை'த்தான் அவர்கள் 'கூடாரவல்லி' என்று குறிக்கின்றார்கள். இன்றும் மலையாள நாட்டில் திருவாதிரை நோன்பின் இறுதியில் மகளிர் விருந்து நடத்துவதும் விருந்தில் மலைப்பழங்களும் சர்க்கரை கலந்த தீந்திற் பாயசமும் உண்பதும் வழக்கமாக இருந்து வருகின்றன. தமிழ் நாட்டில் வைணவர்கள் சர்க்கரைப் பொங்கலையும், சைவர்கள் திருவாதிரைக் களியையும் உண்கிறார்கள்.

இந்த திருப்பாவையிலுள்ள விஷயங்கள் ஆண்டாளின் சொந்த அனுபவங்கள்.

ஆழ்வார்களை துயிலெழுப்புதல்

ஆண்டாள் தனது திருப்பாவையில் முதல் பத்துப்பாட்டில் ஒவ்வொன்றினால் ஒவ்வொரு ஆழ்வாரை துயில் எழுப்புகிறாள் என்பது தாத்பர்யம்.

ஆண்டாள் அருளிச்செய்த இத்திருப்பாவையில் பல அருமையான தத்துவார்த்தங்கள் உண்டு. ஆண்டாள் பிறதோழிகளை துயிலிலிருந்து எழுப்பி பாவை நோன்பு நோற்கச்செய்வதாக ஸ்தூலமாகத் தெரிந்தாலும் இதில் அப்பிராட்டியின் அந்தரங்க நோக்கம், தான் பெறவிருக்கும் இன்பம் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்ற உன்னத நோக்கத்தைக் கொண்டதாகும். ஆண்டாள் தன் சகோதரர்களான ஆழ்வாராதிகளையும் ஒவ்வொரு பாடல் மூலம் துயில் எழுப்புகிறாள். இதை 'ஸ்வாபதேசம்' என்பர் (அதாவது தன் யுக்தியினால் பெரியவர்களை நிர்ணயம் செய்வது).

'புள்ளும் சிலம்பின காண்' பாசுரத்தில் பிள்ளையே எழுந்திராய் என்பதில் பிள்ளாய் என்று குறிப்பிட்டது பொய்கை ஆழ்வாரை (பொய்கையார் எப்போதும் மௌனமாக,பிள்ளை என்ற பருவத்தையே அடைந்தவராக இருந்தார்.)

'கீசு கீசு என்றெங்கும்' பாசுரத்தில் பேய்ப் பெண்ணே என்பது பேயாழ்வாரைக் குறிக்கும்.

'கீழ்வானம் வெள்ளென்று' என்ற பாசுரத்தில் கோதுகலமுடைய பாவாய் என்றது பூதத்தாழ்வாரைக் குறிப்பிடும். (இவர் மாமல்ல தல சயனரை நினைத்துப்பாட ஆரம்பித்தாலே இவருக்கு ஒரே குதூகலம்தான்.)

'தூமணி மாடத்து என்ற பாசுரத்தில் மாமன் மகளே என்றது திருமழிசை யாழ்வாரைக் குறிப்பிடும். (பிருகு மகரிஷிக்கு பார்க்கவர்

புத்திரர். பார்க்கவி (லக்ஷ்மி) புத்ரி. ஆண்டாள் லக்ஷ்மியின் அவதாரம். திருமழிசைபிரான் பார்க்கவரின் குமாரர். ஆகவே மாமன் மகளே என்ற உறவைச் சொல்லி அழைக்கிறாள் ஆண்டாள்.)

'நோற்று சுவர்க்கம் புகுகின்ற' என்ற பாசுரத்தில் ஆற்ற அனந்தலுடையார் என்றதனுல் ஆற்றங்கொண்ட குலசேகரர் குறிப்பிடப் பட்டார். (இவருக்கு ராமனிடத்தில் அசாத்ய ஈடுபாடு. ராமாயணம் கேட்டுக்கொண்டிருந்தால் தன்னையே மறந்து ராமனுக்கு உதவ இவர் கிளம்பிவிடும் அவ்வளவு ஆற்றங் கொண்டவர்.)

'கற்றுக்கறவை' என்ற பாசுரத்தில் குற்றமொன்றில்லாத கோவலர் என்றதால் பெரியாழ்வார் குறிப்பிடப்படுகிறார். (நியம நிஷ்டை ஆசாரம் இவைகளில் எவ்வித குற்றமுமில்லாத அந்தணர் பெரியாழ்வார்.)

'கனைத்திளங் கற்றெருமை' பாசுரத்தில் நற்செல்வன் நங்காய் என்பதால் தொண்டரடிப்பொடியாழ்வாரை ஆண்டாள் குறிப்பிடு கிறாள்.

'எல்லே இளங்கிளியே' என்ற பாசுரத்தில் கிளியே என்றது திருமங்கை ஆழ்வாரை. (அவர் கிளியையே அடிக்கடி தன் பாசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.)

'புள்ளின்வாய் கீண்டானை' என்ற பாசுரத்தில் போதரிக் கண்ணினாய் என்றது திருபாணாழ்வாரைக் குறிப்பதாகும். (இவர் இறைவனின் கண்ணழகையை அதிகம் ரசித்தவர். 'அமலாதிபிரான்' என்று தொடங்கும் பதிகங்களில் இவர் கண்ணழகையே அதிகம் வருணிக்கிறார்.)

'உங்கள் புழைக்கடை' என்ற பாசுரத்தில் நங்காய் என்று குறிப்பிட்டது நம்மாழ்வாரை (நம்மாழ்வார் தாயின் பெயர் நங்காய்)

ஆசார்யர்களைத் துயிலெழுப்புதல்

மற்றொரு விளக்கமும் கூறுவர். பகவானை நாடும்போது ஆசார்யர் மூலம்தான் போகவேண்டும். 'அஸ்மத் குருப்யோ நமஃ' என்று தொடங்கி ஸ்ரீயை நமஃ என்று முடிப்பது வழக்கம். ஸ்ரீயை என்பது பெரிய பிராட்டி. அவளைத் துணை கொண்டு திருமாலை யடைவதை புருஷகாரம் என்று கூறுவர். 'புள்ளும் சிலம்பின காண்' என்ற பாசுரம் தொடங்கி 'உந்து மத களிற்று' என்ற பாசுரம் வரை ஆசாரியப் பரம்பரையினரை துயில் எழுப்புவதாக சுவாபதேச உட்பொருள்; (சுயகுரு, பரமகுரு, பரமேஷ்டிகுரு, ராமானுஜர், ஆளவந்தார், நம்மாழ்வார், விக்ஷ்வக்ஸேனர், பிராட்டி நப்பின்னை).

அவதாரங்கள் பற்றி ஆண்டாள்

திருமாலின் பத்து அவதாரங்களில் ஆண்டாள் தன் திருப்பாவையில் திருவிக்கிரமன், ராமன், பலராமன் கண்ணன் இவர்களைப்பற்றி மட்டுமே குறிப்பிடுகிறாள். 'யசோதை இளஞ் சிங்கம்'

அவள் மனதைப் பெரிதும் கவர்ந்ததால் கண்ணனைப்பற்றி அதிகமாகக் குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லை.

ராமாவதாரத்தைப் பற்றி இரண்டு இடங்களில் மட்டும் குறிப்பிடுகிறாள். "சினத்தினால் தென்னிலங்கை கோமானை செற்ற மனத்துக்கினியானை பாட" என்பது ஒரு இடம். மற்றோர் இடம் "பொல்லா அரக்கனை கிள்ளிக்களைந்தானை" என்பது. இங்கும் ராவன வதம் குறிப்பிடப்படுகிறது.

திருவிக்கிரம அவதாரம் பற்றி 'ஓங்கி உயர்ந்த', அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோபாலன், அன்றிவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி என்று மூன்று இடங்களில் குறிப்பிடப் படுகிறது.

பலராம *அவதாரத்தைப்பற்றி 'பலதேவா' உம்பியும் நீயும் உறங்கேல் என்ற ஒரே ஒரு இடத்தில் தான் குறிப்பிடப்படுகிறது.

மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரசிம்மம், பரசுராமர் அவதாரங் களைப்பற்றி எல்லாம் திருப்பாவையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

சர்வ மங்களமும் பொங்க ஆண்டாள் காட்டும் வழி

ஆண்டாளின் திருப்பாவை மிகவும் மங்களத்தைத் தரக்கூடியது. லக்ஷ்மி கடாக்ஷம் விளங்க லக்ஷ்மியின் அம்சமான அவள் காட்டும் வழி அவளுடைய திருப்பாவை பாட்டுக்களில் பொதிந்துள்ளது.

1. மார்கழி திங்கள்: நாம் எந்தக் காரியம் செய்தாலும் இது நல்ல காரியம், எல்லோருக்கும் உபயோகப்படக் கூடியது. பகவானும் சந்தோஷிப்பான் என்று உலகத்தார் கொண்டாடும்படி இருக்க வேண்டும்.

2. வையத்து வாழ்வீர்காள்: தர்மங்களை செய்து பகவானை ஆராதித்து வந்தால் அவன் நம்மைச் சுகமாக வாழ வைப்பான்.

3. ஓங்கி உலகளந்த: குறுகிய வடிவில் வந்து திருவிக்கிரமனாக விளங்கிய அவனை தினந்தோறும் நினைத்தால் அவன் அனுக்கிரகம் நிச்சயம் உண்டு.

4. ஆழி மழைக்கண்ணா: மனமுருகும் பக்தியினால் ஆகாதது ஒன்றுமில்லை.

5. மாயனை மன்னு: அவனிடமே சரணடைந்துவிடு. மற்றவைகளை அவன் கவனித்துக் கொள்வான்.

6. புள்ளும் சிலம்பின காண்: அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். விழிப்பு ஏற்பட்டவுடனேயே ஹரிநாமத்தைச் சொல்ல வேண்டும்.

---

* பலராம அவதாரம் பத்து அவதாரங்களில் ஒன்றாகச் சிலர் கருதுவதில்லை. இதற்கு பதில் புத்தரை ஒரு அவதாரமாகக் கொள்கின்றனர்.

7. கீசு கீசு: நம் வீடு தேடிவரும் பெரியோர்களையும் அதிதிகளையும் உபசரிக்கவேண்டும்.

8. கீழ் வானம்: இன்று சுதினம் என்று நினைத்துக் கொண்டே பகவானை ஆராதிக்கவேண்டும்.

9. தூமணி மாடத்து: இடத்தை பரிசுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

10. நோற்றுச் சுவர்க்கம்: வீடு தேடி வருபவர்களுக்கு இருந்துக் கொண்டே இல்லை என்று சொல்லக்கூடாது.

11. கற்றுக் கறவை: எவ்வளவு செல்வம் இருந்தாலும் கல்வி இருந்தாலும் அண்டி வருவர்களை ஆதரிக்கவேண்டும்.

12. கனைத்திளங்கன்று: பாகவதோத்தமர்களை வழிபட்டு உபசரிக்கவேண்டும்.

13. புள்ளின் வாய்: அதிகாலையில் எழுந்ததும் ஸ்நானம் செய்ய வேண்டும். உதயத்திற்குப் பிறகும் படுக்கையில் புரண்டுக் கொண்டிருக்கக் கூடாது. சந்தியா காலங்களில் படுத்துக் கொண்டிருந்தால் பாபம் சம்பவிக்கும். தூங்குகிற சோம்பேறிகளையும் எழுப்பவேண்டும்.

14. உங்கள் புழைக்கடை: என்ன காரியம் இருந்தாலும் ஆலயம் செல்லத்தவறக்கூடாது.

15. எல்லே இளங்கிளியே: குழந்தைகளை கல்வி கற்பதிலும் வேதம் கற்பதிலும் பயில்விக்க வேண்டும்.

16. நாயகனாய்: சரணாகதி செய்பவர்களைத் தடுப்பவர்களையும் திருத்தவேண்டும்.

17. அம்பரமே தண்ணீரே: சக்திக்குத் தகுந்தபடி அன்னதானம் தாகத்திற்கு நீர், மோர் தரவேண்டும்.

18. உந்துமதக்களிற்றின்: தாய் தகப்பன் மாமனார் மாமியார் தினம் சேவிக்கவேண்டும்.

19. குத்துவிளக்கெறிய: தன்னைத்தரனே ஏமாற்றிக் கொள்ளாமல் காரியங்களைச் செய்யவேண்டும்.

20. முப்பத்துமூவர்: திருப்பள்ளி எழுச்சி பாடிப் பரவவேண்டும்.

21. ஏற்ற கலங்கள்: தாய் தந்தையர்களின் மனம் கோணாமல் நடக்கவேண்டும்.

22. அங்கண்மா: அகங்காரத்தை விட்டு அடிபணியவேண்டும்.

23. மாரிமலை முழைஞ்சில்: பவனி வருகிற இறைவனைப் பார்த்த பின் மண்டபத்தில் அமர்ந்தபின் பார்க்கவேண்டும்.

24. அன்றிவ்வுலகமளந்தாய்: பகவத் விளையாடல்களை நினைந்துப் பாடவேண்டும்.

25. ஒருத்திமகனாய் பிறந்து: எல்லா வஸ்துகளும் பகவானுடைய சரீரம் என்ற நினைப்பு வேண்டும்.

26. மாலே மணிவண்ணா: வைதீக காரியங்களை முன்னோர்கள் செய்த ரீதியாகவே செய்யவேண்டும்.

27. கூடாரை வெல்லும்: எதையும் அவனுக்கு அர்ப்பணித்த பின் உபயோகிக்க வேண்டும்.

28. கறவைகள் பின்சென்று: குருவின் சொற்படி நடக்க வேண்டும்.

29. சிற்றஞ்சிறுகாலே: எல்லோரையும் சகோதரர்களாகக் கருதவேண்டும்.

30. வங்கக்கடல் கடைந்த: திருப்பாவை அவதாரம்.

பெரியாழ்வாருக்கு மட்டுமின்றி 'அஞ்சுகுடி' என்ற பிரசித்தமான வைஷ்ணவ குலத்திற்கே ஓர் சந்ததி இவள். இவளுக்கு பெரியாழ்வார் இட்ட பெயர் பூமாலையையும் கூந்தலையும் குறிக்கக் கூடிய கோதை என்பது. பின் வருபனவற்றை முன் கூட்டியே இப்பெயர் உணர்த்துகிறது.

ஆண்டாள் கும்மி

(அழகிய சொக்கநாத பிள்ளை இயற்றியது)

நாகவல்லி ஜெக மோகவல்லி திரு
நாமவல்லி ஒளிர் காமவல்லி
மேகவல்லி அனுராகவல்லி எழில்
வேதவல்லி நய கீதவல்லி

செங்கமலரத்னம் சிங்காரரத்னம்
செண்பகரத்னம் ஜீவரத்னம்
குங்குமரத்தினம் கோவிந்தரத்னம்
குஞ்சரரத்தினம் கோதை ரத்னம்

சீவிச்சிலர் குழல் பின்னவிட்டுச் சிலர்
சிங்காரக் கொண்டை சொருக்குமிட்டுக்
காவியக்கண்களில் மையிட்டுப் பொட்டிட்டுக்
கட்டாணிமுத்துப்பல் காவியிட்டு

நம் கலிதீர்ந்திட இங்கருள் கூர்த்திடும்
நன்விதியாம் கோதை சந்நிதிமுன்
கூடிக்கும்மியடிப்ப மென்றாள்: அருட்
கோதைப் புகழைப் படிப்பமென்றாள்
நாடிநின்று நடிப்பமென்றாள் அவள்
நன்மலர்த்தாளைப்பிடிப்ப மென்றாள்

மாடம் கொள் மேல்நிலைக் கோபுரமும் உயர்
மாமதிலும் திரு மாளிகையும்
நீடும் பொன் ஆலயம் மேவிய
கோதையை நேர்ந்து கும்மி அடிப்பமடி

லயம் கொண்டு சிலம்பு புலம்பிடவே
அங்கை வளையல் கிலுங்கிடவே நமது
ஆண்டாள் முன்பு கும்மியடிப்பமடி
ஆனந்த கும்மியடிப்பமடி

சூரியன் முன் இருள் நின்றாலும் நம் தம் தொல்வினை கோதை முன் நில்லாது.

ஆண்டாளை ரங்கநாதர் மணந்துக் கொண்ட பின்பு பெரியாழ்வார் 'என் புதல்வி என்ன பாக்கியம் செய்தாள்' என்று முன்னிலும் அதிகமான பக்தியுடன் இறைவனுக்கும் அடியார்க்கும் அவர் தொண்டு செய்து வந்தார்.

பெரியாழ்வார் பாண்டிய அரசனும் தன் சிஷ்யனுமாகிய ஸ்ரீ வல்லப தேவனுடைய உதவியால் ஆண்டாள் விக்கிரஹத்தை ஸ்ரீவில்லிபுத்தூரில் பிரதிஷ்டை செய்தார். கோதையையும், இறைவனையும், கருடாழ்வாரையும் ஏகாசனத்தில் பக்தர்கள் தொழும் பாக்கியத்தைப் பெற்றார்கள்.

ஸ்ரீ சுவாமி தேசிகன் ஆண்டாள்மீது கோதாஸ்துதி இயற்றியிருக்கிறார். இது அழகான கலியாண காவியம். கோதைப் பிராட்டியின் அவதாரம், பால்யம், விவாகம் அதற்கான அனுபவங்கள் அவ்வளவையும் இதில் காணலாம்.

தேசிகன் ஆண்டாளைத் தூயத்திருமகள் என்று குறிப்பிடுகிறார்.

பதின்மரின் ஞானமும் அவள் ஸ்ரீதனம்

வித்வான் ஸ்ரீ புருஷோத்தம நாயுடு ஒரு சமயத்தில் குறிப்பிட்டுள்ளதாவது :

"ஆழ்வார்கள் இளையபெருமாளைப் போன்றவர்கள். பெரியாழ்வார் பரதனுக்கு ஒப்பானவர்.

ஆண்டாளும், மதுரகவியும் சத்ருக்னனுக்கு இணையானவர்.

ஆழ்வார்களும் இளையபெருமாளும் பகவத் கைங்கரியத்திற்காக ஆசைப்பட்டவர்கள்.

பரதாழ்வாரும், பெரியாழ்வாரும் பகவத் ஸம்ருத்தியை ஆசைபட்டார்கள். சத்ருக்னனும் மதுரகவியும் ஆண்டாளும் பாகவத சேஷத்வத்தில் நிலை நின்றவர்கள்.

ஆழ்வார்களுடைய பக்தியைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமான அன்பினை ஆண்டாள் வெளிப்படுத்தினாள். பதின்மருடைய ஞானமும் ஸ்ரீதனமாக அவள் பக்கலில் குடிகொண்டது."

ஆண்டாள் சந்நிதிகள்



அன்னவயல் புதுவை
ஆண்டாள் அரங்கர்க்கு
பன்னுதிருப்பாவை
பல்பதியம்—இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள்
நற்பாமாலை, பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்

—உய்யக்கொண்டார்

திருமகளை வழிபடும் விசேஷ நாள் ஆடிப்பூரம். அந்த நாளில் ஆண்டாள் அவதரித்தாள். அந்த திருநாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டாள் பிறந்தது ஸ்ரீவில்லிபுத்தூரில். இறைவனுடன் இணைந்தது ஸ்ரீரங்கத்தில். ஸ்ரீவில்லிபுத்தூரில் கணவன் ரங்கன் அருகில் ஒரு பக்கம் கருடாழ்வாரும் ஒரு பக்கலில் தானுமாக காட்சி தருகிறாள்.

ஒரு சமயம் அடியேன் ஸ்ரீவில்லிபுத்தூர் சென்றிருந்தபோது கோயில் கர்ப்பக் கிரகத்தைப் பூட்டிவிட்டார்கள். நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று திரும்பியபோது ஒரு பட்டர் எங்களை அழைத்தார். ''சுவாமி தரிசனத்திற்கு வந்தேன், பிராப்தமில்லை'' என்று என் மன வருத்தத்தைத் தெரிவித்தேன். ''மந்திரி யாரோ வருகிறார்கள் என்று ஆண்டாளுக்கு ரூ. 3000 பெறுமான சேலை உடுத்தி விசேஷ அலங்காரம் செய்திருந்தோம், அவர்கள் வரவில்லை. நீங்கள் வாருங்கள் கதவைத் திறந்து காட்டுகிறேன்'' என்று பெரிய சாவியைக் கொண்டு கதவை திறந்து கற்பூரம் ஏற்றிக் காட்டினார். புதுமணப்பெண் பொலிவுடன் ஆண்டாள் அவள் காதலித்து மணந்த கட்டழகனுடன் காட்சி அளித்தது பேரானந்தமாக இருந்தது.

பெரியாழ்வாரும் ஆண்டாளும் பலப்பல பாசுரங்களைப் பாடியிருந்தாலும் ஸ்ரீவில்லிபுத்தூரைப் பற்றி பாடியிருப்பது இரண்டே இரண்டுதான். மற்ற ஆழ்வார்கள் இந்த வடபத்ரசயனரைப்பற்றி ஏன் பாடவில்லை என்று தெரியவில்லை.

ஆண்டாள் சந்நிதிக்கருகில் அவள் மாலை சூடி அழகு பார்த்ததாகக் கூறப்படும் கண்ணாடிக் கிணறும் இருக்கிறது. ஆண்டாள் சந்நிதிக்கும் வடபத்ரசாயி சந்நிதிக்குமிடையே ஆண்டாள் அவரித்த நந்தவனமும் துளசி மாடமும் இருக்கின்றன. இங்கு ஒரு ஆண்டாள் சந்நிதி இருக்கிறது.

இந்த ஆண்டாளிடம் விஜயநகர அரசர் கிருஷ்ணதேவ ராயருக்கு அளவற்ற பக்தி. அது காரணமாக அவர் கட்டிய கோவில்களிலெல்லாம் ஆண்டாளுக்கு தனி சந்நிதி அமைத்திருக்கிறார். "ஆமுக்த மால்யதா" என்பது தெலுங்கு மொழியில் மிகப் பிரசித்தமான காவ்யம். சூடிக்கொடுத்த சுடர் கொடியின் வாழ்க்கை சரித்திரமே அது. விஜயநகர அரசர் கிருஷ்ணதேவ ராயர் இயற்றியது.

திருக்கோவலூருக்கு மேற்கே திருவரங்கம் என்ற தலத்தில் பெரிய கொண்டையுடன் அழகே உருவாக ஆண்டாள் தரிசனம் தருகிறாள். இவளைப் பார்ப்பதற்கே ஒருமுறை அங்கு போகலாம். கர்நாடகத்தில் ஹொய்சால மன்னர்கள் ஆண்டாளுக்கு கலை எழில் உள்ள ஆலயம் ஒன்று அமைத்திருக்கிறார்கள். பேலூர் சென்ன கேசவர் ஆலயத்தை யொட்டி இது அமைந்துள்ளது. (ஷிமோகாவிலிருந்து பேலூர் 23 மைல்) இந்த ஆண்டாள் ஆலய செப்பு துவஜஸ்தம்பம் கிருஷ்ண தேவராயர் அமைத்ததாகும்.

கண்ணன் விளையாடிய வடமதுரையில் ஆண்டாளுக்கு கோவில் தமிழ் நாட்டுப் பாணியில் அமைந்துள்ளது. அவரை மணந்த திருமாலுக்கு அங்கு ரங்கபாபுஜி என்று பெயர்.

* * *

நாடக மேடையில் புரட்சி செய்து தசாவதாரம், பகவத்கீதை ஆகிய நாடகங்களை நடத்திய கன்னையா நாயுடுவை பலருக்கும் தெரிந்திருக்கும். அவர் ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவிலுக்கு ஆஞ்சநேயர் வாகனம் ஒன்று செய்து சமர்ப்பித்தார்.

அந்தக் கோவிலின் சம்பிரதாயம் பெருமாளுக்கென்றே யார் எதைக் காணிக்கையாகக் கொடுத்தாலும் முதலில் அதை ஆண்டாளுக்கு சமர்ப்பணம் செய்து, ஆண்டாள் அதை ஸ்வீகரித்த பின்பே சேஷமாக பெருமாளுக்கு சமர்ப்பிக்க வேண்டும். எந்த வைஷ்ணவக் கோவில்களிலும் தாயாருக்கு கிளி, அன்னம் ஆகியவை தான் வாகனம் உண்டு. ஆஞ்சநேயர் வாகனத்தின் மீது தாயார் அமரும் வழக்கமில்லை. கோவில் பட்டர்கள் திரைப் போட்டு ஆண்டாளை அலங்கரித்து ஆஞ்சநேயர்மேல் அமரச் செய்தார்கள்.

தேரெழுந்தூர் ஆண்டவன் ஸ்வாமி* அவர்களை மட்டும் திரைக்குள் அழைத்துச் சென்று தரிசனம் செய்விக்கப்பட்டது. பொது மக்கள் யாரும் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படவேயில்லை. இவ் வைபவத்தைக் கண்ட ஆண்டவன் ஸ்வாமிகள் "சீதாபிராட்டியாக வந்த நீதானே பிறகு ஆண்டாளாக அவதரித்தாய். அசோக வனத்தில் அனுமன் உன்னிடம், என் முதுகில் ஏறிக்கொள், ஒரே மூச்சில் உன்னை ராமனிடம் கொண்டு சேர்க்கிறேன் என்று கூறியபோது "குரங்குப் புத்தியால் சொன்னாய். நான் அப்படி செய்யமாட்டேன்" என்றாயே இன்று நீயே கருணைகொண்டு அந்த அனுமன் முதுகில் அமர்ந்திருக்கிறாயே, என்னே! உன் கருணை?" என்று கூறி கண்ணீர் விட்டார்.

---

* தற்சமயம் ஸ்ரீரங்கம் பெரியாசிரமத்தில் ஆசாரியராக இருப்பவர் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்வாமிகள். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இதே ஆசிரமத்தில் தேரெழுந்தூர் ஆண்டவன சுவாமிகள் தலைவராக இருந்தார்.

ஸ்ரீரங்கநாதன் தரிசனம்

(வைகுண்ட ஏகாதசி வைபவம்)

பச்சை மாமலைபோல் மேனி பவள வாய்கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

வைஷ்ணவர்களுக்கு கோயில் என்றால் ஸ்ரீரங்கம்தான். ராமரிடமிருந்து விபீஷணன் இவரைப்பெற்று இலங்கை போகும் வழியில் காவிரிவளபூமியில் காதலுற்று "குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டி, தென்திசை இலங்கை நோக்கி படுத்து விடுகிறன் ரங்கநான். "பணியரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடையராம் கான அணியரங்கம் தந்தானை அறியாதார் யார்?" என்று கேட்கிறன் கம்பன்.

இந்த ரங்கநாதனை மட்டும்தான் எல்லா ஆழ்வார்களும் பாடி மங்களா சாஸனம் செய்திருக்கிறர்கள். பதின்மர் பாடிய பரன் பெருமாள் என்ற புகழ் இவர் ஒருவருக்குத்தான். ஏழு பிரகாரங்களும் 21 கோபுரங்களும் கொண்ட கோயிலின் கர்ப்பக் கிரகத்தில் ரங்க விமானத்தின் கீழ் தன்னந்தனியாக பதினைந்து அடி நீளமுள்ள கருவறையை முழுவதும் வியாபித்துக்கொண்டு பாம்பையே படுக்கையாகக் கொண்டு அரங்கன் படுத்திருக்கிறன்.

தேவியர் யாரையும் அரங்கள் அருகில் வைத்துக்கொள்ளவில்லை. பகவானுக்கு அடியார்களிடம் மிகப்பற்று. அவர்களுக்கு எதிராக யார் என்ன சொன்னலும் அவர் அதை காதில் போட்டுக்கொள்வதில்லை. தன் தேவியே குறை சொன்னலும் ஏற்கமாட்டார். தேவி பக்தர்களுக்காக சிபாரிசு செய்பவராயிற்றே. அவர் ஏன் அடியார்கள் மீது குறை சொல்லப் போகிறர் என்று கேட்கலாம். ஒரு சமயம் தேவி இப்படி குறைப்பட்டிருக்கிறர்.

ஸ்ரீரங்கநாதர் எப்போதும் தெற்கு நோக்கியே இருப்பதைப் பார்த்து தேவி கோபமடைந்து "என்ன! அப்படி தெற்கில் இருக்கிறது? என்னைக் கொஞ்சம் பார்க்கக் கூடாதா? என்று கேட்டாளாம். "ஆண்டாளாக நீ அவதரித்த இடம் தெற்கேதானே இருக்கிறது அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றாராம் சுவாமி.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னை வைதவன், என்னை உதைத்தவன் (பிருகு முனிவர் பெருமானை மார்பில் உதைத்தவர்) இவர்களை எல்லாம் கண்டால் உங்களுக்கு பிடிக்கும். அதனால் என்னை வைதவன்

திக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அது எனக்குத் தெரியாதா?" என்றாள் தேவி.

பகவான்: "அது யார்?"

தேவி: "அவன்தான் விபீஷணன்."

அவன் ராவணனிடம் "இந்தப் பெண் இங்கு வந்ததிலிருந்து இங்கு துர்சகுனங்கள் ஏற்படுகின்றன. இவளால் இலங்கையே அழிந்துவிடும். முதல் வேலையாக இவளைக் கொண்டுபோய் விட்டுவிடு" என்றான்.

பகவான்: "உன் நன்மைக்குத்தானே சொன்னான். அவன்மீது வீணாகத் துவேஷம் கொள்ளாதே."

* * *

மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி. இங்கு நடைபெறும் மாபெரும் திருநாள். அன்றுதான் 'சொர்க்க வாசல்' என்ற விசேஷ வாயிற்படி திறக்கப்படுகிறது. அதைத் தாண்டிப்போக கூட்டமாவது கூட்டம். இந்த ஏகாதசிக்கு சொர்க்கவாசல் ஏகாதசி என்றும், மோக்ஷ ஏகாதசி என்றும் பெயர். மோக்ஷமளிக்கும் காரணத்தால் இதற்கு வைகுண்ட ஏகாதசி என்றும் அழைக்கிறார்கள். பகவான் சொர்க்க வாசலைத் தாண்டும்போதும் பெரும் அதிர்வேட்டு திடுக்கிட வைக்கிறது. ரத்ன அங்கியும், கொண்டையும் பெருமாளுக்கு அலங்காரம் செய்திருப்பது கண்களை விட்டு நீங்காத தோற்றமாகும்.

அன்று மூலவருக்கு முத்தங்கி சேவை என்ற விசேஷ அலங்காரம். ஏகாதசி முதல் 10 நாள் பகல் பத்து. பின் பத்து நாள் இராப்பத்து. ஆகவே இது 20 நாள் உற்சவம்.

இந்த உற்சவத்தை யொட்டி அறையர் சேவை என்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. வயதான வைணவப் பெரியார்கள் திவ்ய பிரபந்தங்களை அபிநயத்துடன் பாடுகிறார்கள். பஞ்சக் கச்சமும் பன்னிரு திருமண் நாமங்கள். ஆனால் தலையில் கிரீடம். இப்படி மூன்று கிழவர்கள் வந்ததும் அவர்களுக்குப் பிரசாதம் கொடுத்து மரியாதை செய்யப்படுகிறது.

* * *

இந்த தலம் வைஷ்ணவர்களின் கோட்டை. ஸ்ரீ ராமனுஜர் இங்கேயே தங்கி திவ்ய பிரபந்தம் என்ற தமிழ் வேதத்தை தொகுத்திருக்கிறார். ஏகாதசி பட்டினி. மறுநாள் துவாதசி பாரணை. அன்று அதிகாலையிலேயே யார் வீட்டுக்குச் சென்றாலும் உணவு கிடைக்கும். இவ்விழாவன்று அரங்கனைக் காண்பதே ஒரு பெரும் பாக்கியம் என்பது பக்தர்களின் நம்பிக்கை. அவனை நம்புவர்களுக்கு அருள் செய்ய அவர் இருக்கிறார் என்பதை ஒரு பக்தர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

நாவுண்டு நீ உண்டு நாமம் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ—பூவுண்டு
வண்டுறங்கு சோலை மதில் அரங்கத்தே உலகை
உண்டு உறங்குவான் ஒருவன் உண்டு.

மாணிக்கவாசகர் தந்த மாணிக்கம்

வருமொழி செய் மாணிக்கவாசக, நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவைக் கலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

—வள்ளலார் ராமலிங்க சுவாமிகள்.

நான்கு சைவக் குரவர்களில் ஒருவர் மாணிக்கவாசகர். இவர் செய்தருளியது திருவாசகமும் திருக்கோவையாரும். இது சைவத் திருமுறைகளில் எட்டாவது திருமுறையாக விளங்குகிறது. இவர் மதுரை மன்னனின் அமைச்சராக இருந்தவர். திருப்பெருந்துறையில் இறைவனே குருவாக வந்து இவருக்கு உபதேசம் செய்தார். தில்லைக்கு இவர் வந்தபோது "உங்கள் திருவாசகத்தின் பொருள் என்ன?" என்று தில்லை வாழ் அந்தணர்கள் கேட்டார்கள். இவர் அவர்களோடு அம்பலத்திற்கு வந்து "நான் பாடிய வாசகத்திற்கு பொருள் இவரே" என்று நடராஜப் பெருமானைச் சுட்டிக்காட்டினார்.

சிவனையே சிக்கெனப் பிடித்தவர்

மாணிக்கவாசகர் "அன்பில் விளைந்த ஆரமுதே" என்னும் பதிகத்தில் தான் சிவபெருமானை இந்தப் பிறவியிலேயே உறுதியாகப் பற்றிக் கொண்டதாகக் கூறுகிறார்.

பால் நினைத்து ஊட்டும் தாயின் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள் ஒளி உவப்பிலா ஆனந்தம் ஆய
தேனினை சொரிந்து புறம் புறந்திரிந்தே செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே

(பிடித்த பத்து)

தாயானவள் தன் குழந்தை அழுதபோதுதான் பால் ஊட்ட வேண்டும் என்றிராமல் தக்க காலத்தில் குழந்தையின்மேல் பரிவு கொண்டு பால் ஊட்டுவாள். அதேபோல ஆண்டவன் தனது பக்தர்களின் கோரிக்கைகளை தானாகவே அறிந்து உதவி புரிவான். அப்படிப்பட்ட தாய் போன்ற நீ என்மீதுள்ள பரிவால் நான் செல்லுமிடம் தோறும் என் பக்கமும் முன்னும் பின்னுமாக நீ இருந்ததை கவனிக்காத பாவியாவேன்; உன் அருள் எனக்கு கிடைத்ததால் உன்னைத்

தொடர்ந்தேன்; உன்னை உறுதியாகப்பற்றிக் கொண்டேன். நீ இனி எங்கும் செல்ல முடியாது. என் மனதுள் நிலையாக அமரவேண்டும்".

நவரத்தினங்களுள் சிறந்தது மாணிக்கம். இதை ராஜ ரத்தினம் என்பார்கள். திருமாலைக் கருமாணிக்கம் என்றும், சிவபெருமானை செம்மாணிக்கம் என்றும் குறிப்பிடுவதுண்டு. ஆகவே தான் மாணிக்கம் போன்ற வாசகத்தையுடைய வாதவூரடிகளைச் சிவபெருமானே திருப்பெருந்துறையில் "மாணிக்கவாசக" என அழைத்தார். பழம்பாடலும் "வாக்கிற்கு அருணகிரி வாதவூரர் கனிவில்" எனக் கூறி இவர் வாசகத்தை சிறப்பித்தது.

திருவாசகத்திற்கு நடுநாயகமாக விளங்குவது திருவெம்பாவை. சைவ சித்தாந்த தனிமை சாஸ்திரம் என்றழைக்கப்படும் சிவஞான போதத்திற்கு இது ஊற்றுக் கண்ணாக இருப்பது.

"பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று இறைவனே கேட்டு மாணிக்கவாசகரை திருக்கோவையார் என்ற அகத்துறை பாடல்களை பாட வைத்தார் என்ற வரலாறு திருவெம்பாவைச் சிறப்பைக் காட்டுகின்றது. திருக்கோவையாருக்கு திருவெம்பாவை வகை நூல் என்பர்.

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்னும் பழமொழி யாவரும் அறிந்ததே.

மக்கள் உள்ளம் இயற்கையில் நெகிழ்ச்சியுடையது. குழந்தை உள்ளம் இயற்கை உள்ளம் எனலாம். வயது ஏற ஏற இயற்கை உள்ளம் கல்லாய் விடுகிறது. கல்லான உள்ளத்தை மீண்டும் கனிவிக்க வல்லது திருவாசகம்.

மாணிக்கவாசகர் முழு வாழ்க்கை வாழ்ந்தவர். சமய நூல் கூறும் தத்துவப் படிகளில் கீழிருந்து மேலே ஒழுங்காக ஏறிச் சென்றவர். தளராமல் உழைத்தவர். அச்சம் உற்றபோதெல்லாம் அழுதழுது அவனருளைப் பெற்று அச்சம் அகன்றவர். இவர் வழிசெல்ல விரும்புபவருக்கு உறுதி, உழைப்பு, இறைவன்பால் அன்பு வேண்டும்.

இவர் தலயாத்திரை சென்றபோது திருவண்ணாமலை வந்திருக்கிறார். அங்கு மார்கழி மாதம் திருவாதிரைக்கு முன் அதிகாலையில் பெண்கள் ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு நீராடச் செல்வதைக் கவனித்திருக்கிறார். அவர்களிடையே பேச்சும், ஏச்சும், பரிகாசமும், நகையும், அன்பும், ஆரவாரமும் இவர் கவனத்தைக் கவருகிறது. இந்த பேச்சிலே சிவ பக்தியும் குழைந்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்று அவர் மனதில் படுகிறது. "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியை" எண்ணி பாட ஆரம்பிக்கிறார்; திருவெம்பாவை உதயமாகிவிடுகிறது.

"மலவிருளூற்று உறங்காமல் மன்னு பரிபாகர் அருள் செலமுழுக வருகலனச் செப்பல் திருவெம்பாவை" என்று கூறுகிறது திருப்பெருந்துறை புராணம்.

"திரு" என்பது தெய்வத்தன்மையையும் "எம்" என்பது உயிர் தன்மையையும் பாவை என்பது வழிபாட்டுக்கினிய திருவுருவையும் குறிக்கும்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் 'பாவாய்' என்று குறிப்பிட்டுப் பாடினுர். சக்தி ஸ்வரூபமாக நம் உடலுக்குள்ளேயே இருக்கும் ஆதிமசக்தியானது நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சக்தியைப் பிறக்கச் செய்கிறது. அது மனேன்மணியம் என்ற நவசக்திகளை எழுப்புவதாக கூறப்பட்டிருக்கிறது.

கிருஷ்ண ஸ்தோத்திரத்திலும் 'எம் பாவை' என்ற பதம் வருகிறது. எம் என்ற பதத்தை எடுத்துவிட்டு திருப்பாவை என்று வைஷ்ணவர்கள் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். பாவைப் பாட்டின் இலக்கணம் நான்கடிக்கு அதிகமாக பத்து அடிவரை வரும் கொச்சகம் ஆகும். இதன்படி திருவெம்பாவை எட்டு அடிகளைக் கொண்டு வந்த கொச்சகக் கலிப்பா ஆகும்.

திருவெம்பாவை தத்துவம்

ஒவ்வொரு நாள் அந்தி வேளையில் உயிர்கள் ஒடுங்க ஆரம்பிக்கும் இது சிவசக்தியின் சம்ஹார தத்துவத்தையும், விடியற்காலை சிவசக்தியின் படைப்பு தத்துவத்தையும் குறிக்கிறது. விடியற்காலையாகிய ஐந்து நாழிகை படைப்பு காலத்தைக் குறிக்கும். சிவசக்தியில் அருட் செயலை திருவெம்பாவை போற்றுகிறது.

எட்டு பேர்களை முதலில் கிளம்பிய பெண் எழுப்புகிருள். ஆக ஒன்பது பெண்கள்-நவசக்திகள்: இவர்கள் மனேன்மணி, சர்வபூதமனி, பகலவிகரனி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை, பலப்பிரதமனி, பகலவிகரனி. இந்த நவசக்திகளும் உலகப்படைப்பின் பொருட்டு முன்னவள் பின்னவளை செயல்படுத்திய குறிப்பே முதல் எட்டு பாட்டுகளாகும்.

ஒன்பது முதல் இருபதாவது பாட்டு முடிய இந்த நவசக்திகள் ஒன்று சேர்ந்து சிவபெருமானைப் புகழ்ந்து துதிப்பதாகும்.

திருவருள் சக்தியாகிய அம்பிகை, பாவைத் திருவுருவில் நின்று ஆனந்த தாண்டவத்தில் தூக்கிய திருவடி அருளால் அவனுடன் இரண்டற கலக்கின்ற பேரின்பத்தை தருகிருள் என்பது இப்பாவை நோன்பின் தத்துவம்.

அர்த்த நாரீஸ்வரராகிய சிவபெருமானை விட்டு நீங்காத பராசக்தி அருளால் ஏவப்பட்டவள் மனேன்மணி சக்தி. இவள்தான் மும்மலங்களிலிருந்து உயிர்களை விடுவித்து இறைவன் திருவடிகளில் சேர்ப்பிப்பவள். இச்சக்தியே ஆன்மா, சூரியன், சந்திரன், ஆகாயம் தேயு, வாயு அப்பு பிருதிவியாகிய அஷ்டமூர்த்திகளிடமுள்ள சக்திகளை எழுப்புவதாக திருவெம்பாவை முதல் எட்டுப் பாட்டுகளும் அமைந்துள்ளன. ஒன்பதிலிருந்து 20 வரை நவசக்திகளும் சேர்ந்து

சிவபெருமானைப் போற்றி துதிப்பதாக அமைந்துள்ளன. ஒன்பதாவது பாட்டிலும் பத்தொன்பதாவது பாட்டிலும் பயன்கருதி விண்ணப்பம் செய்கின்றனர். பத்தாவது பாடலில் திருக்குளம் செல்கின்றனர். பதினொன்று முதல் பதினெட்டு வரை அம்மையப்பர் வடிவமான திருக் குளத்தில் அவர் அருள்மயமான நன்னீரில் திருவருளை ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் நீராடுகின்றனர். இருபதாவது பாடலில் படைப்பு முதலிய ஐந்து தொழில்களின் உண்மையும் அவற்றால் வினையும் பயனும் விளக்கப் பெற்றுள்ளன.

இறைவனின் திருவடிப்புகழ் இந்த பாடல்களில் விவரமாகக் காணப்படுகிறது.

"விண்ணோர்கள் ஏத்துதற்கு கூசும் மலர்பாதம். பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர், ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள், தோற்றமாம் பொற்பாதம், போகமாம் பூங்கழல்கள் ஈறாரும் இணையடிகள், மால் நான்முகனும் காணாத புண்டரீகம் யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள் என ஐந்தொழில்களுக்கும் அவன் திருவடிகளே காரணம் என்றாலும் அவன் மெய்யன்பர்களுக்கு எளியவந்த பிரான் "நந்தம்மை கோதாட்டி இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலர் பொற்பாதம் தந்தருளும் சேவகன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுண்மையை பெரிய புராணத்தில் பல நாயன்மார்கள் வரலாற்றில் காண்கிறோம்.

திருவாசகத்தில் திருவெம்பாவை "சக்தியை வியந்தது" என்ற தலைப் புடன் காணப்படுகிறது. இதிலிருந்து தேவியின் வணக்கத்தை அடிப் படையாகக் கொண்டது என்று கருதலாம்.

உனக்கே அடைக்கலம்

"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்பது ஒரு பழமொழி. இந்த வார்த்தைகளுடன் ஆரம்பமாகும் திருவெம்பாவை யின் 19-வது பாட்டு அடைக்கலப் பாட்டாகும்.

ஒரு பிள்ளையை ஒருவரிடம் ஒப்படைக்கும் போது அவரே தாயாகவும் தந்தையாகவும் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று சொல்வதுண்டு குருகுல ஆசிரியரிடம் தன் பிள்ளையை ஒப்படைக்கும் போது இம்மாதிரி சொல்வதுண்டு. திருமண காலத்திலும் பெண்ணைப் பெற்றவர்கள் இதைச் சொல்வதுண்டு.

பாவை நோன்பு நோற்கும் பெண்கள் இறைவனிடம் இம்மாதிரி கூறுகிறார்கள். இவர்கள் கவலை எல்லாம் சிவபெருமானுக்கு அன்பர் களாக இல்லாதவர்களை மணந்துகொள்ள நேர்ந்துவிடலாகாதே என் பதே. அச்சத்திற்கு வேறு காரணமும் உண்டு. அடைக்கலமாக ஒப்பு வித்தபின் 'அதுவேண்டும்' 'இதுவேண்டும்' என்று கேட்பது சரியன்று. அடைக்கலமாகப் பெற்றுக் கொண்டவனுக்குத் தெரியாததையா இவர்கள் புதிதாகச் சொல்லப்போகிறார்கள்,

கை, சிவ கைங்கரியத்திற்கே அர்ப்பணம் ஆகவேண்டும் என்று சொல்வதுடன் அமையாது கண் அல்லும் பகலும் 'சிவனையன்றி காணாது ஒழிக' என்றும் கோருகிறார்கள்.

எம் கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க

இத்தகைய பக்திக் காதலிகள் தங்களுக்கு கணவர்களாக சிவ பக்தர்கள் வாய்க்கவேண்டும் என்று கோருவதில் வியப்பென்ன?

திருவெம்பாவையின் உயர்நிலைக்கொள்கையாகிய கைங்கரியப் பிரார்த்தனை இதில் வெளியிடப்படுகிறது.

"போற்றி" பாட்டு

திருவெம்பாவையின் கடைசிப் பாடலான இது இறைவனின் திருவடிப்பெருமையைப் போற்றி புகழ்கிறது.

போற்றி! அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி! அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி! எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றி! மால் நான்முகனும் காணாத புண்டரீகம்
போற்றி! யாம்உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி! யாம் மார்கழி நீராடு ஏலோர் எம்பாவாய்.

ஆதியாம் நிலைமைக்கும் அந்தமாம் நிலைமைக்குமிடையே நடைபெறுகின்றன சிவபெருமானது ஐந்தொழில்கள். முதலில் படைப்பு கூறப்படுகிறது—தோற்றமாம் பொற்பாதம்; பின்னர் காப்பாற்றுதல்—போகமாம் பூங்கழல்கள். அழித்தல்—எல்லா உயிர்க்கும் ஈறும் என்பதால் குறிப்பிடப்படுகிறது. மறைத்தல் என்பதை 'மால்நான் முகனும் காணாத புண்டரீகம்' என்பதால் உணர்த்தப்படுகிறது. அருளல் என்பதையும் திருவடிகளே செய்கின்றன என்பது "யாம்உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்' என்பது குறிப்பிடுகின்றன. கடைசியாக மார்கழி நீராட்டம் தங்களைக் காத்தருளவேண்டும் என்று பிரார்த்திக்கப்படுகிறது. இறைவனைப் பக்திக் காதலுடன் வாழ்த்துவதற்கு மார்கழி நீராட்டம் காரணமாக இருந்ததால் அந்த நீராட்டத்தையும் போற்றி வாழ்த்துகிறார்கள்.

இறைவன் திருவடிகள் மாதமலர் என்றும் செந்தளிர் என்றும் பொற்பாதம் என்றும் பூங்கழல்கள் என்றும் பொன்மலர்கள் என்றும் புகழப்படுகிறது.

திருவெம்பாவை பாசுரம் பிறந்தது திருவண்ணாமலையில்தான் என்பதைக் குறிப்பதுபோல திருவண்ணாமலை தத்துவத்தை உணர்த்தும் அடி முடி தேடிய விவரம் போற்றி பாட்டில் குறிப்பிடப்படுகிறது. திருவண்ணாமலை ஆலயத்தில் உண்ணாமலை அம்மன் ஆலயச்சுவரில் திருவெம்பாவை கல்வெட்டில் பொறிககப்பட்டுள்ளது.

திருவெம்பாவை தத்துவார்த்தம்

1. ஆதியும் அந்தமும் இல்லா: உறங்குபவர் எழுப்ப சிறிது ஓசைப்படுதத்துவது உண்டு. சிவநேசச் செல்வியர் "சித்தம் அழகியர்" ஆனதால இவர்களை எழுப்புவதற்கு இறைவன் திருவடிகளை வாழ்த்திப் பாடுகின்றனர்.

2. பாசம் பரஞ்சோதிக்கு: முதல் பாட்டில் ஈசன் அருட்பெரும் சோதி. இதில் பரஞ்சோதி எனக்குறிப்பிடப்படுகிறுன். எதற்கும் மேலான ஜகஜ்ஜோதியையும் சுட்டிக்காட்டுகிறது.

3. முத்தண்ண வெண்ணனியாய்: பரிகாசம் செய்வதிலும் பிறர் மனம் நோகச்செய்யக்கூடாது.

4. ஒன்றித் திலநகையாய்: இறைவன் மருந்தாகவும், விழுப் பொருளாகவும் கண்ணுக்கினியவனுகவும் போற்றப்படுகிறுன். வாழ் நாள் வீண் நாள் ஆகாதபடி இறைவனைப் பாடி உருகுவது அவசியம்.

5. மால் அறியா: இறைவன் காண்பதற்கு அரியவனுயினும் நமது குற்றம் பொறுக்கும் அருள் உடையவன்.

6. மானே! நீ நென்னலே: முன்பாட்டில் இறைவனது சீலத்தை சுட்டிக்காட்டிய பின் இதில் இறைவன் தானே இறங்கி வந்து சிறந்த முறையில் கருணைபுரியும் எளிமை நிலை வர்ணிக்கப்படுகிறது.

7. அன்னே! இவையும் சிலவோ! இப்பாட்டில் அன்பர்களின் அன்பு சிறப்பு பற்றி பேசப்படுகிறது.

8. கோழி சிலம்பச் சிலம்பும்: ஆனந்தமான காலை வேளையில் சிவபெருமானின் புகழைப்பாடுவது நலம் (உறங்கிக்கழிப்பது சரியன்று).

9. முன்னை பழம்பொருட்கும்: முதல் எட்டு பாசுரங்களில் தூங்கு கிறவர்களை எழுப்புவது நடைபெற்றது. எழுப்புபவர் எழுப்பப்படுபவர் இருவருக்குமே மார்கழி நீராட்டத்தின் பலன் கிடைக்கிறது.

சிவனடியார் ஒருவரை கணவனுகப்பெற விருப்பம் தெரிவிக்கப் படுகிறது. தொண்டர் கூட்டத்தில் ஒருவர் கணவனுகிவிட்டால் மக்களையும் தொண்டு நெறியில் பழக்கிக்கொண்டு போவதும் எளிதாகும்;

10. பாதாளம் ஏழினுங் கீழ்! இறைவன் ஆணு? பெண்ணு? இவனை ஒருத்தன் என்றோ ஒருத்தி என்றோ கூறமுடியாது. ஒருவனி அல்லன் ஓர் ஊரன் அல்லன் என்ற அப்பர் திருவாக்கையும் நினைவூட்டுகிறது இப்பாட்டு.

11. மொய்யார் தடம் பொய்கை: தாமரைப் பொய்கையில் தெளிந்த நீரைக் கண்டதும் அன்பு பெருக அந்த நீராட்டத்தை நினைத்து அருள் சுரந்த இறைவனை முன்னிலைப்படுத்தி பிரார்த்தித்துக் கொள்வதும் நன்றியும் தெரிவிக்கப்படுகிறது.

12. ஆர்த்த பிறவி துயர்கெட: முன்பாட்டில் தங்களைச் சோர்வு இல்லாமல் ஆண்டவன் காத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டவர்கள் இப்பாட்டில் அவன் கருணையைப் பாராட்டு கின்றனர்.

13. பைங்குவளைக்கார் மலரால்: நீராடும்போதும் இறைவன் நினைப்புதான். கருங்குவளை உமாதேவியையும் செங்கமலர் சிவபெருமானின் மேனிநிறத்தையும் நினைப்பூட்டுகிறது.

14. காதலர் குழையாட: நீராடும் வர்ணனை. நீராடும் அழகியர் புற அழகும் அக அழகும் புலப்படக் குதூகலமாக நீராடுவதைக் காண்கிறோம்.

15. ஓர் ஒரு கால் எம்பெருமான்: பக்தியே பித்தாடும் நிலை. நம் சாமர்த்தியத்தால் இறைவனுக்கே நாம் பித்தாகும் நிலையை அடைய முடியாது. அவனுடைய சாமர்த்தியம்தான் அப்படி செய்யமுடியும் ("அவனருளாலே அவன்தாள் வணங்கி").

16. முன்னிக் கடலைச் சுருக்கி: மழைப் பாட்டு. அன்னையின் அருள் போல் மழை பொழியவேண்டும் என்று பிரார்த்தனை.

17. செங்கண் அவன்பால்: தேவி உயிர்களின் குற்றங்களை நீக்குகிறாள் என்றும் இறைவன் உயிர்களுக்கு அருளுகிறான் என்பதையும் இப்பாட்டு உணர்த்துகிறது.

18. அண்ணாமலையான் அடிக்கமலம்: இறைவனது ஒருமைநிலை உணர்த்தப்படுகிறது. சூரிய ஒளியில் சந்திர ஒளியும் நட்சத்திர ஒளியும் ஒடுங்கி மறைவதுபோல ஞானசூரியனாகிய சிவ பரஞ்சோதிக்கு முன் இதர தேவதைகளின் பொலிவெல்லாம் ஒடுங்கிவிடுகிறது.

19. உங்கையில் பிள்ளை உனக்கே: அடைக்கலப் பாட்டு. இவர்கள் ஏற்கனவே அடைக்கலமடைந்தவர்கள். அதை இறைவனுக்கு நினைவூட்டுகிறார்கள்.

20. போற்றி அருளுக நின் ஆதியாம்: நீராடியாகிவிட்டது. மழையும் நல்ல கணவனும் கோரி பிரார்த்தித்தாகி விட்டது. எல்லோரும் சேர்ந்து இறைவனைப் போற்றி துதிக்கிறார்கள்.

ஊஞ்சல் விழா

மார்கழி நோன்புக்கும் ஊஞ்சலுக்கும் நெருங்கியதொடர்புண்டு. இதனை மலையாள நாட்டில் இன்றும் காணலாம். ஊஞ்சல் விழா சிறப்பாக நிகழ்வது திருவாதிரையில்தான்.

திருவாதிரைக்கு முன்பு பத்து நாட்களும் சிவாலயங்களில் திருவெம்பாவைப் பாடல்கள் மாத்திரமே ஓதலும் திருவாதிரையன்று திருவெம்பாவையைப் பாடிய பின்னர் தேவாரம் முதலிய திருமுறைப் பாடல்கள் வழக்கம்போல் பாடுவதும் மரபு.

ஆகமங்களும் 'டோலோத்சவம்' என்பதனை இன்றியமையாத திருவிழாக்களில் ஒன்ருகக் கூறுகின்றன. இந்த 'டோலோத்சவம்' இளவேனிற்காலத்துச் சித்திரையிலும், முன் பனிக்காலத்து மார்கழியிலும் நிகழுமென்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. பல திருவிழாக்களையும் பாவையொருத்தி காணுது மறைந்ததற்கு வருந்தி, திருப்பூம்பாவைப் பதிகமொன்று திருஞானசம்பந்தர் பாடுகிருர். அதிலே கார்த்திகை விளக்கீடு, மார்கழி ஆதிரை நாள், தைப்பூசம், மாசிக் கடலாடு, பங்குனி உத்தரம் என்பவற்றைக் கூறியபின் 'பொற்ருப்புக் காணுதே போதியோ பூம்பாவாய்' என்று பாடுவதனுல் 'பொற்ருப்பு' என்பது சித்திரை மாதத் திருவிழா எனலாம். தாப்பிசைப் பொருள் கோள் என்பதற்கு ஊஞ்சல் போல் முன்னும் பின்னும் சென்று கூடும் பொருள்கோள் என்று கூறுவதால் இங்கும் 'தாப்பு' என்பதற்கு ஊஞ்சற்கயிறு என்று பொருள் கொண்டு 'பொற்ருப்பு' என்பதனைப் 'பொன்னூசல்' என்றே அறுதியிட்டுக் கூறலாம்.

திருவாதிரை சிவனுடைய திருநாளெனப் போற்றப்பெறும். இதனுல் சிவபெருமானுக்கு 'ஆதிரையான்' என்ற பெயருண்டு. சிவபெருமானைச் சிவசூரியனுக வழிபடுவது சைவரின் வழக்கம். ரிக் வேதம் சூரியனை 'வானப் பொன்னூசல்' என்று பாடுகிறது. வேதத்தில் சூரியன் என்று வருவதெல்லாம் கடவுளையே குறிப்பதாகக் கொள்ளலாம். கம்பனும் கதிரவன் எழுவதனைக் கூத்தன் திருநடமாகக் கண்டு பாடுகிருன். எனவே, ஊஞ்சல் திருவிழாவே திருவாதிரைத் திருவிழாவாக விளங்குவதற்கு எல்லாப் பொருத்தமும் உண்டெனலாம்.

மாணிக்கவாசகர் தொடர்புள்ள தலங்கள்

மாணிக்கவாசகருக்கே ஒரு தனியான பெரும் ஆலயம் உள்ளது. அது எது தெரியுமா? திருப்பெருந்துறை ஆலயம்தான். அங்கே ஆத்மநாதர் யோகாம்பாள் அருவமாக கோயில் கொண்டிருந்தாலும் பிரதான்யம் மணிவாசகருக்கே.

இவர் வாதவூர் என்ற தலத்தில் பிறந்தவர் (மதுரைக்கு வடகிழக்கில் 14 மைலில் உள்ள தலம்) இங்கு மணிவாசகருக்கு தனி சந்நிதி இருக்கிறது. இங்கு இரு செப்புருவுகள். தொன்மையானது முழங்கால் வரை உடை உடுத்திய பாணியிலுள்ளது. சமீபத்தில் செய்யப்பட்டது கோவணத்துடன் உள்ளது. மாணிக்கவாசகரை ஏன் இப்படி ஆண்டியாக சிற்பி வடித்திருக்கிருன் என்று தெரியவில்லை. இங்குள்ள இறைவன் பெயர் வேதநாயகர். இங்கிருந்து இரு பர்லாங்கு தூரத்தில் மாணிக்கவாசகருக்கு சிறு கோவில் கட்டியிருக்கிருர்கள், அங்குதான் மணிவாசகர் வீடு இருந்ததாம்.

பல கலைகளையும் இளம் வயதிலேயே இவர் கற்று மதுரையை ஆண்ட அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராகப் பணிபுரிகிருர். இவரிடம் 40 கோடி பொன் கொடுத்து கீழ்க்கடற்கரைக்குச் சென்று அராபியர்கள் கொண்டு வரும் குதிரைகளை வாங்கிவரச் சொல்கிருன். அமைச்சரான திருவாதவூரரும் திருப்பெருந்துறை வந்து சேருகிருர் அங்கு குருந்த மரத்தடியில் ஒரு முனிவர் சில சிஷ்யர்களுக்கு ஞானுப

தேசம் செய்துக்கொண்டிருக்கிறார். அக்குருவினிடம் இவருக்கு ஈடுபாடு ஏற்படுகிறது. அவருக்கு சீடராகி, தான் வந்த காரியத்தை மறக்கிறார். தன்னை தடுத்தாட்கொண்டது இறைவனே என உணர்ந்து கொண்டு வந்த பணத்தையெல்லாம் இறைவனுக்கு கோயில் கட்டுவதிலேயே செலவு செய்கிறார்.

விஷயம் பாண்டியனுக்கு எட்டுகிறது. அரசன் அவரை மதுரைக்கு அழைக்கிறான். "குதிரைகள் எங்கே?" என்று கேட்கிறான் இறைவன் அருளியப்படி ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று கூறுகிறார். வாதவூரர் சொன்னபடியே ஆவணி மூலத்தன்று திருப்பெருந்துறைக் காட்டிலுள்ள நரிகளை எல்லாம் பரிகளாக்கி அவைகளை ஓட்டிக் கொண்டுதானே ராவுத்தனாக மதுரைக்கு வருகிறார். குதிரைகளை லாயத்தில் கட்டிவைக்கிறார்கள். ஆனால் இரவில் பரிகள் மீண்டும் நரிகளாகி மற்ற குதிரைகளையும் கடித்து குதறிவிட்டு ஓடிவிடுகின்றன. மன்னன் இது அறிந்து வாதவூரரை சிறையில் அடைக்கிறான்.

இறைவன் வைகையை பெருக்கடிக்க வைத்து அணை உடையச் செய்து, கூலியாளாக வந்து, பிட்டுக்கு மண் சுமந்து மன்னனிடம் பிரம்பால் அடிபடுகிறார். பின் இறைவன் தன் திருக்கோலம் காட்டி அருளுகிறார். வாதவூரர் இறைவன் கருணையை நினைத்துப்பாட ஆரம்பிக்கிறார் இவர் பாடியதே திருவாசகம். இதற்கு காரணமாக இருந்த தலமே திருப்பெருந்துறை.

இந்த மணிவாசகரையும் இவருக்கு குதிரை வியாபாரியாக வந்த இறைவனையும் ஆவுடையார் கோவில் என்ற இப்பெருந்துறையில் தரிசிக்கலாம். இங்கு பதினெரு கைகளுள்ள கணபதி பிரசித்தம். இங்கு மணிவாசகர் இருகோலங்களில் காணப்படுகிறார். ஒன்று அமைச்சர் கோலம், தலையில் கிரீடமும் உள்ளது. இவருக்கு எதிர்புறம் மணிவாசகர் துறவுக்கோலத்தில் உள்ளார். இந்த மண்டபத்திலுள்ள கொடுங்கைகள் உலகிலேயே மிக பிரசித்தியானவை.

இரண்டாவது பிராகாரத்தில் பஞ்சாக்ஷர மண்டபம் இருக்கிறது. அம் மண்டபத்தூண் ஒன்றில்தான் குதிரைசாமி இருக்கிறார். இவருக்கு பூஜை நடைபெறுகிறது.

.திருப்பெருந்துறை ஆலயத்தின் முன் மண்டபத்தின் முகப்பில் பாய்ந்து வரும் குரங்கும், இறுகப்பற்றி இருக்கும் உடும்பும் சிற்பங்களாக காட்சியளிக்கின்றன. "கோவிலுக்குள் செல்லும் போது கிளைக்கு கிளை தாவும் குரங்குபோல மனதை அலையவிடாதே, உடும்பு பிடி போல ஒரே தெய்வ சிந்தனையுடன் சந்நிதானத்திற்குச் செல்க" என்பதை இச்சிற்பம் உணர்த்துகிறது.

மாணிக்கவாசகர் ஆலயம் திருவாவடுதுறை ஆதினம் ஸ்ரீமத் சுப்பிரமணிய தம்பிரான் காலத்தில் (1879) கட்டப்பட்டது. காசியிலிருந்தே செங்கற்களை வரவழைத்து இது கட்டப்பட்டதாகும்.

மாணிக்கவாசகர் சரிதம் முழுக்க முழுக்க நடைபெற்றது மதுரையில்தான். பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் பற்றிய உத்ஸவம் ஆவணி மூலத்தன்று மிக பிரபலமாக நடைபெறுகிறது.

மதுரையிலிருந்து புறப்பட்டு வழியிலுள்ள தலங்களை வணங்கிக் கொண்டே திருப்பெருந்துறைக்கு வந்தார் மணிவாசகர். அங்கு இறைவன் தோன்றி அவரை சிதம்பரம் வரும்படி பணித்தார். சுவாமிகள் திருஉத்திரகோசமங்கைக்கு சென்று அங்கு சில நாள் தங்கினார். இங்குதான் ஜோதி நடராஜா திருஉரு உள்ளது. எப்போதும் சந்தனக்காப்பிலேயே மூழ்கி இருப்பார். ஆண்டுக்கு ஒரு தரம் சந்தனகாப்பை நீக்கி மீண்டும் சந்தன காப்பிடும்போது சிவாச்சாரியார் கண்களைத் துணியால் கட்டிக்கொண்டே காப்பிடுவார்.

பின்னர் திருவாரூர், சீர்காழி முதலிய தலங்களை வணங்கி திருவண்ணாமலை வந்தார். அங்குதான் அவர் திருவெம்பாவையைப் பாடினார்.

சிதம்பர க்ஷேத்திரம் வந்ததும் வீதிகள் தோறும் விழுந்து வணங்கினார். கோவிலுள் ஆனந்த நடராஜனைக்கண்டு அனலிட்ட மெழுது போல கசிந்துருகினார். அங்கு பலநாள் தங்கினார்.

இவருடைய மணிவாசகத்தை கேட்க விரும்பிய இறைவன் ஒரு முதியவராக வந்து அவரைப் பாடச்சொல்லி அவைகளை எழுதிக் கொண்டு மறைந்தார். வந்தவர் சிவபெருமான் என்பதை அறிந்த மணிவாசகர் ஆனந்தக் கண்ணீர் சொரிய ஆண்டவனை வணங்கி தம் வாசகங்களை எழுதிக்கொண்டு போன காரணத்தை அறியாது திகைத்தார். இவருடைய பெருமையை உலகறியச்செய்யவே சிவபெருமான் தான் எழுதிய சுவடிகளை கோயில் வாயிற்படியில் வைத்தார். இதைக் கண்டெடுத்த தில்லை மூவாயிரவர்கள் மணிவாசகரை அழைத்து அதன் பொருளைக் கேட்டார்கள். அவர் அவர்கள் பொன்னம்பலத்திற்கு அழைத்து வந்து நடராஜப்பெருமானை சுட்டிக்காட்டி 'பொருள் இவர் தாம்' என்று கூறி மறைந்தார்.

தில்லை முதூர் ஆடிய திருவடியிலே மணிவாசகருக்கு இருந்த ஈடுபாட்டுக்கு அளவே இல்லை என்று தெரிகிறது. இவர் இங்கு பல நாள் தங்கி குலாப்பத்து, திருப்பதிகம், கோயில் பதிகம், கீர்த்தித் திருவகவல், திருஅண்டப்பகுதி. போற்றித் திருஅகவல், திருப்பொற் சுண்ணம், திருத்தெள்ளேணம் திருவுந்தியார் திருத்தாணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், முதலியவற்றைப் பாடினார். அன்னைப்பத்து, கோத்தும்பி, குயிற்பத்து திருத்தசாங்கம்ஆகியவையும் இங்கு எழுந்தவையே இறைவன் பஞ்சபூதங்களிலும் நிறைந்திருக்கிற தன்மையை,

பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

என்று பாடுகிறார்.

பெண்கள் சுண்ணம் இடிப்பதைக்கண்டு அதிலும் இறையுணர்வை காணுகிருர். அப்பெண்கள் வளைக்கரங்கள் ஒலிக்க, கிண்கிணி மாலைகள் ஒலிக்க முகத்தில் குறுவேர்வை அரும்ப, விழிபுரள, சுண்ணம் இடிப்பதை அவர் கண்டார். அதையே பொற்சுண்ணம் இடிக்கும் பாடலாகப் பாடினுர்.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனேடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆட
பித்தெம்பிரானேடும் ஆட ஆட
பிறவி பிறரோடும் ஆட ஆட
அத்தன் கருணையோடு ஆட ஆட
ஆடப்பொற் அண்ணம் இடித்தும் நாமே.

வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்க, கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டே தெள்ளேணம் கொட்டு தலாகும். நம் நாட்டில் இதனைக் கும்மி என்ருல் மலையாள மக்கள், கைகொட்டிக் களி என்றே இதனை அழைக்கின்றனர். இந்தத் தெள்ளேணப் பாடல்கள் சாதாரணமான எண்ணங்களை மட்டும் பிரதிபலிப்பனவாக இல்லை ; பெரிய பெரிய உண்மைகளையே, தத்துவங்களையே, எளிய தமிழில் இனிய சந்தத்தில் இசைத்திடும் பாடல்களாக அமைந்திருக்கின்றன.

வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டு என்னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ?

என்று கேட்கும்போது நான் என்னும் அகந்தை நம்மைவிட்டு ஓடியதில் ஏற்பட்ட மகிழ்ச்சி தோன்றுகிறது அல்லவா?

தில்லையில் அடிகளார் பாடிய பாடல்களில் சிறப்பாக கருதப் படுவது திருச்சாழல் பதிகத்தையே. இன்றைய உலகம் 'கேள்வி - பதில்' உலகமாக இருக்கிறது. மணிவாசகரும் கேள்வி பதில் முறையிலேயே திருச்சாழல் பதிகம் பாடியிருக்கிருர். சாழல் பாடல்களுக்குப் பகைப்புலனுக ஒரு வரலாறும் கூறப்படுகிறது. ஈழ நாட்டிலிருந்து வந்த புத்த பிக்ஷுக்கள் சிலர் தில்லை வந்து தில்லை வாழ் அந்தணரை வாதுக்கு அழைத்திருக்கின்றனர். இறைவன் ஆணைப்படி மணி வாசகரே அவர்கள் வாதத்துக்குப் பதில் சொல்ல வந்து நின்றிருக் கிருர். பௌத்தர்களோடு வழக்காடு முன் மணிவாசகர் இறைவனை நினைந்திருக்கிருர். பௌத்தர்கள் எல்லாம் வாய்மூடி ஊமைகளாக நின்றிருக்கின்றனர். தில்லையை ஆண்ட மன்னன் மகள் ஒருத்தி ஏற்கனவே பிறவி ஊமையாக இருந்திருக்கிருள். இறையருளால் அவளே வாய் திறந்து பேசிப் புதிய ஊமைகளை - பௌத்தர்களை - எல்லாம் மடக்கியிருக்கிருள் வாதில். இந்த அற்புத நிகழ்ச்சிக்கு உருவம் கொடுத்தே மணிவாசகர் திருச்சாழலைக் கேள்வி - பதிலாகவே பாடியிருக்கிருர் என்பர்.

தென்பா லுகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி

என்று சாழல் விளையாட்டில் ஈடுபட்ட பெண்ணொருத்தி கேள்வி போடுகிருள், இதனைக் கேட்ட மற்றொரு பெண்,

பெண்பால் உகந்திலனேற் பேதாய்! இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ!

என்று பதில் கூறியிருக்கிருள்.

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று நண்ணுவதும் என்னேடி

என்பது ஒரு பெண்ணின் கேள்வி.

நம்பனையு மாமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாஎன்று ஏத்தினகாண் சாழலோ!

என்பது இக்கேள்விக்குப் பதிலாய் அமைகிறது.

தில்லையில் பூவல்லி கொய்து, கோத்தும் பொன்னூசல் ஆட்டிப் பல பல பாடல்களைப் பாடியபின் தன் இதயக் குயிலையும் கூவ விட்டிருக்கிருர் அடிகளார்.

கீதம் இனிய குயிலே! கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லில் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுணம் ஒன்றும் இல்லான் அந்தமி லான்வரக் கூவாய்!

என்று குயிலுக்கு வேண்டுகோள் விடுகிறபோது இறையுணர்ச்சி மணிவாசகரது உள்ளத்தில் நிறைந்திருக்கும் பான்மையை உணர்கிறோம்.

திருப்பாவையில் வரும் அணிகலன்கள்

காசு மாலை, பெண்கள் கை வளையல்கள், தோள் வளை, சூடகம், தோடு என்னும் காதணி, கன்னப்பூ என்னும் செவி அணி, பாடகம். இவைகளை அக்காலப் பெண்கள் அணிந்திருந்தனர். தோள்வளையை இக்கால வங்கி எனலாம். பாடகம் மகளிர் காலணி. சூடகம் என்பது ஒருவகை கை வளையின் பெயர்.



நடராஜர் தரிசனம்

(ஆருத்திரா விழா)

குனித்த புருவமும் கொவ்வை
 செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
 மேனியில் பால் வெண்ணீரும்
இனித்தம் உடைய எடுத்த
 பொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
 இம்மாநிலத்தே

—திருநாவுக்கரசர்

சைவ நூல்களில் 'கோயில்' என்றாலே சிதம்பரத்தைத்தான் குறிப்பிடப்படுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினாலும் சிறந்து விளங்குகின்ற பூலோக கைலாசம் என்றும் வழங்கப்படுகின்ற சிதம்பரம் பஞ்சபூத ஸ்தலங்களில் ஆகாசத்தின் வடிவாக உள்ள க்ஷேத்திரம். இத்தலத்தின் பெருமைகளை திருமூலர் திருமந்திரமும், சைவ சமயக் குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களும், மாணிக்கவாசகரின் திருவாசகம், அருணகிரிநாதரின் திருப்புகழும், இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா, மற்றும் எண்ணற்ற வடமொழிப் புராணங்களும் இக்கோயிலின் சிறப்பைப்பற்றி கூறுகின்றன. எல்லா க்ஷேத்திரங்களிலும் மிக முக்யமான ஹிருதயஸ்தானத்தை வகிக்கிறது சிதம்பரம். மனிதர்களுக்கு இருதயம் எவ்வளவு முக்யமோ அதேபோல் எல்லா ஸ்தலங்களிலும் முக்யமானதாகவும், சிவ ஸ்தலங்களிலேயே மிக உயர்ந்ததாகவும் விளங்குகின்றது சிதம்பர க்ஷேத்ரம். இதர சிவ ஸ்தலங்களிலுள்ள தெய்வங்கள் எல்லாம் சிதம்பரத்தில் இரவில் அர்த்த ஜாமத்தில் வந்து சேர்கின்றன. காலையில் இத்தலத்திலிருந்து கிளம்பி தங்கள் இருப்பிடத்தை அடைகின்றன என்று சாஸ்திரங்களும், உபநிஷதங்களும் கூறுகின்றன.

இங்கு தெற்கு நோக்கி நடராஜா ஆனந்த நடனம் செய்துக் கொண்டிருக்கிறார். உத்ஸவமூர்த்திதான். மூலவர் கருங்கல்லில் இல்லை. இது பஞ்சபூதத் தலங்களில் ஆகாயக்ஷேத்திரம். சிதாகாஸத்தைக் கொண்டிருப்பதால் சிற்றம்பலம் என்றும் அதுவே பின்னர் சிதம்பரம் என்றும் மாறிவிட்டது.

நான்கு வாயிலிலும் நான்கு ராஜகோபுரங்கள். எல்லாம் ஒரே மாதிரியாக அமைந்திருப்பது இக் கோவிலின் தனிச் சிறப்பு. ஆதிசங்கரர் கைலாயத்திலிருந்து கொண்டு வந்த லிங்கங்களில் ஒன்று இங்கு விசேஷமூர்த்தி. அதற்குத்தான் ரத்னசபாபதி என்று பெயர்.

நடராஜா சன்னிதிக்கு வலப்பக்கத்தில் ஒரு திரையை நீக்கும் போது சிதம்பர ரகசியத்தை தரிசிக்கலாம். தங்கத்திலான வில்வ தளங்கள் மாலைபோல கல்லில் பதித்திருப்பது தெரியும். இறைவன் இங்கு ஆகாய உருவில் இருக்கிறான் என்பதால் அவனை இம்மாதிரி வழிபட வகை செய்திருக்கிறார்கள்.

இந்த நடராஜனை அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் எல்லோரும் பாடியிருக்கிறார்கள். திருவாசகத்துக்குப் படி எடுக்கும் பெருமானாக அமைந்தவன் சிற்றம்பலவன். மணிவாசகரை கோவை பாடச் சொன்னவனும் இவனே.

ராஜராஜசோழன் இந்த நடராஜனிடம் மிகவும் ஈடுபாடு கொண்டவன். சோழ அரசர்கள் சிற்றம்பலத்துக்கு பொற்கூரை வேய்ந்திருக்கிறார்கள். சோழர்கள் ராஜ்யத்தில் அளக்கும் கோலுக்கு பெயரே சிற்றம்பலக்கோல். அளக்கும் மரக்காலின் பெயர் ஆடவல்லான்.

* * *

அம்பலக் கூத்தனுக்கு வருஷத்தில் ஆறு தடவை விசேஷ அபிஷேகம். திருவாதிரையன்று முதல் நாள் இரவு ஆயிரக்கால் மண்டபத்தில் இந்த அபிஷேகத்தைக் காணக் கண் கோடி வேண்டும். பால் தேன் முதலியவை எல்லாம் குடம் கணக்கில்தான்.

விடியற்காலை ஆருத்திரா தரிசனம் வைபவம். நாதசுர இசைக்கேற்ப அசைந்தாடி செல்வது பார்க்கப் பார்க்க சலிப்பு தட்டாது.

தில்லை மூவாயிரவர்கள்தான் நடராஜனுக்கு பூஜை செய்யும் உரிமை பெற்றவர்கள். இப்போது அவர்கள் எண்ணிக்கை மிகக் குறைந்துவிட்டது.

திருவாதிரை விசேஷம்

மாணிக்க வாசகர் திருவாசகத்தை உலகுக்கு மொழிந்தருளிய போது அதை எழுத்து மூலம் அருள வேண்டும் என்று பலர் பிரார்த்திக்க மறுநாள் நடராஜப்பெருமான் பாதத்தில் திருவாசகம் எழுதப்படிருந்த ஓலைச்சுவடிகள் காணப்பட்டனவாம். சிவபெருமானே இதை எழுதினார் என்று நம்பப்படுகிறது. இச்சம்பவம் திருவாதிரை நட்சத்திர தினத்தன்று நடைபெற்றதால் இத்தினத்தில் மாணிக்க வாசகருக்கும் பூஜை செய்யப்பட்டு திருவாசகம் ஓதப்படுகிறது. நந்தனார் நடராஜப் பெருமானிடம் ஐக்கிய மடைந்ததும் திருவாதிரையன்றே.

திருவாதிரையன்று களி நைவேத்யம்தான் சிறப்பாக செய்யப்படும். இதன் தத்துவமாவது :

களி என்றால் ஆனந்தம் என்று பொருள். பரம்பொருளின் இயல்பே ஆனந்தம்தானே! அரிசியில் வெல்லத்தைக் கலந்து களி செய்வதுபோல அறிவில் அருளைக் குழைத்து பெறும் களியல்லவா ஆண்டவன்.

பட்டினத்தாரின் சீடராகிய சேந்தனார் சிதம்பரத்தில் விறகு விற்று சிவனடியார்களுக்கு உணவளித்து வந்தார். பெருமழை, ஈர விறகு. இருந்தும் எப்படியோ களி சமைத்தாயிற்று. ஆனால் அதையுண்ண அடியார் யாரும் வரவில்லை. ஒரு அந்தணர் வந்து களியுண்டு மிகுதியை எடுத்துச் சென்றுவிட்டார். அன்று மாலை பஞ்சாட்சரப் படியிலும் சிற்றம்பலத்திலும் களி சிந்தியிருக்க சேந்தனாரின் பெருமை வெளியாயிற்று. சேந்தனார் செய்த துதியே திருப்பல்லாண்டு.

ஏழுகறி: எல்லாக் காய்க்கறிகளும் பயறு துவரை முதலிய பயிர் வகைகளும் சேர்ந்த இந்த கதம்பம் ஆண்டவன் அளித்துள்ள இயற்கை வளங்கள். அவ்வளவையும் திரட்டி அவனுக்குஅர்ப்பணிக்கும் சின்னமாகும். நானு சுவையுள்ள வெவ்வேறு காய்கறிகளைக் கொண்டு படைத்த கூட்டு நானு உணர்ச்சிகளையும் கொண்ட இக வாழ்வுக்கு அறிகுறி எனக் கொள்ளலாம். இந்த பண்டங்களில் நீர் ஊற்றி உப்பு புளி போட்டு தீயில் வைத்த பிறகு. தானே அதற்கு எங்கிருந்தோ ருசி வந்து விடுகிறது. இதேபோல் பொருளற்ற மானிட உணர்ச்சிக் குவியலில் பக்தி என்ற நீரை ஊற்றி ஞான அனல் மூட்டி சமைத்தால் ஆனந்த சுவை ஏற்படும் என்பதைக் காட்டுவதாகவும் இருக்கலாம்.

ஆதிரை என்பது வடமொழியில் ஆர்திரா என்னும் நட்சத்திரமாகும். சூரிய ஒளியையும் மங்கச் செய்யும் தாரகை இது. இப்படித் தீ மயமாக இருந்தாலும் அதன் பெயர் ஆர்த்ரா (நனைவது) இந்த ஆர்த்ராதான் ஆருத்திராவாக மாறிவிட்டது.

திருவாதிரைக் களி

சங்கீதத்திற்கு சங்கீதம் ; நடனத்திற்கு நடனம், அப்படிப்பட்ட ஒரு கீத நிருத்தம் கேரளாவில் நடைபெறுகிறது. அதுதான் "திருவாதிரைக் களி". தமிழ் நாட்டிலுள்ள கும்மி, கோலாட்டம் போன்றதே இது. பெண்கள் மட்டுமே ஆடுவார்கள். திருவாதிரையன்று இது ஆடாவிட்டால் பாவம் என்று கேரள மக்கள் எண்ணுகிறார்கள்.

பார்ப்பதற்கு இது மிக ரம்யமான ஆட்டம். இந்த ஆட்டத்திற்கென்றே சிறப்பான வழி ஒன்று உண்டு. அதற்கு "ஸ்வாஞ்சலிட்டு" என்று பெயர். ஒரே சமயத்தில் ஆடிப் பாடும் முறையைத்தான் 'ஸ்வாஞ்சலிட்டு' என்கிறார்கள். பரதநாட்டியத்தில் வரும் ஜதிஸ்வரம் என்பதற்கு ஓரளவு சமமாக இதை சொல்லலாம்.

கடல் கடந்த
திருப்பாவை, திருவெம்பாவை

மார்கழி மாதத்தில் தமிழ் நாட்டில் கொண்டாடப்படும் பாவை விழா தாய்லாந்திலும், கம்போடியாவில் கொண்டாப்பட்டு வருவது பலருக்குத் தெரிந்திராது.

தஞ்சை மாவட்டத்தில் ஸ்ரீ வாஞ்சியம் தலத்தில் திருப்பாவை திருவெம்பாவை மகாநாடு நடைபெற்றபோது காஞ்சி காமகோடி பெரியவர்கள் அதற்கு ஒரு ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

அச்செய்தியில் சயாம் அல்லது தாய்லாந்து. இந்தோ-சீன ஆகிய நாடுகளில் திருப்பாவை திருவெம்பாவை விழா தொன்று தொட்டு விமரிசையாக நடைபெறுவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இவ்விழா இன்று நேற்றல்ல, பல நூற்றாண்டுகளாக அங்கு கொண்டாடப்பட்டு வருகிறது.

பிரிட்டிஷ் பேராசிரியரான எச். ஜி. குவாரிட்ச் வேல்ஸ் (H. G. Quaritch Wales) *1931*-ம் ஆண்டில் எழுதிய சரித்திர ஆராய்ச்சி நூலில் அந்த நாட்டில் ஆண்டுதோறும் நடக்கும் சில விழாக்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அத்தகைய விழாக்களில் திருவெம்பாவை திருப்பாவை விழா மிக முக்கியமானது என்று அவர் தன் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

(The important ceremoney of Triyambavay and Trippavey popularly known as Lo jin ja (pulling the swing) is one of the most interesting of all Siamese state ceremonies)

அதாவது ஊஞ்சல் உற்சவம் எனப் பிரசித்தமாக வழங்கும் திருவெம்பாவை—திருப்பாவை என்ற முக்கியமான விழா சயாம் அரசாங்க விழாக்களிலேயே மிகவும் சுவாரஸ்யமானதொன்றாகும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

இவ்விழா சயாம் தேசத்தின் இன்றையத் தலைநகரான பாங்காக்கில் மட்டுமல்ல, பழைய தலைநகரங்களான அயோத்யா, சுகோதயா நகரங்களிலும் மற்ற முக்கியப் பட்டணங்களிலும்கூட கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது.

பண்டைய காலத்தில் ஸ்ரீ தர்மராஜ நகரம் என வழங்கி வந்த இன்றைய நாகான்விகார் நகரில், அக்காலத்திலே திருவெம்பாவை திருப்பாவை விழாவுக்காகவே அமைக்கப்பட்ட ஊஞ்சல் இன்றும் அப்படியே இருப்பதைக் காணலாம்.

பிரதி வருஷமும் மார்கழி மாதத்தில் சிவபெருமான் பூமிக்கு எழுந்தருளுகிறார் என்பது சயாமியர்களின் நம்பிக்கை. சிவபெருமான் பூமிக்கு வந்து பக்தர்களுக்கு அருள்கிறார் என்று அவர்கள் இன்னும் நம்புகின்றனர்.

விழா நடக்கும் மண்டபத்தில் ஒரு ஊஞ்சல் கட்டப்பட்டிருக்கும். அதில் ஒருவர் உட்கார்ந்துக்கொண்டு ஆடவேண்டும். அவன் ஈஸ்வரன் இருக்கும் லோகத்திற்குச் சென்று வருவதாக தாத்பர்யம். இந்த உத்ஸவம் பத்து நாட்கள் நடைபெறுமாம். இதில் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லாரும் பங்கேற்கலாம். இந்த விழாவின்போது கூறும் மந்திரத்தில் 'ட்ரியெம்பாவா' என்ற சொல் அடிக்கடி வருகிறதாம். இவ்விழா மார்கழி பௌர்ணமியுடன் முடிவடையும்.

சயாம் ஊஞ்சல் விழாவில் தமிழ் மந்திரமாக கடைத்திறப்பு மந்திரம் ஓதப்படுகிறது என்று வேல்ஸ் குறிப்பிடுகிறார். அந்த மந்திரத்தின் பெயர் "லொரி பாவாய்" என்பதாகும். இது முடிந்ததும் சங்கு முழங்குமாம் 'ஏ' விடப்பட்ட 'லொரெம்' என்பது லொரியாகியிருக்கலாம்.

நம் தமிழர் விழா அங்கு பரவியுள்ளதற்கு அங்கு சென்ற தமிழர்களே காரணம். தமிழர்கள் தங்கள் பண்பாட்டினை புகுத்தியபோது தாங்கள் சென்ற நாடுகளின் பண்பாட்டினை அறவே ஒழிக்க முயலவில்லை. அதனால்தான் இந்த பாவை விழா அந்நாட்டின் நிலைமைக்கு ஏற்ப மாறுதலடைந்து விளங்குகிறது. பெண்கள் இல்லாத ஒரு பாவை நோன்பினை தமிழ்நாட்டில் எண்ணிக்கூடப் பார்க்க முடியாது. ஆனால் சயாமில் பெண்களே இல்லாத ஒரு ஊஞ்சல் விழா நடைபெறுகிறது. அந்நாட்டு மக்களின் வழக்கங்களையும் தமிழர்கள் தங்களுடைய சடங்குகளிலே உட்புகுத்தி அந்நாட்டு மக்கள் இச்சடங்குகளை வேற்று நாட்டினரது என்று நினையாதபடி அங்கே ஒரு புதுப் பண்பாட்டை உருவாக்கினார்கள்.

தெற்கு பார்த்த ராஜாக்கள்

தெற்கே பார்த்து இருக்கும் சுவாமிகள் இருவர். ஒருவர் நடராஜா மற்றொருவர் ரங்கராஜா. இவர்களில் ஒருவர் ஆனந்தமாக ஆடிக்கொண்டிருக்கிறார். மற்றொருவர் ஆனந்தமாக தூங்கிக்கொண்டிருக்கிறார். கூத்திலும் அரிதுயிலிலும் ஆனந்தமே ஸ்புரிக்கிறது.

ஆனந்தத்தில் இருநிலை உண்டு. ஒன்று பொங்குகிற நிலை மற்றொன்று அடங்கி அமர்ந்த நிலை. பொங்குகிற ஆனந்த தாண்டவ மூர்த்தி நடராஜா. அடங்கி அனுபவிக்கும் மூர்த்தி ரங்கராஜாவும் தக்ஷிணாமூர்த்தியும்.

இந்த மூன்று மூர்த்திகளையும் யார் யார் எதை விரும்பி வழிபட்டாலும் அவர்களுக்கு நிச்சயமாக தென் திசைக் காவலனான எமனின் வாதனை இருக்காது.

சைவ வைணவ இணைப்பு பாலம்

எனக்குள் திருமால் யானவனுள்
இருப்பது உணரார் எமை வேருய்
மனத்திற்கொண்டு சிலர் பயில்வர்
மலைவர் உயர்வு தாழ்வுவுரைத்தே
தனக்குள் தானே எமையுணர்ந்தோர்
ஒன்றென்றுருகுவர் தவமுடையோர்
புனித முனிவர்கள் இவர்கள் காண்
உலகில் பொருவற் ருேர்.

—நல்லப்பிள்ளை பாரதம்.

மக்கள் பிறந்தது முதல் அனுபவிக்கும் எந்த இன்பமும் தேக இன்பத்தில் அடங்கிவிடும். இதில் துன்பமும் வருகிறதே!

இதைவிட மேலான இன்பம் எது என்று ஆராய்ந்தார்கள். இதன் பலனாக உடம்பை ஒதுக்கி அதை நடத்தும் உயிரை அறிய முயன்ருர்கள். ஒவ்வொருவரும் தன் ஆத்மாவை அறிவதே முடிவான இன்பம் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆத்ம அறிவிலும் ஏற்றத்தாழ்வு இருப்பது தெரிந்தது. மேலும் ஆராய்ந்தார்கள். உடலுக்குள் உயிர் இருப்பதுபோல உயிருக்குள்ளும் ஏதோ ஒன்று இருந்து நடத்துகிறது என்ற முடிவு தோன்றியது. அந்த ஏதோ ஒன்றையே இறைவன் என்ருர்கள்.

இந்த சக்தி எல்லோருக்கும் நன்மை செய்வது என்பதையும் எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் அங்கெங்கு என்னுதபடி இருப்பது என்பதை உணர்ந்தனர். முன்னதை சிவம் என்றும் பின்னதை விஷ்ணு என்றும் கூறினர். பொருள் என்றே தான் என்ருலும் அதன் சிறப்பை இந்த இரண்டுவிதப் பெயர்களால் வழங்கி வணங்கி வருகிருர்கள்.

ஒரு மனிதனை நாம் பார்க்கிருேம் என்ருல் அவன் உடம்பைத் தான் பார்க்கிருேம். அவனுடைய உயிரை நாம் பார்க்க முடியா விட்டாலும் அவன் உயிருடன் இருக்கிருன் என்பதை உணர்கிருேம். ஒரு பொருளை அவன் நமக்குத் தருகிருன் என்று வைத்துக் கொள்வோம். அப்பொருளைத் தரும்படி அவன் மனம் கூறுகிறது. அதன்படி அவன் கைகள் அப்பொருளை எடுத்துக் கொடுக்கின்றன. கொடுக்கின்ற கைகளைப் புகழ்வதா? கொடுக்கத் தூண்டிய மனதைப்

புகழ்வதா? எப்படிப் புகழ்ந்தாலும் அப்புகழ்ச்சி கொடுத்தவனையே சேரும். கொடுத்த கையை அன்பினால் புகழ்கிறோம். கொடுக்க நினைத்தவனை அறிவுரையால் புகழ்கிறோம். முன்னதை பக்தி முறை என்றும் பிந்தியதை ஞான முறை என்றும் சொல்வர். ஞானத்தை ஆதிசங்கரர் வற்புறுத்தினார். பக்தி வழியை ராமானுஜர் உபதேசித்தார். இதுபற்றியே சைவத்தை ஞான மார்க்கம் என்றும் வைணவத்தை பக்தி மார்க்கம் என்றும் பேசலாயினர்.

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல தெய்வத்திற்கும் இரு பக்கங்கள் உண்டு. ஒன்று வெப்பம் ஒன்று தட்பம். வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால்தான் மலர் மலராகக் காட்சியளிக்கும். வெப்பம் அதிகமானால் மலர் வாடிவிடும். தட்பம் அதிகமானால் மலர் அழுகிவிடும்.

மனித வாழ்வுக்கும் வெப்பமும் தட்பமும் இன்றியமையாதவை. வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை விஷ்ணு. சிவன் பவளம் போன்ற மேனி. விஷ்ணு பச்சை நிறம். சிவன் அனல் ஏந்தி ஆடுகிறார். விஷ்ணு ஆழியிடை துயில்கிறார். சிவாலயத்தில் வெந்த நீற்றையும் (விபூதி) விஷ்ணு ஆலயத்தில் குளிர்ந்த தீர்த்தத்தையும் பிரசாதமாகக் கொடுக்கிறார்கள். பாதி சிவம், பாதி விஷ்ணு என்பது கேசவார்த்த மூர்த்தம் எனப்படும்.

சைவமும், வைணவமும் நம் நாட்டின் பழம்பெரும் சமயங்கள். இவை பூசலிட்டு ஒன்றை ஒன்று வெல்ல முயன்ற காலமும் உண்டு என்றாலும் பெரும்பாலும் ஒன்றை யொன்று அணைத்து சென்றதாலேயே இவை இரண்டும் இன்னும் அழியாமலிருக்கின்றன. விஷ்ணுவுக்கு சிவன் தன் உடலில் பாதியைத் தந்தாகவும், திருமாலின் உருவம் சிவனுக்கு இடம் தருவதாகவும் கொள்வதால் சைவமும் வைஷ்ணவமும் வாழ முடிகிறது. "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயனார்க்கே" என்கிறார் அப்பர் சுவாமிகள்.

பொன் திருமேனிப் புரிசடையும் புண்ணியனும்
நின்றுலகதாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத்தால் திரிவரேனும் ஒருவன்
ஒருவனங்கத் தென்றுமுளன்

என்று ஆழ்வார் பாடியிருக்கிறார்.

சைவ வைஷ்ணவ சமரச உணர்ச்சி

பாரதம் பாடிய வில்லிப்புத்தூராரைப் பற்றி தெரிந்திருக்கலாம். அவர் பரம வைஷ்ணவர். இருந்தாலும் சிவபெருமானிடத்திலும் சிறந்த பக்தியுள்ளவர். இவரைப்போலவே இவருடைய புதல்வர் வரந்தருவாரும் சைவ வைஷ்ணவ சமரச நிலை கண்டவர்.

வரந்தருவார், வில்லிபாரதத்திற்கு ஒரு சிறப்புப் பாயிரம் பாடியிருக்கிறார். தன் தந்தை தோன்றிய திருமுனைப்பாடி நாட்டுக்கு ஸ்ரீ வைஷ்ணவ சமயத்துடனும் சைவ சமயத்துடனும் உள்ள உறவை

அதில் சுட்டிக்காட்டுகிறார். அதில் அவர் "மூவர் உண்மை கண்ட நாடு" என்றும் "மூவரில் இருவர் தோன்றிய நாடு" என்றும் குறிப்பிடுகிறார்.

மூன்று ஆழ்வார்களும் (பொய்கையார், பூதத்தார், பேயார்) இங்கு தோன்றி திருக்கோவலூரில் உண்மையான மகாவிஷ்ணுவைக் கண்டவர்கள். சிவநேசர்களில் மூவரான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியவர்களில் பின் இருவர்களும் இங்கு பிறந்து சிவபெருமானைத் தொழுது உண்மை கண்டவர்கள். சைவ வைஷ்ணவ சமரச உணர்ச்சியை மிக அழகாக அவர் இம்மாதிரி குறிப்பிட்டிருக்கிறார்.

சேரமான் பெருமாள் நாயனர் தான் பாடிய பொன்வண்ணத் தந்தாதியில் அரி அரன் தமக்குள் பேதமில்லாதவர் என்பதை விளக்குகிறார்.

இடமால் வலந்தானிடப்பால் துழாய் வலப்பாலொன்கொன்றை
வடமாலிடந்துகில் தோல்வலம் ஆழியிடம் வலமான்
இடமால் கரிதால் வலஞ்சேதிவனுக் கெழில் நதஞ்சேர்
குடமாலிடம் வலங்கொக்கரை யாம் எங்கள் கூத்தனுக்கே

அரியும் அரனும் போட்டி போட்டுக்கொண்டு அருள் புரியும் தலம் தேரெழுந்தூர். அரியும் சிவனும் ஒன்று; அதை அரியாதவர் வாயில் மண், என்று ஒரு வழக்குச் சொல் உண்டு. ஏன்! இவ்வூரில் பிறந்த கம்பர்,

"அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன்
என்றுரைக்கும் அறிவிலோர்க்கு
பரகதி சென்றடைவது அரிது" என்று கூறிவிட்டார்.

தமிழ்நாட்டில் ஆதிகாலம் முதற் கொண்டே வைஷ்ணவ சைவ சமரஸ பாவம் இருந்து வருகிறது. 27 நட்சத்திரங்களில் ஆதிரை ஓணம் இவை இரண்டிற்கு மட்டுமே திரு என்ற அடைமொழி உண்டு. அரங்கன் என்றாலும் சபாபதி என்றாலும் ஒரே அர்த்தமே.

"பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து" என்று ஆழ்வார் பாடினல் அதை எதிரொலிக்கிற மாதிரி "குடமாடியை இடத்தே கொண்டு" என்று தேவாரம் பாடுகிறது.

இந்த ஹரிஹர ஒற்றுமை பற்றி பேயாழ்வார்,

தாழ்சடையும் நீள்முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழ்அரவும், பொன் நாணும் தோன்றுமால் சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்ருய் இயைந்து

என்று திருப்பதி வெங்கடாசலபதியின் உருவத்தில் ஹரிஹர ஒற்றுமை காண்கிறார்.

ஔவையும் 'அரனை மறவேல்' என்று கூறியவுடன் நில்லாமல் 'திருமாலுக்கு அடிமை செய்' என்றும் கூறியிருக்கிறாள்.

சிவத்தை பரப்பிரம்மமாகவும், விஷ்ணுவை பராசக்தியாகவும் கொள்ளலாம். விஷ்ணுவும் உமையும் அண்ணன் தங்கை என்றாலும்

அவர்கள் ஒன்றேதான் என்பது ஞானிகளின் அனுபவம். சங்கர நாராயண ரூபத்திலும், அர்த்நாரி ரூபத்திலும் இடப்பக்கம் மாலும் உமையும்தான்.

பக்தி விஷயம் விஷ்ணுவைச் சேர்ந்தது. ஹரிகதை ஹரிநாமம் என்று சொல்லுகிறோமே தவிர ஹரகதை ஹரநாமம் என்று சொல்வதில்லை.

ஞான விஷயம் சிவனைச் சேர்ந்தது. சிவ ஞானம் சிவ யோகம் என்று சொல்லுகிறோமே ஒழிய விஷ்ணு ஞானம் விஷ்ணு யோகம் என்று சொல்வதில்லை.

முக்குணங்களை சத்துவம், ரஜஸ், தமஸ், என்று பிரித்து ஒவ்வொன்றின் குணம் என்ன, நிறம் என்ன, என்றெல்லாம் பிரித்திருக்கிறார்கள்.

துடிப்பு —ரஜஸ்
சத்துவம்—கருணை
தமஸ் —கோபம்

காம வேகத் துடிப்பினாலே பிறப்பு ஏற்படுகிறது. சிருஷ்டி அதை செய்யும் பிரம்மன் ரஜோ மூர்த்தி. ரஜஸ்காரன் நிறமும் பொன்நிற மஞ்சள்.

சத்துவம் என்றால் காப்பது (விஷ்ணு) பரிபாலிப்பது. சம்ஹார மூர்த்தி தமஸ். ஆனால் சத்துவ மூர்த்தியின் நிறம் கருப்பு. சம்ஹார மூர்த்தியின் நிறம் வெளுப்பு. ஒருவர் செயலில் தமஸ். நிறத்தில் சத்துவம். மற்றொருவர் செயலில் சத்துவம். நிறத்தில் தமஸ். ஏழு நிற வர்ணங்களில் இந்த கருப்பும் வெள்ளையும் சேராதவை. முதலில் கரி, பிறகு வெண்மை. ஆகவே ஒருவருக்குள் மற்றொருவர் அடங்கி இருக்கின்றனர்.

சைவ வைஷ்ணவ சமரஸத்திற்கு எடுத்துக் காட்டாக ஆண்டாள் பாடிய கண்ணனுக்கும், மணிவாசகர் போற்றிய முக்கண்ணனுக்கும் உள்ள ஒற்றுமைகளை இங்கு குறிப்பிடலாம்.

கண்ணன் (விஷ்ணு)	முக்கண்ணன் (சிவபெருமான்)
நீலக்கண்ணன் (உடல் முழுதும் நீலம்) மாட்டை மேய்த்தவன்.	நீலகண்டர் (கழுத்து மட்டும் நீலம்) மாட்டை வாகனமாகக் கொண்டவன்.
ஆடலில் வல்லவன் (காளிங்கன்மீது நடனம்)	எப்போதுமே நடராஜாவாக ஆடிக்கொண்டிருப்பவன்.
வாசித்தது குழல் (ராகம்)	அடித்தது உடுக்கை (தாளம்)
மலையைத் தூக்கியவன் (கோவர்த்தனகிரி)	மலைமேல் வசிப்பவன் (கைலாசமலை)
லோகத்திற்கு குரு (தோசார்யன்)	இவரும் குரு (தக்ஷிணாமூர்த்தி)

இப்போது சொல்லுங்கள், இரண்டு தெய்வங்களும் ஒன்றுதானே!

உண்மை உணர்த்தும் தலங்கள்

சிவ-விஷ்ணு அபேதத்தைக் காட்டும் ஸ்தலங்கள் பல உள்ளன; திருநெல்வேலிச் சீமையில் சங்கரநாராயணன் கோயிலிலும், மேற்கே ஹரிஹர க்ஷேத்திரத்திலும் இரண்டு மூர்த்திகளும் இணைந்த பிம்பங்கள் உள்ளன. குற்றாலத்தில் விஷ்ணு மூர்த்தியையே அகஸ்திய மகரிஷி சிவலிங்கமாக மாற்றியிருக்கிறார். இவை பிரபலமான ஸ்தலங்கள். திருப்பாற்கடல் என்று ஓர் ஊர் இருக்கிறது. காஞ்சிபுரத்திலிருந்து வேலூருக்குப் போகிற வழியில் இருபது மைலில் இருக்கிறது. முதலில் அந்த க்ஷேத்திரத்தில் ஒரு பெருமாள் கோயில் கூடக் கிடையாதாம். ஈஸ்வரன் கோயில்தான் இருந்ததாம். ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் அநேக க்ஷேத்திரங்களுக்குச் சென்று விஷ்ணு தரிசனம் பண்ணிக்கொண்டு வருகிற காலத்தில் அந்த ஊருக்கும் வந்தாராம். ஒவ்வொரு நாளும் ஓர் ஊருக்குப் போகிறபோது விஷ்ணு தரிசனம் பண்ணாமல் அவர் ஆகாரம் பண்ணுவதே இல்லை.

அவர் திருப்பாற்கடலுக்கு வந்து, "எங்கே விஷ்ணு ஆலயம் இருக்கிறது?" என்று ஒவ்வொரு கோயிலாகப் போனார். எல்லாம் சிவன் கோயிலாகவே இருந்தன. விஷ்ணு ஆலயமாகத்தான் இருக்கும் என்று ஒரு கோயிலுக்குள் நுழைந்தார். உள்ளே போனால் ஈஸ்வரன் இருந்தார். உடனே வெளியே ஓடி வந்துவிட்டார். ஆகாரம் பண்ணவில்லை. 'இன்றைக்கு விஷ்ணு தரிசனம் கிடைக்கவில்லையே!' என்று துடிதுடித்துக் கொண்டிருந்தார். அவர் மனது பக்தியினாலேயே பட்ட பாடு சகிக்கவில்லை. அப்போது ஒரு கிழவர் அவருக்கு முன்னால் வந்து, "என்ன ஸ்வாமி! விஷ்ணு தரிசனம் பண்ண வருகிறீர்களா?" என்று கேட்டார்.

"இந்த ஊரிலே எங்கே ஐயா விஷ்ணு கோயில் இருக்கிறது?" என்று அவர் கோபமாகக் கேட்டாராம்.

"அதோ தெரிகிறதே. அது சாக்ஷாத் பெருமாள் கோயில்தான்" என்று அவர் சொன்னாராம்.

அந்தக் கோயிலுக்குள்தான் அவர் நுழைந்து போய், ஈஸ்வரன் இருப்பதைப் பார்த்துவிட்டு ஓடி வந்தார். அதனால், "ஏன் ஐயா பொய் சொல்லுகிறீர்? அது ஈஸ்வரன் கோயில்" என்று சொன்னாராம்.

"இல்லவே இல்லை. நீர்தான் பொய் சொல்கிறீர். அது பெருமாள் கோயில்தான். வேண்டுமானால் உள்ளே வந்து பாரும்" என்று அவர் பேச, "இப்போதுதான் நான் பார்த்தேன்" என்று இவர் சொல்ல, கடைசியில் கிழவர், "பந்தயம் கட்டும்; எதற்காகப் பொய் சொல்லுகிறீர்?" என்று கையைப் பிடித்துக்கொண்டு சண்டைக்குப் போய் விட்டாராம்.

அதற்குள் ஊரில் இருந்தவர்களுக்கு இது தெரிந்து அவர்களுக்குள் மத்தியஸ்தம் செய்து வைக்க வந்தார்களாம்.

"எதற்காக இப்படிச் சண்டை போட்டுக்கொண்டிருக்க வேண்டும்? எல்லோரும்தான் போய் அதைப் பார்க்கலாமே?" என்று சொன்னார்கள்.

"நான் அந்தக் கோயிலுக்குள் நுழையமாட்டேன்" என்று விஷ்ணு பக்தர் சொன்னாராம்.

"வராவிட்டால் விட முடியாது. எப்படி நான் சொல்வது பொய் என்று இவர் பார்க்காமல் சொல்லலாம்? யார் சொல்வது பொய் என்று பார்த்துவிட வேண்டும்" என்று அந்தக் கிழவர் விடமாட்டேன் என்றாராம்.

கடைசியில் ஊரார் மத்தியஸ்தத்தின் பேரில் இவர்கள் எல்லோரும் கோயிலுக்குள் சென்றார்கள். வாஸ்தவத்தில் அங்கே போய்ப் பார்த்தால் சிவலிங்கம் மாதிரி இருந்தது; கீழே பிரம்ம பீடமாகிய ஆவுடையார் இருந்தது. அதன் மேல் லிங்கத்தின் ஸ்தானத்தில் பெருமாள் நின்று கொண்டிருந்தார். அதைப் பார்த்தவுடன், "அடடா! நாம் ஏமாந்து போய் விட்டோமே மகாவிஷ்ணு அல்லவா இங்கே இருக்கிறார்?" என்று அந்த விஷ்ணு பக்தர் மிகவும் மனம் உருகி அநேக ஸ்தோத்திரங்கள் பண்ணினாராம். கிழவரிடம் மன்னிப்புக்கேட்கத் திரும்பினால், அந்தக் கிழவரே விஷ்ணு மூர்த்திக்குள் கலந்துவிட்டார். பெருமாளே கிழவராய் வந்திருக்கிறார்.

திருப்பாற்கடல் என்னும் ஊருக்குப் போனால் இப்போதும் பார்க்கலாம். ஆவுடையார் இருக்கும்; அதற்குமேல் லிங்கம் இருக்கிற இடத்தில் பெருமாள் நின்று கொண்டிருக்கிறார். இந்த க்ஷேத்திரமும் நமக்கு ஈஸ்வரன் வேறு; மகாவிஷ்ணு வேறு என்று இல்லை என்கிற தத்துவத்தை விளக்குகிறது.

திருச்சூர் வடக்குநாதர் கோவிலில் சங்கரநாராயணருக்கு சந்நிதி உள்ளது. வாதாபி எனப்படும் பாதாமி குகைக் கோவிலில் மிக அபூர்வமான சங்கரநாராயணர் திருவுருவம் சிலா வடிவில் இருக்கிறது.

"மாகத்திளமதிசேர் சடையானைப் பாகத்து வைத்தான்"

என்று ஆழ்வார் பாடிய ஹரிஹரன் இவனே. சுந்தரேசனும் சுந்தர ராஜனும் இங்கு ஒன்றாக இணைந்திருக்கிறார்கள்.

மகா சிவராத்திரியில் 'கோவிந்தா' நாமம்

இந்நாட்டின் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் திருமலை, திக்குருச்சி, திருப்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மலை, பன்னிப்பாக்கம், கல்குளம், மேலாங்கோடு, திருவிதாங்கோடு, திருப்பன்றிக்கோடு, திருநட்டாலம் ஆகிய பழம்பெரும் சிவாலயங்கள் உள்ளன.

ஆண்டுதோறும் மகா சிவராத்திரியன்று பக்தர்கள் மஞ்சள் அல்லது காவியுடையணிந்து விசிறி ஏந்தி திருமலைக் கோயிலில் தொடங்கி பாத யாத்திரையாக இந்த 12 சிவாலயங்களுக்கும் 'கோவிந்தா' 'கோவிந்தா' என்று கூவிக்கொண்டே செல்வார்கள். சிவராத்திரியில் பெருமாளையும் குறித்து கோவிந்தா என்று கோஷமிடுவது அரியும் சிவனும் ஒன்று என்பதை உணர்த்தவேயாம்.

ஆந்திராவில் தெனாலிக்கருகில் பொன்னூர் பாவநாராயண ஸ்வாமி ஆலயம் பழமையான ஹரிஹர க்ஷேத்திரம். திருமலையில் கோயில் கொண்டிருக்கும் வேங்கடேச பெருமாளை வெள்ளி காலை திருமஞ்சனத்தின்போது பாருங்கள், தாழும் சடையைக் காணலாம்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த
திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரேரார் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (1)

மார்கழி மாதத்தின் சிறப்பு:—மர்ர்கழி மாதம் வந்துவிட்டது. நாம் யாவரும் விடியற்காலத்தில் நீராடி ஸ்ரீ கிருஷ்ணனைப் பாடினால் அவன் நமக்கு வேண்டியவைகளை எல்லாம் தருவான். தோழியரே! எழுந்திருங்கள்.

வையத்து வாழ்வீர்கள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி,
நெய் உண்ணோம், பாலுண்ணோம், நாட்காலே நீராடி,
மையிட் டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம்,
செய்யா தனசெய்யோம், தீக்குறளை சென்றோதோம்,
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

பாவை நோன்பு செய்யும் முறை:—விடியற்காலையில் நீராடுவோம்; நெய், பால் கலந்த உணவைச் சேர்த்துக் கொள்ளமாட்டோம்; தீயவை செய்யோம். இயன்ற வரையில் ஏழைகளுக்குப் பிச்சை இடுவோம். இப்பிறப்பினின்றும் உய்யும் வழியைக் கருதிப் பாவையைப் பூஜிப்போம்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

நோன்பின் பயன் :—இப்படிப் பாவை நோன்புச் செய்தால் நாடெல்லாம் தீங்கு இன்றி இருக்கும்; மாதம் மும்மாரி பெய்யும்;

செந்நெல் சிறப்பாக விளையும்; பசுக்கள் நிரம்பப் பால் கறக்கும்; எங்கும் செல்வம் நிறையும்.

ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு, முகந்துகொடு, ஆர்த்தேறி,
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கருத்து,
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மினனி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்! நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

மழையின் வண்மை:—நீல நிறக் கண்ணன் போலக் கருமேகம் காணப்படுகின்றது கண்ணனது அருள் சுரக்க வேண்டும். உலகில் மக்கள் நன்ருக வாழும்படி மழை பொழிய வேண்டும்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது,
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்; செப்பேலோ ரெம்பாவாய். (5)

கண்ணனது பெயர்ச் சிறப்பு:—இம்மாதிரிக் காலையில் நீராடிக் கண்ணனைப் பூஜை செய்தால் நமத பாபங்கள் யாவும் நெருப்பில் பட்ட பஞ்சு போல் அழிந்து போகும்.

புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிச்சங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

பறவைகள் பாடுகின்றன; கோயில் சங்கு முழங்குகிறது. உன் காதில் விழவில்லையா? முனிவர்களும், யோகிகளும் துயிலெழுந்து, 'அரி நாராயணு' என்று பாடுகின்ற ஒலி உள்ளத்தைக் குளிரச் செய்கின்றது. எழுந்துவா.

கீசு கீசென்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே;
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்

ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். (7)

'ஆனைச்சாத்தன்' என்னும் பறவை கத்துகிறதே. கோபியர் தயிர் கடையும் பெரு முழக்கத்தையும் கேசவனைப்பற்றி நாங்கள் பாடுவதையும் நீ கேட்டுக்கொண்டே படுத்திருக்கிறாயே! கதவைத் திற; எழுந்துவா.

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்; மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்; கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவவென் றாய்ந் தருளேலோ ரெம்பாவாய். (8)

கிழக்கு வெளுத்துவிட்டது. எருமைமாடுகள்கூட மேயச் சென்று விட்டன. உனக்காக மற்றவர்களையும் போகாமல் தடுத்து அழைத்து வந்திருக்கிறேன்; எழுந்திரு தேவதேவனைப் பாடினால் அவன் நமக்கு அருள் செய்வான்.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்;
மாமீர்! அவளை யெழுப்பீரோ? உன் மகள் தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

மகளே! கதவைத் திற. மாமீ! அவளை எழுப்புங்கள். அவள் என்ன ஊமையோ? செவிடோ? அரைத் தூக்கமோ? அல்லது மாமாயன், மாதவன், வைகுந்தன் என்று எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்ததால் மெய்மறந்து விட்டாளோ?

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ, வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாராணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால்; பண்டு ஒரு நாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்த லுடையாய்! அருங்கலமே!
தோற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (10)

நாங்கள் இவ்வளவு சொல்லியும் நீ கதவைத் திறக்காமல் இருக்கலாமா? கும்பகர்ணன், தூக்கத்தில் உனக்குத்தோற்று, தனது துயிலை உனக்கு தந்தானோ? இனியேனும் வந்து கதவைத் திற.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்;
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (11)

செல்வப்பெண்ணே! உன் தோழியர்களாகிய நாங்கள் எல்லோரும் உன் வீட்டு முற்றத்தில் வந்து நின்று கண்ணன் புகழைப் பாடுகின்றோமே. இது கேட்டும் நீ உறங்குவது ஏன்?

கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்;
இனித்தா னெழுந்திராய், ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத் தாரும் அறிந்தாலோ ரெம்பாவாய் (12)

செல்வனின் தங்கையே! நாங்கள் யாவரும் உன் வீட்டு வாசலில் பனி தலையில் விழுமாறு நின்று இராமனைப் பாடுகின்றோம். இதைக் கேட்டும் எழுந்திராமல் தூங்குகின்றாயே! இது என்ன அதிசயம்!

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்,
பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம்புக்கார்;
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண், போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

சுக்கிரன் உதயமாகிவிட்டது. குரு மறைந்துவிட்டது. பறவைகள் ஒலிக்கின்றன. பெண்கள் யாவரும் பகவானைப் பாடிக்கொண்டே நோன்பு நோற்கும் இடத்திற்கு வந்து விட்டார்கள். நீ மட்டும் நீராடாமல் படுக்கையிலேயே கிடக்கிறாயே! எழுந்திரு.

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்,
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்;
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்; நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (14)

உங்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தில் உள்ள குளத்தில் செங்கழுநீர் மலர்ந்துவிட்டது. ஆம்பல் குவிந்து விட்டது. துறவியர் கோயில் கதவு திறப்பதற்காகச் சென்று விட்டார்கள். எங்களை முன்னதாகவே வந்து எழுப்புவதாகச் சொன்ன உனக்கு வெட்கமில்லையா? சங்கு சக்கரங்களைக் கையில் ஏந்திய தாமரைக் கண்ணனைப் பாட எழுந்திரு.

எல்லே! இளங்கிளியே இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின் நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லை உன் கட்டுரைகள், பண்டேஉன் வாயறிதும்.
வல்லீர்கள் நீங்களே நானே தானுயிடுக!
ஒல்லை நீ போதாய்; உனக்கென்ன வேறுடைமை?
எல்லாரும் போந்தாரோ? போந்தார், போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (15)

தோழிகள்:—அடி கிளியே! இன்னுமா உறங்குகின்றாய்? படுத்திருப்பவள்:—சில்லென்று கூப்பிடாதீர்கள், வருகிறேன். தோழிகள்: நீ மிகவும் கெட்டிக்காரி. எழுந்து வா, வாயாடி. படுத்திருப்பவள்: நீங்கள் தான் வாயாடிகள். தோழிகள்:—சரி சரி! எழுந்து வா. படுத்திருப்பவள்:—எல்லாரும் வந்து விட்டார்களோ? தோழிகள்:— எல்லோரும் வந்துவிட்டார்கள். வந்து எண்ணிக்கொள். மாயனைப் பாடுவோம்.

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே, அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

கோகுலத்தின் தலைவனான நந்தகோபனுடைய வாயில் காப்பானே! நாங்கள் கண்ணனை எழுப்புவதற்காக வந்திருக்கின்றோம். நாங்கள் வருவதை நேற்றே அவன் ஒப்புக்கொண்டான். கதவைத் திறப்பாயாக.

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்;
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி யசோதாய்! அறிவுறாய்;
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்!
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (17)

அறம் செய்யும் நந்தகோபானே! யசோதையே! கண்ணனே! பலதேவனே! துயில் நீங்கி எழுந்தருள்க.

உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்;
வந்து எங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (18)

நந்தகோபனது மருமகளான நப்பின்னையே! கோழியும், குயிலும், கூவின. உனது நாயகனான கண்ணனைப் பாட வந்திருக்கின்றோம். எழுந்து வந்து கதவைத் திறவாய்.

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில் மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழவொட்டாய்காண்;
எத்தனை யேலும் பிரிவாற்றகில்லாயாக;
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

கட்டில்மேல் நப்பின்னையுடன் படுத்து உறங்கும் கண்ணா! வாய் திறந்து பேசு, நப்பின்னையே! இன்னும் எவ்வளவு நேரம் அவனை உறக்கம் தெளியாமல் வைத்திருப்பாய்? அவனைச் சிறிதும் பிரியமாட்டாயா? இது தகுதியற்றது.

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்ப முடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்;
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்!
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (20)

தேவர்களின் துயர் தீர்ப்பவனே! துயில் எழு. துஷ்டரை அடக்கு பவனே! எழுந்திரு. நப்பின்னையே! விழித்துக்கொள். விசிறியும், கண்ணாடியும் அளித்துக் கண்ணனை எங்களுடன் நீராட அனுப்புக.

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;
ஊற்ற முடையாய்! பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்;
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன் வாசற்கண்
ஆற்றாது வந்து உன்னடி பணியுமாபோலே
போற்றி யாம்வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (21)

பாத்திரங்கள் வழியுமாறு பால் சொரியும் பசுக்களையுடைய நந்த கோபன் மகனே! எழுந்திரு. உனது பகைவர் பலமிழந்து உன்னைச் சரண் அடைவதுபோல், நாங்களும் உன் வாசலில் வந்து உன் புகழ் பாடுகின்றோம். நீ எழுந்து வந்து அருள்க.

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போல
செங்கண் சிறச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கணிரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய் (22)

உன்னிடம் தோல்வியடைந்த பகையரசர் யாவரும் உன்னடியில் வந்து காத்து நிற்கின்றனர். அதைப்போல் நாங்களும் வந்தோம். சந்திர சூரியர்களைப் போன்ற உன் திருக்கண்களைத் திறந்து எங்களைப் பார்த்தருள்க. எங்கள் பாபங்கள் அகலும்.

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுறுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப் பூவண்ணா உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரியா சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்தருளேலோ ரெம்பாவாய். (23)

மாரிக் காலத்தில் மலைக் குகையில் தூங்கும் சிங்கம் எழுந்து கம்பீரமாக வருவது போல. நீயும் எழுந்து வந்து சிங்காதனத்தில் அமர்ந்து நாங்கள் வந்த காரியத்தை விசாரித்து அறிந்து அருள் செய்க.

அன்றுஇவ் உலகம் அளந்தாய்! அடிப்போற்றி!
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி!
பொற்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி!
குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி!
என்னென்று உன் சேவகமே ஏந்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம்; இரங்கேலோ ரெம்பாவாய்! (24)

மூன்று அடிகளால் மூவுலகங்களையும் அளந்தவனே! உன் திருவடிகளை வணங்குகின்றோம். இலங்கையை அழித்த உனது திறமையைப் போற்றுகிறோம். சகடாசுரனை அழித்தவனே! கன்று உருவில் வந்த வத்சாசுரனைக் கொன்றவனே! கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்தவனே! வணக்கம். உனது ஆயுதங்களுக்கு வணக்கம். உன் வீரத்தைப் புகழ்ந்து, நாங்கள் வேண்டுவதைப் பெறவே இன்று வந்தோம். எங்களுக்கு அருள் புரிக.

ஒருத்தி மகனாய்ப் பிறந் தோரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பன்ன நின்ற நெடுமாலே உன்னை
அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

வடமதுரையில் தேவகியின் மகனாய்ப் பிறந்து, கோகுலத்தில் யசோதையின் மகனாய் ஒளித்து வளர்ந்தவனே! கேடு நினைத்த கம்சனுக்கு நெருப்புப்போல இருந்தவனே! உன்னை வேண்டி வந்துள்ளோம். எங்களுக்கு தேவையானவற்றை அளிப்பாயாக. நாங்கள் உன் புகழ்பாடி, வருத்தம் தீர்ந்து மகிழ்ந்து வாழ்வோம்.

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்,
மேலையார் செய்வனகள் வேண்டுவன, கேட்டியேல்;
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன்
பாலன்ன வண்ணத்துஉன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே;
சாலப் பெரும்பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே' கொடியே, விதானமே,
ஆலி னிலையாய்! அருளேலோரெம்பாவாய், (26)

மாலே! மணிவண்ணா! சங்கங்கள் முழங்குதல், பறைகள் ஒலித்தல், பல்லாண்டு பாடுதல், மங்கள விளக்கு, கொடி, மேற்கட்டி விரிப்பு முதலியவை மார்கழி நீராட்டத்தில் தேவை. எங்களுக்கு அவற்றை நீ அருள வேண்டும்.

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்;
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே,
பாடகமே, என்றனைய பல்கலனும் யாமணிவோம்;
ஆடையுடுப்போம்; அதன் பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27)

கோவிந்தா! இந்த நோன்பை நோற்பதால் நாங்கள் பெறும் பரிசு மிகச் சிறந்தது. நல்ல பல ஆபரணங்களை அணிவோம், மலர் சூடுவோம். புதிய ஆடை உடுப்போம். பாலும் நெய்யும் கலந்த சோறு உண்போம்.

கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்;
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு

உறவேல் நமக்குஇங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறி யருளாதே,
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய் (28)

இறைவா! நாங்கள் இடையர்கள். பசுக்களைக் காட்டிற்கு ஓட்டிச் சென்று மேய்ப்பவர்கள். அறிவு அற்றவர்கள். ஒரு குறையும் இல்லாத கோவிந்தா! நீ எங்களுடன் பிறவி எடுக்கும் புண்ணியம் செய்திருக்கின்றோம். உன்னுடன் கூடி வாழும் இந்த உறவை ஒழிக்க முடியாது. நாங்கள் அறியாமையினால் உன்னைச் சிறுவர்களைக் கூப்பிடுவதைப்போல் கூப்பிடுவதைப்பற்றிக் கோபம் கொள்ளாதே.

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து, உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்;
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறை கொள்வானன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே யாவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். (29)

கோவிந்தா விடியற்காலையில் வந்து நாங்கள் உன்னை வழிபடும் காரணத்தைக் கூறுகிறோம். மாடு மேய்க்கும் இடையர் குலத்தில் பிறந்த நீ, உன்னைச் சார்ந்த எங்களை உன் அடிமைகளாகக் கொள்ளாமலிருப்பது தகுதி ஆகாது. ஏதோ இன்றுமட்டுமன்று. இன்னும் எவ்வளவு பிறவி எடுத்தாலும் உன்னோடு கூடியிருப்போம். உனக்கே அடிமைகள் ஆவோம். மற்ற விருப்பங்கள் எங்கள் மனத்தில் தோன்றாதபடி அருள் செய்வாயாக.

வங்கக் கடல்கடைந்த மாதவனை கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத் தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய் (30)

கோபாலனைக் கோபியர் வழிபட்டு மார்கழி நோன்பு முடிந்த விதத்தை ஸ்ரீ வில்லிபுத்தூர் பட்டர்பிரான் மகளான கோதை பாடியருளினாள். இந்த முப்பது பாடல்களையும் பாடுவோர் திருமாலின் திருவருளை எங்கும் பெற்று இன்புறுவர். ஆண்டாள் திருமால்மீது கொண்ட அசையாத நம்பிக்கையும் அவன் நிச்சயம் அருள் புரிவான் என்கிற உறுதிப்பாடும் இப்பாட்டில் த்வனிக்கின்றன. ஆண்டாள் முத்திரை பெற்ற செய்யுள் இது.

ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிச்செய்த

திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும். வாள் தடங்கண்
மாதே! வளருதியோ! வண்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி, மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு, இங்ஙன்
ஏதேனுமாகாள், கிடந்தாள்; என்னே! என்னே!
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானை நாங்கள் பாடுகின்றோம். அதைக் கேட்டுக் கொண்டே நீ இன்னும் தூங்குகிறாயே! உனக்கு காது கேட்கவில்லையா? நீ என்ன செவிடா! இங்கே பார். மகாதேவன் வாழ்த்தைக் கேட்டவுடன் ஒரு பெண் தன்னை மறந்து கிடக்கிறாள். அப்படியிருக்க நீ மாத்திரம் ஏன் இப்படித் தூங்குகிறாய்?

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்!
சீசீ! இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடமீதோ? விண்ணோர்களேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
நேசன், சிவலோகன், தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கன்பார்யாம் ஆலோர் எம்பாவாய் 2

தோழியர் :—பெண்ணே, சிவபெருமானிடம் அன்பு கொண்டு எப்பொழுதும் அவனைப்பற்றிப் பாடவேண்டாமா? நீ ஏன் படுக்கையில் பற்றுக்கொண்டாய்?

படுத்திருப்பவள்:—தோழியரே! சீசீ, இப்படியெல்லாம் பேசலாமா? இதுவா விளையாடும் இடம்?

தோழியர்:—ஈசனிடத்து நமது பக்தியைப் பெருக்குவோம். நாம் யார்? ஈசனார்க்கு அன்பர், எழுந்திரு.

முத்தன்னவெண்ணகையாய்! முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன், ஆனந்தன், அமுதனென்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய், வந்துன் கடைதிறவாய்.
பத்துடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ?
எத்தோநின் அன்புடமை? எல்லோ மறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

தோழியர்:—முத்துப் போன்ற பற்களை உடையவளே இதற்கு முன் சிவபிரானை வாயார வாழ்த்திய நீ, எழுந்து கதவுக்கூடத் திறக்கவில்லை.

உள்ளிருப்பவள்:—நீங்கள் வெகுகாலமாகச் சிவபக்தி கொண்டவர்கள். நான் புதியவள், எனது சிறுமையைப் போக்கி ஆட்கொள்வது தீங்கல்ல.

தோழியர்!—உன் பக்தியை நாம் அறிவோம். இறைவனைப் பாடுவோம். எழுந்து வா.

ஒள்நித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம்; அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை, வேத விழுப்பொருளை,
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம்; நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

தோழியர்!—பெண்ணே! உனக்கு மட்டும் இன்னும் பொழுது புலரவில்லையோ?

படுக்கையிலிருப்பவள்!—எல்லோரும் வந்துவிட்டாரோ?

தோழியர்:—எண்ணிச் சொல்கிறோம். நீ தூங்கிக் காலத்தை வீணாக்காதே; வேதப் பொருமான இறைவனைப் பாடி உருகும் நாங்கள் எண்ணமாட்டோம். நீயே வந்து எண்ணிக்கொள். குறைந்தால் மீண்டும் தூங்கு.

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்.
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும், நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலமிடினு முணராய், உணராய்காண்!
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

'திருமாலும் பிரமனும் அறிய முடியாத பரமேசுவரனை நாம் அறிவோம்' என்று பொய் பேசுபவளே! கதவைத் திற; ஒருவராலும் அறிய முடியாதவனைப் பாடுவதைக் கேட்டும் விழிக்காதவளே! இதுவோ உனது தன்மை? எழுந்திரு.

மானே! நீநென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும், நாணுமே
போன திசை பகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய்; உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் 6

'நானைக்கு நானே வந்து உங்களை எழுப்புகிறேன்' என்று நேற்றுச் சொல்லிய நீ இன்னும் வெட்கம் இல்லாமல் தூங்குகிருயே? இன்னும் பொழுது விடியவில்லையா? தானே வந்து ஆட்கொள்ளும் இறைவன் திருவடிகளைப் பாடும் எங்களுக்குப் பதில் கூறு. எழுந்து வா; ஈசனைப் பாடுவோம்.

அன்னே, இவையுஞ் சிலவோ? பலவமரர்
உன்னற்கரியா னொருவன் இருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்;
தென்னா என்னுமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்;
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள், வெவ்வேறாய்; இன்னந் துயிலுதியோ;
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்;
என்னே துயிலின் பரிசேலோ ரம்பாவாய். 7

பெண்ணே! விளையாடுகிருயா என்ன? சிவபெருமானது சங்கு முதலிய திருச்சின்னங்களின் ஒலியைக் கேட்டாலே 'சிவ' என்று கூறுவாய்? மனம் உருகப் பாடுவாய்! அப்படிப்பட்ட உனக்கு இன்று என்ன நேர்ந்தது? நாங்கள் அவனைப் பாடும் பொழுது நீ கொடிய மனமுடையவர் போலக் கிடக்கின்றாயே! என்னே தூக்கத்தின் தன்மை!

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்;
ஏழி லியம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்;
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்; கேட்டிலையோ?
வாழியீதென்ன வுறக்கமோ? வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய். 8

கோழி கூவுகிறது. பறவைகள் ஒலிக்கின்றன. சங்கு முழங்குகிறது. பரஞ்சோதியை நாங்கள் பாடினோமே; உனக்குக் கேட்கவில்லையா? இது என்ன தூக்கம்? வாயைத் திறக்காமல் இருக்கிருயே. இது சரியா? ஏழை பங்காளனைப் பாடவேண்டாமா? எழுந்திரு.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே,
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்;
அன்னவரே எங்கணவராவார்; உவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறைவு மிலோமேலோர் எம்பாவாய். 9

உலகம் தோன்றுவதற்கு முன்னமேயே இருந்த பழம் பொருளே, பின்னால் தோன்றிய புதுமைப் பொருட்கும் புதுத்தன்மையனே, உன்னைத் தலைவனாகப் பெற்ற நாங்கள் உன் அடியார்களது பாதம் பணிவோம். அவர்கள் சொற்படி நடப்போம். இந்தவிதமாக எங்களுக்கு அருளினால் நாங்கள் குற்றமற்றவர்கள் ஆவோம்.

பாதாளம் ஏழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர்;
போதார் புனைமுடியும் எல்லாப்பொருள் முடிவே;
பேதை ஒரு பால்; திருமேனி ஒன்றல்லன்;
வேதமுதல்; விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்,
ஓதஉலவா ஒருதோழந் தொண்டருளன்;
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்,
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆர் அயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

அவனது திருவடிகள் பாதாளத்தையும் கடந்துள்ளன. அவனது முடி எல்லாப் பொருள்களையும் தாண்டி மேலே உள்ளது. உடலில் ஒருபாதி உமை. எல்லாப் பொருள்களிலும் உள்ளவன். வேதம் முதலியவற்றாலும் புகழ முடியாதவன். அடியவர் உள்ளத்தில் இருப்பவன். அவனுக்கு ஊர், பேர், உற்றார், அயலார் என்று கிடையாது.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைத்து குடைந்துன் கழல்பாடி,
ஐயா, வழியடியோம் வாழ்ந்தோங்காண்; ஆறழல்போற்
செய்யா, வெண்ணீறாடி, செல்வா, சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா,
ஐயா, நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்;
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

வெண்ணீறு அணிந்துள்ள பெருமானே, பரம்பரை அடிமைகளாகிய நாங்கள் நீராடி உன் பாதங்களைப் பாடி வருகிறோம். பார்வதி மணாளனே, நீ அடியார்களை ஆட்கொண்டருளும் வழிகளில் சென்றோம். எங்களையும் நல்வழிகாட்டிக் காப்பாற்றவேண்டும்,

ஆர்த்த பிறவித் துயர்கெட நாமார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி,
வார்த்தையும் பேசி, வளைசிலம்ப, வார்கலைகள்
ஆர்ப்பரவஞ்செய்ய, அணிகுழல்மேல் வண்டார்ப்ப,
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி, இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

நமது பிறவிப் பிணி நீங்குவதற்காகவே இறைவன் சிதம்பரத்தில் கூத்தாடுகிறான். அவனது ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று விளையாட்டுக்களையும் வாழ்த்தி, பொய்கையில் நீராடுவோமாக.

பைங்குவளைக் கார்மலரால், செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து, நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தரர்ப்பக்

கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

இந்தக் குளம் கரிய நிறமுள்ள கருங்குவளை மலர்களையும், சிவந்த தாமரை மலர்களையும் கொண்டு அழகாக இருக்கிறது. இது பார்வதியும், பரமேசுவரனும் சேர்ந்து இருப்பதுபோல் இருக்கிறது. இப் பொய்கையில் நாம் நீராடுவோமாக.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள் பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி பாடேலோர் எம்பாவாய், 14

நம்மைக் காப்பாற்றுகின்ற நடராசப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் பாடிக்கொண்டே நீராடுவோமாக.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்; சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்; விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர், வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

சிவபெருமானிடம் பக்திப் பித்துக் கொண்டவர்கள் வேறு ஒன்றையும் நினைக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட எம்பெருமானது திருவடிகளை வாயாரப் பாடி நீராடுவோமாக.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத்திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

பார்வதியின் நீலநிறம் போன்று விளங்கும் நீருண்ட மேகமே, பரமேசுவரன் அடியார்களுக்கு அருள் சுரப்பதுபோல் மழையைப் பொழிக.

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதா,
கொங்கண கருங்குழலி, நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை

நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய். 17

திருமாலிடமும், பிரமனிடமும், பிறதேவர்களிடமும் காணமுடியாத பேரின்பத்தை, சிவபெருமான் நமக்கு அளித்து அருள் செய்துள்ளான். அவனைப் பாடி நீராடுவோமாக.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிர்சேர்.
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா அதமுமாய் நின்றான் கழல் பாடி,
பெண்ணே, இப்பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 18

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனது திருவடிகளில் தேவர்கள் வணங்குகின்றனர். அப்பொழுது அவர்களது முடிகளில் உள்ள இரத்தினங்களில் ஒளி குறைந்தன. அதுபோல சூரியன் உதிக்கவும் நட்சத்திரங்கள் ஒளி குன்றின. பெண், ஆண், அலி, விண், மண் மற்றும் யாவுமாகியுள்ள கடவுளின் கழல் பாடி நீராடுவோமாக.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்,
எங்கள்பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்,
எங்கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க;
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க;
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்,
எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோர் எம்பாவாய். 19

குழந்தைகளின் துன்பத்தை நீக்கி, இன்பத்தைக் கொடுப்பவள் தாய்தான். நாங்கள் குழந்தைகள். நீயே தாய் எங்கள் விருப்பத்தை நீ தான் நிறைவேற்றவேண்டும். எம் கைகள் உன் அடியார்க்கே திருப்பணி செய்ய வேண்டும். எம் கண்கள் உன்னையே காணவேண்டும். இந்தக் கோரிக்கையை எமக்கு அருளினால் 'கதிரவன் எந்தத் திசையில் உதித்தால் என்ன, எதுவும் ஒன்றே.

போற்றி, அருளுக, நின் ஆதியாம் பாதமலர்.
போற்றி, அருளுக, நின் அந்தமாம் செந்தளிர்கள்.
போற்றி எல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்.
போற்றி, எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி, எல்லாயிவுர்க்கும் ஈறும் இணையடிகள்.
போற்றி, மால் நான்முகனும் காணாத புண்டரிகம்.
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடே லோர் எம்பாவாய். 20

(இப்பாட்டின் விளக்கம் 48-ம் பக்கத்திலுள்ளது)

சிவபெருமான் திருப்பள்ளியெழுச்சி

(மாணிக்கவாசகர் அருளியது)

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
    புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
    எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
    திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை உடையாய்
    எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
    அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் ஏழவெழ நயனக்
    கடிமலர் மலர மற்றண்ணலங் கண்ணும்
திரணிரை அறுபதம் முரல்வன இவையோர்
    திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருநிதி தரவரும் ஆனந்த மலையே
    அலைகடலே பள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
    குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
    தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
    திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
    எம்பெருமான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
    இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
    தொழுகையர் அழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
    திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
    எம்பெருமான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
    போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
    கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
    சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்தே

தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுவவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாதிருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வந்திருப் பெருந்துறை யாய்வரு யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமுதே கரும் பேவிரும்படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவுநின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே. 10

திருமால் திருப்பள்ளியெழுச்சி

(தொண்டரடிப்பொடியாழ்வார் அருளியது)

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
    கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்
    வானவர் அரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
    இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தரு ளாயே. 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்
    கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
    ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிற குதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
    வெள்ளயி றுறஅதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தரு ளாயே. 2

சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்
    துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
    பாயிருள் அகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
    வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
    அரங்கத்தம்மா, பள்ளி எழுந்தரு ளாயே. 3

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
    வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
    இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே
    மாமுனி வேள்வியைக் காத்தவ பிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம் அரசே
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தரு ளாயே. 4

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
    போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்
    களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
    அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா

இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான், பள்ளி எழுந்தரு ளாயே. 5

இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரோ?
இறைவன் பதினொரு விடையரும் இவரோ?
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ?
மருத்தரும் வசுக்களும் வந்துவந் தீண்டி
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமர தண்டம்புகுந் தீண்டிய வெள்ளம்
அருவரை அனையநின் கோயில்முன் இவரோ?
அரங்கத்தம்மா, பள்ளி எழுந்தரு ளாயே. 6

அந்தரத் தமரர்கள் கூட்டங்கள் இவையோ?
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ?
இந்திரன் ஆனையும் தானும்வந் திவனோ?
எம்பெரு மான்உன் கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான்
அந்தரம் பாரிடம் இல்லைமற் றிதுவோ?
அரங்கத்தம்மா, பள்ளி எழுந்தரு ளாயே. 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா
எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு
ஏற்பன ஆயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ?
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்தினின் றகல்கின்ற இருள்போய்
அரங்கத்தம்மா, பள்ளி எழுந்தரு ளாயே. 8

ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தரு வரவர் கங்குலுள் எல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான்
ஆதலில் அவர்க்குநா ளோலக்கம் அருள
அரங்கத்தம்மா, பள்ளி எழுந்தரு ளாயே. 9

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புனல் ரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி என்னும்
அடியனை அளியனென் றருளிஉன் அடியார்க்கு
ஆட்படுத் தாய், பள்ளி எழுந்தரு ளாயே. 10

திருமணம் விரும்பும்

கன்னிப் பெண்கள் கவனத்திற்கு

ஆண்டாளின்
வாரணமாயிரம்

[திருமணம் என்பது வாழ்க்கையில் ஏற்படும் முக்கியமான கட்டம். திருமணம் "சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது(Marriages are made in Heaven) என்பார்கள். அது நடைபெற மனித யத்தனத்துடன் தெய்வ அருளும் வேண்டும். ஆழ்வார்கள் தங்கள் பதிகங்களில் இதைப் பாடுவதால் ஏற்படக்கூடிய பலன் என்ன என்பதை பதிகத்தின் முடிவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆழ்வார்களின் ஞான சந்ததியில் தோன்றியவள் பரமனையே பதியாக அடைந்த ஆண்டாள். இவர் அருளியது "நாச்சியார் திருமொழி" இதில் 6-வதாக உள்ளது. "வாரணமாயிரம்". இதை தினம் பக்தியுடன் கன்னிப் பெண்கள் பாடி வந்தால் சீக்கிரமே திருமணமாவது நிச்சயம்.]

வாரணமாயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்,
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ நான். 1

நாளை வதுவை மணமென்று நாளிட்டு,
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்,
கோளரி மாதவன் கோவிந்த னென்பான், ஓர்
காளைபுகுதக் கனாக்கண்டேன் தோழீ நான். 2

இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்,
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து,
மந்திரக் கோடியு டுத்தி மணமாலை,
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ நான். 3

நாற்றிசைத் தீர்த்தங்கொணர்ந்து நனி நல்கி,
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி,
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னை,
காப்புநாண் கட்டக் கனாக் கண்டேன் தோழீ நான். 4

கதிரொளி தீபம் கலச முடனேந்தி
சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள,
மதுரையார் மன்னனடி நிலை தொட்டு எங்கும்
அதிரப்புகுதக் கனாக் கண்டேன் தோழீ நான். 5

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத,
முத்துடைத் தாமநிரை தாழ்ந்த பந்தற்கீழ்,
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான். 6

வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து,
காய்சின மாகளி றன்னா னென் கைபற்றி,
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ நான். 7

இம்மைக்கு மேலேழ் பிறவிக்கும் பற்றாவான்,
நம்மை யுடையவன் நாராயணன் நம்பி,
செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ நான். 8

வரிசிலை வாள்முகத் தென்னை மார்தாம் வந்திட்டு,
எரிமுகம் பார்த்தென்னைமுன்னே நிறுத்தி
அரிமுக னச்சுதன் கைம்மேலென் கைவைத்து,
பொரி முகந் தட்டக் கனாக் கண்டேன் தோழீ நான். 9

குங்கும மப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து,
மங்கல வீதிவலம் செய்து மணநீர்,
அங்கவ னோடுமுடன் சென்றங் கானைமேல்,
மஞ்சன மாட்டக் கனாக் கண்டேன் தோழீ நான். 10

ஆயனுக் காகத்தான் கண்ட கனாவினை,
வேயர்புகழ் வில்லி புத்தூர்கோன் கோதை சொல்,
தூயதமிழ் மாலை ஈரைந்தும் வல்லவர்,
வாயுநன் மக்களை பெற்று மகிழ்வரே. 11

காத்யாயனீ விரதம்

[கோபிகள் கிருஷ்ணனை பதியாக அடைய விரும்பி இந்த நோன்பை நோற்றனர். காத்யாயன மகரிஷியால் உபதேசிக்கப் பட்டதால் இப்பெயர் ஏற்பட்டது.]

தியானம்

ஸுப்ரஸன்னாம் ஸுவனாம் சாரு நேத்ர திவயான்விதம்
ஹார நூபுர கேயுர ஜடாமகுட மண்டிதாம்
விசித்திர பட்ட வஸனாம் அர்த்த சந்திர விபூஷிதாம்
கட்க கேடக வஜ்ராங்ணி சூலம்ச விசிகம் ததா
தாரயந்தீம் தனு பாசம் சங்க கண்டே சரோருஹம்
பாஹுபிர் லளிதைர் தேவீம் கோடி சந்திர ஸமப்பிரபாம்
கோபீப்ரிய நமஸ்துப்யம் கோபாலக வ்சஜேச்வர
கோபீவஸ் ராபஹரண கோபால நிஷேதா

(நமஸ்காரம்)

மாத: காத்யாயனி நம: நந்தகோப குமாரகே
கம்ஸ வீர்யஹரே கிருஷ்ண வீர்யே விந்தியாத்ரி வாஸினி

(நமஸ்காரம்)

மாலவீ ஸஹதேவாச ... ஸுநந்தினி
பத்மா விசாலா கோதா ... ஸ்ரீ தேவி தேவ மாலவீ
ச்யாமா ஸுபேசா சாலாங்க மாலவீ ம... தா அம்ருதா
(நமஸ்காரம்)

கன்றுடன் கூடிய பசுவுக்கு புல்லைக் கொடுத்து பிரதக்ஷிண நமஸ்காரம் செய்யவும். மாதம் பூராவும் செய்து கடையில் பிராம்மண போஜனம் செய்விக்கவும். வெண்ணெய் கலந்த நைவேத்யமே நல்லது.

* * *

ஜநகஸ்ய வச: விச்ருத்வா பாணீன் பாணீபி: அஸ்ப்ருசன்
சத்வாரஸ்தே சதஸ்ருணும் விஸிஷ்டஸ்ய மதேஸ்திதா ||

ஜனகருடைய வார்த்தையைக் கேட்டு ராமன் முதலிய நான்கு பேர்களும் சீதை முதலிய நால்வருடையக் கையைப் பிடித்தார்கள்.

கன்னிகைகள் ராம பூஜை செய்து இதை 108 தரம் ஜபித்தால் சீக்கிரம் விவாஹம் கைகூடும். ராமாயண பால காண்டம் 73-வது சர்க்கம் முழுவதும் முடிந்தால் பாராயணம் செய்வது நல்லது.

ஸ்ரீ நிகமானந்த மகா தேசிகனின் பின் கண்ட சுலோகத்தையும் 108 தரம் 45 நாள் ஜபிக்க நிச்சய பலன் கிடைக்கும்.

சுபப் பிரணுதா பவதி ஸ்ருதிஜும்
கண்டேஷு வைகுண்ட பதிம் வராணும் |
பத்தனுவி நூனம் மணிபாத ரக்ஷே
மங்கல்ய சூத்திரம் மணி ரஸ்மிஜாலை: ||

சீக்கிரமே விவாகப் பிராப்தி ரஸ்து

சுபம்.